Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லை வழுத்தி

டாக்டர்
நா. ஆறுமுகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லை வாழ்கை

FORWARDED FREE OF COST; AND WITH
THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF
EDUCATION; GOVERNMENT OF INDIA, NEWDELHI

7962

DONATION

டாக்டர் நா. ஆறுமுகம்
தமிழ் இணைப் பேராசிரியர்
புதுவைப் பல்கலைக் கழகம், புதுவை

கன்னி பதிப்பகம்
19, முனிசாமி அவின்யூ
காஞ்சிபுரம் - 631 501

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

1.	Title of the book	:	MULLAI VAZHAI
2.	Author	:	N. ARUMUGAM
3.	Date and place of birth	:	15-6-1934 KANCHIPURAM
4.	Language	:	TAMIL
5.	Edition	:	FIRST
6.	Price	:	Rs. 16-00
7.	Date of publication	:	16-10-89 Fourth Anniversary of Pondicherry University
8.	Copy right	:	AUTHOR
9.	Paper used	:	11-6 Kg D/Cr. White printing
10.	Size of the book	:	18·5×12·5 Cms
11.	No of pages	:	144+8
12.	No of copies	:	1000
13.	Binding	:	CARD BOARD
14.	Printer	:	Sri Parameswari Press Madars-4
15.	Subject	:	Literary Criticism

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படையல்

ஈரோட்டு மண்ணில்
அன்பாலும் பாசத்தாலும்
அரவணைத்த முதிய இளைஞர்
ஈரோடு கலைக் கல்லூரித் தலைவர்
திருமிகு RAN முத்துசாமி முதலியார்
அவர்களுக்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு : 16-10-89
புதுவைப் பல்கலைக் கழக
நான்காம் ஆண்டு நிறைவு விழா

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை
சென்னை - 600 108

ஆசிரியரின் பிற நூல்கள்

மொழிகாப்பீர்
திரு நாராயண குரு
கலித்தொகை— ஓர் ஆழ்வாய்வு
மனோன்மணீயம்— உரைவிளக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

டாகடர் கி. வேங்கடசுப்பிரமணியன்
துணை வேந்தர், புதுவைப் பல்கலைக் கழகம்

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியை உணர்த்தும் சங்க இலக்கியங்கள் அகழ அகழ அரும் பொருள்களை அள்ளி வழங்கும் கருத்துக் கருவூலங்கள்.

நானில அமைப்பில், ஐந்திணை ஒழுக்கத்தைப் பற்றி விளக்கமாகக் கூறும் டாக்டர் ஆறுமுகம், இந்நூலில் முல்லை நிலம் மற்றும் திணையின் வாழ்க்கை முறைமை களை மணக்க மணக்க எழுதியுள்ளார்கள்.

வரலாற்று வளர்ச்சிப் போக்கில், முல்லை நில மக்களின் நாகரிக நிலை சிறப்பாகப் போற்றப்படுகின்றது. நாடோடிகளாகத் திரிந்த மக்கள் ஒரே இடத்தில் தங்கி வாழ்க்கை நடத்தியது முல்லை நிலத்தில்தான். கற்பு நெறி வாழ்க்கை முறையும் இங்கேதான் தொடங்கியது. வினை குறித்து வெளியில் பிரிந்து சென்ற கணவன், கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வரும்வரை பொறுத்துக் கொண்டிரு என்னும் கருத்தினை உரைப்பது முல்லைத் திணை. இவ்விரு நிலைகளையும், ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நூல்களி லிருந்து இனிய காட்சிகளை எழுத்தோவியமாகத் தீட்டி வழங்கியுள்ளார் ஆசிரியர்.

தமிழ்கூறு நல்லுலகம் முல்லை வாழ்க்கையை முகர்ந்து நுகர்ந்து முனைப்புடன் செயல்படும்; நல்லறமாம் இல்லறத்தைப் போற்றும் என்பது திண்ணம்.

ஆசிரியருக்கு என் நல்வாழ்த்துகள்.

புதுவை
26-9-89

கி. வேங்கடசுப்பிரமணியன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்த்துரை

புரவலர் ந. கோவிந்தசாமி

சிறப்புத் தலைவர், புதுவைத் தமிழ்ச் சங்கம்

பழந்தமிழகத்தில் முல்லை நிலத்தார் காட்டைச் சார்ந்த பகுதியில் பயிரிட்டு அதில் கிடைத்த பொருள்களையும் பால், தயிர், நெய் போன்றவைகளையும் உணவாகக் கொண்டு வாழ்ந்தனர். அந்த முல்லைநில வாழ்க்கையை டாக்டர் நா. ஆறுமுகம் அவர்கள் அரிதின் முயன்று ஆராய்ந்து இந்நூலில் சிறப்பாக விளக்குகிறார்.

துன்பம் இல்லாத இனிய எளிய கற்பு நிலவிய இல்வாழ்க்கை அமைப்பினை நுட்பமாக உணர்த்துகிறார்.

○ ஆணும் பெண்ணுமாய்ப் புணரும் நிலையிலுள்ள மானினங்களின் பிரிவுக்கு அஞ்சித் தேரினை மெல்லச் செலுத்துமாறு கூறும் கணவன்!

○ தம் துணையோடு தேன் உண்ணும் வண்டுகள் தன் தேரின் மணியோசை கேட்டுப் பிரிந்து வருந்துமோ என அஞ்சித் தேர் மணிகளின் நாவை ஒலியாமல் இழுத்துக் கட்டும் காதலன்!

○ வினைமேற் சென்ற கணவன் தன்னை நினைந்து வினையை முடிக்காமல் திரும்பி விடுவாரோ என்று அஞ்சி, அவ்வாறு திரும்பக் கூடாது என்று கூறும் மனைவி!

இவ்வாறு மிக உயர்ந்த பண்பாட்டினைக் கொண்ட முல்லை வாழ்க்கையைச் சங்க இலக்கியங்கள் வழித் தனித்தனியே அழகுற எடுத்துக்காட்டும் சிறப்பு நூலுக்கு எழிலூட்டுகிறது!

ஆசிரியர் எழுதிய 'மொழி காப்பீர்', 'கலித்தொகை—ஓர் ஆழ்வாய்வு' நூல் வரிசையிலே முல்லை வாழ்க்கையும் தமிழ் உலகத்துக்குக் கிடைத்த நல்ல கருவூலமாகும்.

கல்வி கேள்வி ஒழுக்கங்களில் மேம்பட்டு விளங்கும் டாக்டர் நா. ஆறுமுகம் அவர்கள் மேலும் அரிய சங்க இலக்கியங்களை ஆழ்வாய்வு செய்து வெளியிட வேண்டுகின்றேன்.

டாக்டர் நா. ஆறுமுகம் அவர்களின் இலக்கியப் பணி மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

26-9-89 ந. கோவிந்தசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

மனம் உள்ளவனே மனிதன். மனிதனுடைய குற்றங் களுக்கும் குறைகளுக்கும் காரணம் மனம் பண்படாமையே யாகும்.

சிந்தனையை வளர்க்கும் நூல்களை அறிவு நூல்கள் என்றும் உள்ளத்தைப் பண்படுத்தும் இலக்கியங்களை ஆற்றல் நூல்கள் என்றும் கூறுவர்.

'எந்தன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்னும் மகாகவி பாரதியாரின் அமுதமொழி இக்கருத்தினை வலியுறுத்தும்.

இலக்கியச் செய்திகள் மனித உணர்ச்சிகளைப் பண்படுத்தும். உணர்ச்சிகள் பண்பட்டால்தான் அறிவு நன்னெறியில் செல்லும். நல்லறிவாலேயே நற்செயல்கள் நிகழும்!

அந்தக் கருத்தின் வழி முல்லை வாழ்க்கை கற்போரின் மனத்தை வளப்படுத்திப் பண்படுத்தும்— பண்படுத்த வேண்டும்— என்னும் நோக்கத்தோடு படைக்கப் பட்டுள்ளது.

அணிந்துரை நல்கி வாழ்த்தியருளிய நன்மனச் செல்வர் புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கட்கு, நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

வாழ்த்துரை வழங்கிய புரவலர் ந. கோவிந்தசாமி முதலியார் அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

நூலை வெளிக் கொணர்ந்தேயாக வேண்டும் என்று 'கிடுக்கிப் பிடி' தந்து நெருக்கிய— நெகிழ்த்திய தமிழியல் துறைத் தலைவர் டாக்டர் க. ப. அறவாணன் அவர்கட்கும்,

வண்ணப் பொலிவான மேலட்டைப் பொறுப்பு முழுதினையும் ஏற்று உதவிய டாக்டர் அ. அறிவுநம்பி அவர்கட்கும் உளமார்ந்த நன்றி.

நூல் அச்சாகுங் காலத்து மெய்ப்புகளைப் பார்த்துச் செம்மைப்படுத்திய புதுவைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர் (புறநிலை) திரு. சேயோன் அவர்கட்கும்,

குறுகிய காலத்தில் நிறைவாக அச்சிட்டுத் தந்த சென்னை, திரு. P. மணி அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா. ஆறுமுகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

1. முல்லை வாழ்க்கை ... 1
2. ஐங்குறுநூறு ... 32
3. குறுந்தொகை ... 52
4. நற்றிணை ... 72
5. அகநானூறு ... 91
6. கலித்தொகை ... 111
7. முல்லைப்பாட்டு ... 133
8. நெடுநல்வாடை ... 137

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1

முல்லை வாழ்க்கை

கதிரவனிலிருந்து முதன்முதலில் தெரித்து வீழ்ந்த ஒரு நெருப்புக் கோளமே நிலவுலகம் என்பர் ஆராய்ச்சி யாளர். கீழே சிதறி வீழ்ந்த அந்த நெருப்புக் கோளம் சுழற்சி வேகத்தில் நாளடைவில் குளிர்ந்து மேற்பகுதி இறுகிப் பாறையாகியது. காலப் போக்கில் அந்தப் பாறை உடைந்து கற்களாகி, கற்கள் உடைந்து நொறுங்கி மணலாகி, மணல் பொடியாகி மண் தோன்றியது. கல் தோன்றிய பின்னரே மண் தோன்றியது என்னும் இந்த அறிவியல் உண்மையைக் ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே'' என்னும் புறப்பொருள் வெண்பா மாலை அடியால் அறியலாம்.

கல்லும் மண்ணும் கலந்து தோன்றிய நிலங்களில் காடுகள் தோன்றி வளர்ந்தன. மலைகளின் மேல் பொழிந்த மழைநீர்ப் பெருக்காகிய வெள்ளம் அருவி களாகக் கீழே வீழ்ந்து ஆறுகளாகப் பெருகி வாய்க்கால் களாகப் பிரிந்து ஓடின. அவை தாம் ஓடிய வழிகளிலிருந்த வயல்களைச் செழிக்கச் செய்து முற்கூறிய நெருப்புக் கோளப் பகுதி இறுகிக் குளிர்ந்த போது உண்டான பள்ளங்களில் (கடலில்) தங்கியிருந்த நீரோடு சென்று கலந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு முதலில் தோன்றிய மலை (பாறை), அடுத்து அம்மலையைச் சார்ந்து அமைந்த மண்பகுதியில் தோன்றிய காடு, மலையிலிருந்து தோன்றிய ஆறுகளின் வாய்க்கால்களால் வளம் பெற்ற வயல், ஆறுகளின் முடிவிற் சென்று கலந்த கடல் என்னும் இயற்கைத் தன்மைகளை அடிப்படையாக வைத்தே பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நிலப்பாகுபாடுகள் செய்தனர் என்பர்.

மலையும் காடும் வெப்பத்தால் தம் இயல்பு அழிந்து மயங்கும் போது பாலையாகும். எனவே இதனைத் தனி நிலமாகக் கருதாது நிலம் நானிலமாகவே கொள்ளப் பட்டது.

மாயோன் மேய காடுறை உலகமுஞ்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

(தொல். அகத். 5)

உலகத்தே முதலில் மரஞ்செடி, கொடிகள் அடர்ந்த மலையிடத்துத் தோன்றிய மக்கள், எதிர்ப்பட்ட விலங்கு களை வேட்டையாடிக் கொன்றுண்டு வாழ்க்கை நடத்தி னார்கள். பின் காலப்போக்கில் காட்டு நிலத்தே வந்து தங்கித் தினை, வரகு முதலியன விதைத்துப் பயிர் செய்து பயன் கொண்டு, மேம்பட்ட உழவுத் தொழிலைச் செய்து வந்தார்கள். பின் பல்வகைத் தொழிலும் பெருக்கிக் கடற்கரை நிலத்தே பட்டினம் அமைத்துக் கடல் கடந்து கலத்தின் மூலம் சென்று வாணிகம் செய்தார்கள் என்பது வரலாற்றுண்மையன்றோ?

''ஐவகை நிலப்பிரிவுகள் மனிதன் தோற்றத்தையும் மனித இனத்தின் பண்பாட்டு வளர்ச்சியினையும் அறிய உதவுகின்றன'' என்பார் தனிநாயக அடிகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிக்கோளும் குறிக்கோளை நிறைவேற்றுகின்ற முயற்சியுமாகிய மனித வாழ்க்கை, மனிதன் தோன்றுகின்ற நிலத்தையும் காலத்தையும் பொறுத்தே அமைகின்றது. அஃதாவது இயற்கையின் சுற்றுப்புறச் சூழல்களைப் பொறுத்தே அமைகின்றது.

அழுது தாய்ப்பாலைக் குடித்து நடை பழகிச் சோறுண்டு வளரும் 'குழந்தை மனிதன்' பிற்காலத்தில் மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தில், தேனும் தினையும் பெறுகிறான்; காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை நிலத்தில், பாலும் தயிரும் உண்கிறான்; வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நிலத்தில், வெண்ணெல்லும் செங்கரும்பும் பெறுகிறான்; கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தலில், உலர்ந்த உப்பும் புலர்ந்த மீனும் சுவைக்கிறான். முல்லையும் குறிஞ்சியும் வளம் குறையும் போது தோன்றும் பாலையில், பிறரிடம் பறித்து பொருளைப் பெறுகிறான். இவைகளைப் பெறுவதே குறிக்கோளாகின்றது. ஆக வாழ்க்கையும் குறிக்கோளும் இயற்கையில் அமையும் சுற்றுச் சூழல்களைப் பொறுத்தே அமைகின்றன எனலாம்.

வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் இடையே அமைந் துள்ள இத்தொடர்பினைத் தெளிவாக உணர்ந்தவர்கள் பழந்தமிழ்ச் சான்றோர் ஆவர். தமிழ் மொழியும் பழந்தமிழ் இலக்கணமும், இலக்கியமும் இதனை நன்றாக எடுத்துக்காட்டும்.

''சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் பழைய மரபுகள் பல உண்டு. காதல் பற்றிய கற்பனையை அகம் என்றும், வீரம் கொடை புகழ் முதலிய வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் பகுத்த பாகுபாடு அந்த மரபுகளுள் முதன்மையானது ஆகும்'' [மு. வ. த. இ. வரலாறு—பக். 27]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகப்பாடல்களில் வரும் அன்பின் ஐந்திணை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என விரிந்து முறையே புணர்ச்சி, இருத்தல், பிரிவு, ஊடல், இரங்கல் என்னும் ஒழுக்கத்தை உணர்த்தும்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே
[தொல். அகத். 14]

நானிலமும் ஐந்திணையும்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று நிலம் நான்கு வகையாகப் பகுக்கப்பட்டு நானிலம் என வழங்கும் மரபும் உண்டு.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம். 187)

என்னும் புறநானூற்றுப் பாடலில் வரும் நாடு என்பது மருதத்தையும், காடு என்பது முல்லையையும், அவல் (பள்ளம்) என்பது நெய்தலையும், மிசை (மேடு) என்பது குறிஞ்சியையும் குறித்து நிற்க, நானில அடிப்படையில் அறங் கூறுகின்றார் ஔவையார் என்பர்.[1]

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி (151)
முல்லை சான்ற முல்லையம் புறவு (169)
மருதம் சான்ற மருதத் தண்பணை (186)
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணி (267)

என்னும் சிறுபாணாற்றுப்படையில் வரும் தொடர்களும்,

---

1. தமிழ்க் காதல், பக். 170

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
தொடுப்பேர் உழவர் ஓதைப் பாணியும்
கோவலர் ஊதும் குழலின் பாணியும்
அஞ்சொற் கிளவியர் அந்தீம் பாணியும்

என்னும் சிலப்பதிகாரத் தொடர்களும் (நீர்ப்படைக் காதை. 224, 230, 241, 250) நானில வழக்கை வலியுறுத்துகின்றன.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய இத்நிலங்களில் வாழ்வோரின் வாழ்வு பற்றி அமையும் இலக்கியங்கள் இந்நிலங்களின் பெயராலும் வழங்குவது உண்டு. சான்று: முல்லைக் கலி. முல்லை நிலத்தில் வாழும் ஆயர்களின் வாழ்க்கை முறைகளைக் கூறுவது. 'இருத்தலா'கிய முல்லை ஒழுக்கத்தைக் கூறுவதில்லை.

குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐவகை நிலங்களின் உரிப்பொருள்களான கூடல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஒழுக்கங்களைப் பற்றி அமையும் இலக்கியங்கள் திணையின் பெயரால் பெயர் பெறும்.

சான்று: குறிஞ்சிப் பாட்டு, முல்லைப் பாட்டு, பாலைக்கலி, நெற்தற் கலி.

அகப்பொருள் காதலின் மனநிலையையும் வாழ்வையும் ஒட்டி ஐவகையாகப் பகுக்கப்பட்டு அகனைந்திணை எனப்பட்டது. இதில் நிலத்தின் பெயராலும் திணையின் பெயராலும் அமைந்த முல்லைப் பாடல்கள் காட்டும் முல்லை வாழ்க்கையின் சிறப்பினைக் காண்போம்.

''மனிதன் நாகரிகம் பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகும். காடும், காடும் சேர்ந்த பகுதியும் முல்லை நிலம் என்று கூறப்படும். மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதன்முதலில் முல்லை நிலத்திலாகும். அதனால்தான் முல்லை நிலத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசுக்களை மேய்ப்பதற்கு உதவும் கருவியாகிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்கு அறிகுறியாக அமைந்தது. அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் வணங்கும் கோலாக நின்றது'' [2]

''பன்னெடுங்காலம் மலைவாணராயிருந்த தமிழ் மக்கள் தங்களுக்குச சிறந்த உணவாகப் பருகத் தேனைப் பெருகத் தரும் குறிஞ்சித் தருக்களை அம்மலை மிகுதியாகக் கொண்டிருந்தமை பற்றித் தாங்கள் வாழ்ந்த அவ்விடத்தைக் குறிஞ்சி எனப் பெயரிட்டழைத்தனர்.

பின்னர் மலை சார்ந்து நிலம் படிப்படியே தோன்ற மலைவாணருட் சிலர் அந்நிலப் பகுதியினும் குடியேறுவாராயினர். அந்நிலம் அம்மலையின் புறம்பாக இருந்தமையால் புறவு எனவும், அதனுள் நறுமலர் முல்லைச் செடிகள் செழித்து வளர்ந்தமையின் முல்லையெனவும் அந்நிலப் பகுதியைப் பெயரிட்டு அழைத்தனர்.

அவர்கள் மலைகளிலிருந்து தாம் கொணர்ந்த ஆனிரை முதலியவற்றை வளர்த்துப் பேணி அவற்றின் பயன் கொண்டு வாழ்க்கை புரியலாயினர். இதுவரை மலையில் காய் கனி கிழங்கு முதலியவற்றையே உண்ட இவர்கள், பின்னர் முல்லை நிலத்தில் உழுது பயிரிட்டு உணவினை விளைத்து உண்டு வாழவும் அறிந்தனர். இந்நிலத்து வாழ்ந்த இம்மக்கள் தங்கள் ஆனிரைகளைப் பிறவுயிர்களால் தீங்கு வராமல் அரணமைத்துக் காக்கும் தொழில் புரிந்து வந்த பயிற்சி வயத்தால் மக்களுள் தலைமை பூண்டு அவர்களைக் காக்குந் தொழிலும் கைவரப் பெற்றனர்.

பின்னர் ஒருசிலர் அம்முல்லையம் புறவினை அடுத்து, நிலத்தினை அகழ்ந்து நீர் நிற்றற்கு இடம் செய்து வரம்பு

---

2. முல்லைத்திணை, பக். 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோலிச் செந்நெல்லும் கன்னலுமான விளைவுகளை விளைத்து உண்டு திளைத்தனர். இந்நிலத்தில் மருதம் என்னும் ஒருவகை மரம் வானுற ஓங்கி வளர்ந்தமையால் அம்மரத்தின் பெயரால் இந்நிலம் மருதம் எனப்பட்டது.

பின்னர் ஒருசிலர் கடல் அருகிலுஞ் சென்று அங்குள்ள பெருமணல் உலகிலும் வைகி வாழலாயினர். இப்பகுதியில் கழிக்கரையிடத்து நெய்தல் என்னும் செடி செழித்து வளர்ந்திருந்தமையால் இந்நிலப் பகுதியை நெய்தல் எனக் கூறினர். இந்நிலத்து வாழ்ந்த மாந்தர் உழா உழவினராய் உப்பு விளைத்தும், மீன் பிடித்தும் மரக்கலம் உய்த்தும் தம் வாழ்க்கையை நடத்தினர்.

மேற்குறித்த இந்நால்வகை நிலங்களுள் முல்லை, குறிஞ்சி என்னும் நிலங்களின் இடையே வளம் குன்றிய நிலப்பகுதியும் உளவாயின. இதனுள் பாலையென்னும் மரமொன்று வளர்ந்தமையால் இது பாலை எனப்பட்டது. இதில் வாழும் மக்கள் வில்லும் அம்பும் கருவியாகக் கொண்டு வேட்டமாடி விலங்கு ஊன் மிசைத்து வாழ்ந்தனர்'' என்று ஐந்திணையின் அமைப்பும் வளர்ச்சிப் போக்கும் குறித்துப் பேராசிரியர் ஆர். கார்மேகக் கோனார்[3] கூறுவது சிந்தனையைக் கவருவதாய் உள்ளது.

மனிதனுக்குச் சமூகம் அவசியமாகிறது. அவனுடைய உடல், உளம் சார்ந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், இயல்பான மனித நிலை, மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, உணர்ச்சிப் பக்குவம் ஆகியவைகளைப் பெற்று ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும் பொதுவான பாதுகாப்பைப் பெறவும் சமூகம் அவசியமாகிறது.

சமூகம் என்ற அமைப்புச் சிறிய அளவில் உருவான காலத்து, ஒரு சிலர் ஒரு சிலரோடு சேர்ந்து வாழும்

---

3. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 16

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போக்கு மெல்லத் தோன்றியது. விரும்பியவர்கள் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தனர். இந்தச் சேர்க்கை வாழ்க்கை ஓர் அமைப்பாக உருவாகும் வரை திருமணம் என்ற இன்றியமையாத சமூக அமைப்பு உருவாகவில்லை. ஆகவே இல்லிருத்தலை இலக்கணமாகக் கொண்ட முல்லை வாழ்க்கைக்கு மற்றத் திணை வாழ்க்கைகளுக்கு இல்லாத சிறப்புகளும் பெருமையும் உண்டு எனலாம்.

வரலாற்று வளர்ச்சிப் போக்கில் முல்லை நில மக்களின் நாகரிக நிலை சிறப்பாகப் போற்றப்படுகிறது.

''தமிழ் மக்களுடைய நாகரிக வளர்ச்சியில் இம் முல்லை நிலமும் அந்நில வாழ்க்கையும் ஒரு சிறந்த நிலையை அடைந்துள்ளதோடு மருத நில வாழ்க்கைக்கு அஃது அடிப்படையாயும் அமைந்துள்ளது. வேட்டையாடி உணவுண்டு மலைகளில் திரிந்த மக்கள், ஆங்குக் கிடைக்கும் உணவுப் பொருள்கள் போதாமல் மலைகளினின்றும் காடுகளில் சென்று வாழத் தொடங்கி இருக்கலாம். ஆடு, மாடு, எருமை முதலிய காட்டு விலங்குகளைப் பழக்கி, அவற்றை வளர்த்து அவை அளிக்கும் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றையும் ஆடு மாடுகளையும் விற்று, ஒவ்வோர் இடையரும் சொத்துடையவராயினர். திருமணங்களும் கற்பு முறையில் நடக்கத் தொடங்கின. மாலைகளாலும் தழைகளாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தரின் கீழ் ஆண்களும் பெண்களும் ஆகிய சுற்றத்தினர் கூடி விருந்துண்ட பின், மக்களை ஈன்ற தாலி தரித்த நான்கு பெண்கள் மணமகளை முழுக் காட்டிப் புத்தாடை புனைவித்து, அணிகலன்கள் அணிவித்து மணமகனுக்கு அளிப்பர். எண்ணிக்கையற்ற ஆடு மாடுகளை வைத்திருக்கும் குடும்பத்தவர்களின் தந்தை செல்வத்தால் அடையக்கூடிய எல்லா முதன்மைகளையும் பெற்றான். பல குடும்பங்களுக்கு அவன் தலைவனானான். கோன் (கோனார்) என்னும் இடையரைக் குறிக்கும் சொல்லே அரசனையும் குறிப்பதனால், ஒரு நாட்டிற்குத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவனாயிருக்கும் அரசனின் தலைமை முல்லை நிலத் தலைவனினின்றே தோன்றியிருக்கலாம் என்பர் ஆராய்ச்சி யாளர். மந்தைகளை மேய்க்கும் இடையனது கோலே, அரசியலைக் குறிக்கும் பிற்றை நாட் செங்கோலாகியிருக் கலாம். இவ் இடையர்கள் குறிஞ்சி நில மக்கள் போல் நாடோடிகளாயில்லாமல் ஒரே இடத்தில் தங்கி, வாழ்க்கையை நடத்தினவர்களாதலின், நாகரிகம் வளர லாயிற்று.'' [4]

நாகரிகத்தின் தொடக்கமாகிய அக் காலத்தில் முல்லைத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. அது பற்றியே மாடு என்னும் சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டாயிற்று.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை (திருக். 400)

மக்கள் சமூகமாய்க் கூடி ஆட்சிமுறை அமைத்துச் செல்வம் சேர்த்த நாகரிகம் முல்லை நிலத்தில் தோன்றியது என்பார் மு. வ. [5]

கனியையும் காயையும் உண்டு இலைகளையும் தழைகளையும் ஆடையாக உடுத்து, காட்டிலும் மலை மேட்டிலும் அலைந்து திரிந்து கொண்டிருந்த ''விலங்கு வாழ்க்கை''யிலிருந்து விடுபட்டு முதிர்ந்து இணைந்து சமூகமாக வாழ மனிதன் கற்கத் தொடங்கிய காலத்தில், முல்லை நிலத்தில் ''அரசாங்கத்தின்'' அடிப்படை உணர்வு களும் தேவைகளும் தோன்றிப் பெருகத் தொடங்கின. ஆகவேதான் எல்லோருடைய நன்மைக்கான எல்லா ருடைய விருப்பத்தையும் ஒப்புதலையும் அரசாங்கத்தின் அடிப்படைகள் என்று அரசியல் ஞானி ரூசோ தன்னுடைய

---

4. அகநானூற்றுச் சொற்பொழிவுகள், பக். 91
5. முல்லைத் திணை, பக். 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒப்பற்ற நூலான ''சமுதாய ஒப்பந்தத்தில்'' ஆணித்தர மாகக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் மேதையான உட்ரோ வில்சனும், பெரும்பான்மையான மக்களின் பெரும் பான்மையான நன்மைகளை முன்னிட்டு ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டுக் கூடி வாழும் மக்கட் சமூகத்தையே— கூட்டத்தையே— அரசாங்கம் என்கிறார்.

''மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நிலப்பகுதி முல்லை நிலமே ஆகும். குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதியில் மனிதன் இயற்கையை எதிர்த்து வென்று வயிறு வளர்க்க வேண்டும். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தில் மனிதன் இயற்கையை எதிர்பார்த்து நிற்காமல் உழைத்துப் பாடுபட்டு வயிறு வளர்க்க வேண்டும். கடற் பகுதியாகிய நெய்தல் நிலத்தில் வாழும் மனிதன் மற்ற நிலப்பகுதிகளின் உதவியை எதிர்ப்பார்த்து வாழ வேண்டும். முல்லை நிலத்தில் இயற்கையை எதிர்பார்த்து நம்பி வாழ வேண்டும். அங்கு வாழ்க்கையை துன்பமாகத் தோன்றாமல் பொழுது போக்காகத் தோன்றக் கூடிய வகையில் இயற்கை மனிதனுக்குத் துணை செய்கிறது. ஆதலின் கவலை குறைந்த இனிய எளிய வாழ்க்கை முல்லை நிலத்தில் அமைந்திருக்கின்றது.'' என்று முல்லை நிலத்தின் இயற்கைச் குழல் அமைப்பைச் சிறப்பித்துக் கூறுவார் டாக்டர் மு. வரதராசன் [6]

''முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தில் முல்லை முதற்கண் குறிக்கப் பெற்றுச் சிறப்புறுதல் போல இல்லிருத்தல் ஒழுக்கம், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல் ஊடல் என்னும் ஐந்திணை ஒழுக்கங்களுள் நடுவண் அமைந்து அவற்றிற்கு அச்சாணி போல உறுதுணையாய் விளங்கும் பேறுடையதாகும்.

---

6. முல்லைத் திணை பக். 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் குறிஞ்சியின் புணர்தல் ஒழுக்கம் காமம் மிக்க நிலையையும், மருதத்தின் ஊடல் ஒழுக்கம் இல்லறத்திற்கு ஏற்புடையதாகாப் பரத்தமை நிலையையும் நெய்தலின் இரங்கல் ஒழுக்கம் எல்லை மீறிய வழுத்த நிலையையும், பாலையின் பிரிவு ஒழுக்கம் பிரிவால் தவிக்கின்ற துன்ப நிலையையும் புலப்படுத்துவதைக் காண்கின்றோம். ஆனால் முல்லையின் இருத்தல் ஒழுக்கத்தால் ஏற்படும் பிரிவு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்குப் பெருந் துணையாய் அமைகிறது எனலாம்.'' என்று முல்லை ஒழுக் கத்தின் சிறப்பைப் போற்றுவர்.

''முல்லை நில வாழ்வுதான் மக்களின் சிறந்த வாழ்வுக்கு அடிப்படை என்று கூறலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்க்கை முறையும் இந்நில வாழ்விலே தான் தொடங்குகிறது. காட்டு விலங்குளுக்குப் பயிற்சி யளித்து அவற்றை வீட்டு விலங்குகளாக மாற்றினர். ஆடு, மாடுகளைத் தங்கள் செல்வங்களாகவே கருதி வளர்த்து வந்தனர். கலைகள் வளரலாயின. ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவன் ஆணைப்படி நடக் கவும் அறிந்திருந்தனர். முல்லை நிலமாகிய காட்டுப் பகுதியில் புன்செய்ப் பயிர்களை விதைத்துப் பயனடைந்து வாழ்ந்து வந்தனர்'' என்று முல்லை நிலத்தின் வாழ்க்கை முறைச் சிறப்பினைச் சிறப்பித்துக் கூறுவர்.

முல்லைத் திணையின் இருத்தல் ஒழுக்கத்தைக் குறித்துக் கருத்து வேறுபாடு கொள்வோரும் உண்டு.

''குறிஞ்சியில் புணர்ந்து மகிழ்ந்த தலைவன், தலைவியை மணஞ்செய்தல் வேண்டி வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலும் (பாலை), பிரிந்து வந்த தலைவன் தலைவியை மணந்து இல்லத்தில் மகிழ்ந் திருத்தலுமே (முல்லை) முறையாகும். சங்க அக இலக் கியத்தில் தலைவியுடன் இருந்த தலைவனே, போரின் பொருட்டுப் பிரிவு மேற்கொள்கிறான். எனவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவன் தலைவி சேர்ந்திருந்த முதல் நிலையை அல்லது வினைமுடித்த தலைவன் தலைவியுடன் சேர்ந்திருக்கும் நிலையையே முல்லையின் உரிப் பொருளாகக் கொள்ள வேண்டும்.''[7] என்றும்,

''முல்லைத் திணைப் பாக்களில் தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்ததாக அல்லது அமைதியாக இருந்ததாகச் சான்றுகள் இல்லை; மாறாகத் தலைவியின் ஆற்றாமையே பேசப்படுகிறது.

முல்லைப் பாட்டுக்கு உரையெழுதிய நச்சினார்க் கினியர் தலைவன் வருந்துணையும் தலைவி ஆற்றியிருந் தாள் எனக் கூறியதால் இக்காலத் திறனாய்வாளர்களும் தலைவியின் ஆற்றாமை நிலையைத் தெளிவாகக் கண்டும், ஆற்றாமை என்று கூறுவது ஆற்றியிருத்தலாக முடிவு கொண்டு தலைவியின் ஒழுக்கத்திற்கு இருக்தல் என விளக்கம் தந்தனர்'' என்றும் கூறுகிறார் அ. சீனிவாசன்[8]

சங்க இலக்கிய முல்லைத் திணைப் பாடல்களில் நாற்பது பாடல்கள், கார்காலம் வந்தவுடன் தலைவன் வரக் காணாத தலைவியின் ஆற்றாமையை வெளிப் படுத்துகின்றன என்றும் (பக். 273)

நாற்பத்தேழு பாடல்கள் தோழி கூற்றாக வருவன என்றும், தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையறிந்து தலைவிக்கு ஆற்றாமை மிகாவண்ணம் அவளை ஆற்றுவிக் கும் நிலையிலேயே தோழி படைக்கப்பட்டுள்ளாள் என்றும், (பக். 275)

தலைவியைப் பிரிந்து பாசறையில் இருக்கும் தலைவ னின் மனநிலையைப் பேயனார் ஒன்பது பாடல்களில் படைத்துள்ளார். அவையனைத்துமே தலைவியின் பிரிவை

---

7. வையை, மலர். 1, பக். 271
8. வையை, மலர். 1, பக். 269

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆற்றாது உள்ளத்து அளவில் புலம்பும் பாடல்களாயுள்ளன என்றும் (பக். 278)

அருந்திறல் முடித்த செம்மல் உள்ளமொடு தலைவன் தலைவியுடன் வாழும் வாழ்க்கையை இருபத்தொரு பாடல்கள் கூறுகின்றன என்றும் (பக். 280) அ. சீனிவாசன் தம் கூற்றுக்குச் சான்றுகள் காட்டுகிறார்.

மேலும், போருக்குச் சென்ற முல்லைநிலத் தலைவன் தலைவி ஆகிய இருவர்தம் வாழ்க்கையைத் தலைவியும் தலைவனும் இல்லத்தில் இருத்தல், தலைவியும் தலைவனும் பிரிந்து இருத்தல் அல்லது வினையாற்றியிருத்தல், தலைவியும் தலைவனும் ஆற்றாதிருத்தல் (கார்காலத் தொடக்கம்) வினைமுடித்த தலைவன், தலைவியுடன் மகிழ்ந்திருத்தல் (கார்காலம்) என்று நான்கு வகையாகப் பிரிக்கின்றார். பிரிக்கவே, 'காரும் மாலையும் முல்லைக்குரிய' என்னும் விதிப்படி முல்லைத்திணை மூன்று வகையான இருத்தல் ஒழுக்கத்தை விளக்குகின்றது. அவை:

1. தலைவி ஆற்றாதிருத்தல்
2. தலைவன் ஆற்றாதிருத்தல்
3. வினைமுடித்த தலைவன் தலைவியுடன் மகிழ்ந்து இருத்தல்.

''எனவே முல்லை ஒழுக்கமான இருத்தல் என்பது கார் காலத்தில் தலைவனும் தலைவியும் இல்லத்தில் இருந்து ஒருவர் மற்றொருவர் உணர்வுகளை மதித்து, மகிழ்ந்து வாழும் அகவொழுக்கம் ஆகும்'' என்று முடிவு கட்டுகிறார் (பக். 284)

''தலைவியைப் பிரிந்த தலைவன் எவ்வாறு வினை யாற்றினான் என்று கூறப்படாதது போன்று தலைவி எவ்வாறு வினையாற்றினாள் என்பதும் குறிக்கப்பட வில்லை. இது தேவையுமில்லை. ஏனெனில் இது புறவொழுக்கமாகக் கருதப்படும். மேலும் வினையாற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருத்தல் என்பது முல்லை— அதாவது கார்கால ஒழுக்கமன்று; கார்காலத்திற்கு முந்திய ஒழுக்கமாகும். தலைவன் தலைவியை நினைந்து பாசறையில் ஆற்றா திருத்தலே கார்கால ஒழுக்கமாகும்'' என்று விளக்கமும் தருகிறார். [9]

முல்லை நிலத்து ஊர்களில் வீரவிளையாட்டுகளில் ஈடுபட்டுப் பொழுது போக்கிய ஆயர்கள் நாட்டின் காரணமாகப் போர்க்களத்தில் வீரப்போர் புரிவதற்காகப் பெரும்பான்மையும், பொருள் தேடும் காரணமாக வெளி நாட்டுக்குச் செல்வதற்காகச் சிறுபான்மையும் தங்கள் தலைவியரைப் பிரிவதுண்டு. அவ்வாறு பிரியும் போது கார்காலத்திற்குள் திரும்பிவருவதாகக் கூறி விடை பெறுவர். கார்காலம் வரை பொறுத்திருப்பதாகத் தலைவியரும் விடைதருவர். ''இருவரும் இருவகைச் சொற்களால் கட்டுப்படுகின்றனர். குறித்த காலத்திற்குள் வருவதாகக் கூறித் தலைவன் கட்டுப்படுகின்றான். அது வரையில் ஆற்றியிருப்பதாகத் தலைவி கட்டுப்படுகிறாள். இருவரும் சொன்ன சொல் தவறாமல் தம்தம் கட்டுப் பாட்டுக்கு இயைந்து நடக்கின்றனர். இவ்வாறு சொல் தவறாமல்— சொல் திறம்பாமல்— நடத்தலே கற்பு என்னும் ஒழுக்கமாகும். இக்காரணத்தாலேயே முல்லை என்பது கற்பு என்னும் பொருளுடையதாயிற்று என்று இருத்தலுக்கு விளக்கம் அளிப்பார் டாக்டர் மு. வ [10]

'கற்பெனப்படுவது சொல் திறம்பாமை' என்னும் அவ்வையார் வாக்கு எண்ணுதற்குரியது.

முல்லை வாழ்க்கையில் ஆற்றாமை இல்லாமல் இல்லை; ஆற்றியிருத்தலும் இருக்கிறது என்று அருமை

---

9. அ. சீனிவாசன், முல்லை, பக். 10
10. முல்லைத் திணை, பக். 9

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யான விளக்கம் அளிக்கிறார் டாக்டர் S. தனிநாயக அடிகளார்.

'பாலை என்பது நீண்ட பிரிவின் குறியீடு; முல்லை என்பது மனத் துன்பத்தை அடக்கும் நற்பண்பு; நெய்தல் என்பது இரக்கத்திற்குரிய துன்ப வெளியீடு. இந்த மூன்று நிலங்களுக்கிடையில் வளர்ந்து வரும் பிரிவும், வளர்ந்து வரும் ஆபத்தும், வளர்ந்து வரும் துன்பப் புலம்பலும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்' என்கிறார் அவர்.

[The Palai Region were symbolic of long separation and while Mullai represents the heroines virtuous suppression of grief and 'neydal' the pitiful expression of grief. Between these three regional there is a progressive length of separation, progressive element of danger and consequents progressive sorrow''[11]

''ஊழ்வயத்தான் தலைமக்கள் ஒருவரையொருவர் கண்டு காதலித்துப் புணர்ந்து வாழ்வுழி வினைவயின் தலைவன் பிரிய நேருங்கால் ஒருவரையொருவர் உன்னி ஆற்றியிருத்தலும் அதன் நிமித்தங்களுமே முல்லைக்குரிய ஒழுக்கமாகும்'' என்கிறார் ஐங்குறுநூற்றின் முல்லைப் பாடல்களை ஆராய்ந்து கற்றுணர்ந்த வித்துவான் வீ. குமாரசாமி ஐயர். [12]

''இருத்தலாவது, தலைமகனும் சான்றோரும் கற்பிக்கும் நெறிக்கண்ணே நின்று, தலைமகள் தனக்குரிய நல்லறமாய இல்லறம் புரிந்து இல்லின் கண் வாழ்ந்திருத்தலாகும்.

இல்வாழ்க்கை செம்மை எய்துவது குறித்துத் தலைமகன், பொருள் கருதியும், வேறே செயற்குரிய வினை

---

11. S. Thaninayagam, Nature in Ancient Tamil Poetry, P. 102
12. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 220

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறித்தும், கல்வி குறித்தும் பிரிந்து ஏகுவது உண்டு. தலைமகளது நட்புக்கிழமை பூண்டு ஒழுகும் இடத்துக் களவுக்காலத்தில் தலைமகன் அவனை வரைந்து கொள்வது குறித்து, வரைவிடை வைத்துப் பொருள் நாடிப் பிரிதலும் செய்வன்.

பிரிவுக் காலங்களில் தலைமகன் கார்ப்பருவத்திலோ முன்பனிப் பருவத்திலோ வேறே தான் மேற்கொண்ட வினைமுடிவதற்குரிய காலத்தை நாடி அறிந்துரைக்கும் அக்காலத்திலோ ''வருவேன்'' எனக் கூறிபிரிவன்.

அவன் சொல்லிய பருவத்தை எதிர்நோக்கி, தலைமகளும், அவன் பிரிவால் உளதாகும் வருத்தத்தைத் தாங்கிக் கற்புக் கடன் பூண்டு இனிதிருப்பள்.

ஒரோர் சமயத்துத் தலைவி தலைவனை நினைந்து ஆற்றாது வருந்துமிடத்துத் தோழியர் முதலாயினார், அவள் ஆற்றத்தகுவன கூறி ஆற்றியிருக்குமாறு செய்வர்.

பிரிந்து சென்ற தலைமகனும் தலைமகளின் பிரிவாற்றாது, தான் பிரிந்தேகிய விடத்தே, அவளை நினைந்து வருந்துதலும் உண்டு. ஆயினும் தொடங்கிய வினை முடியாமுன் மீளுதல் தலைமைப் பண்பு அன்றாம். அதனால் அவன் அது முடியுங்காலும் பிரிவுத் துயரை ஆற்றியிருப்பன்.

இவ்வண்ணம், ஆற்றியிருத்தலே பொருளாகத் தலைமக்கள்பால் நிகழும் ஒழுக்க நிகழ்ச்சிகள், முல்லைத் திணைக்கு உரியவாய்ப் புலவர் பாடும் புகழ் பெறுகின்றன'' என்று குறுந்தொகையின் முல்லைப் பாடல் களை ஆய்ந்து அறிஞர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் கூறுவது எண்ணத்தக்கது.[13]

---

13. குறுந்தொகைச் சொற்பொழிவுகள், பக். 60

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே [14]

என்பது திணைக்குரிய உரிப்பொருளைக் கூறும் தொல்காப்பிய நூற்பா. இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லையாகும், என்பதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம்:

''தலைவி, பிரிவுணர்த்திய வழி பிரியார் என்று இருத்தலும், பிரிந்துழிக் குறித்த பருவம் அன்றெனத்தானே கூறுதலும், பருவம் வரும் துணையும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவனவும் போல்வன, இருத்தல்.

அப்பருவம் வருவதற்கு முன்னர் கூறுவன முல்லை சான்ற கற்பன்மையிற் பாலையாம். இனி, பருவங்கண்டு ஆற்றாது தோழி கூறுவனவும், பருவம் அன்றென்று வற்புறுத்தினவும், வருவர் என்று வற்புறுத்தினவும், தலைவன் பாசறைக்கண் இருந்து உரைத்தனவும், அவை போல்வனவும் நிமித்தமாகலின் இருத்தல் நிமித்தமாம்.''

நச்சினார்க்கினியர் தரும் உரை விளக்கத்தினை எடுத்துக்காட்டிப் பேராசிரியர் கோ. பாலசுந்தர நாயக்கர் முல்லையொழுக்கத்திற்கு மேலும் விளக்கம் தருவது சிறப்பிற்குரியது. நற்றிணையிலுள்ள முல்லைப் பாடல்களை ஆய்ந்த அவர் கூறும் விளக்கமாவது:

''களவின்கண் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைவனிடம், அவன் வருந்துணையும் தனிமை பொறுத்திருந்தமை கூறலும் முல்லையாகும்.

தலைவன், தலைவியை விட்டுப் பிரிதல், ஓதற்கும், நாடு காத்தற்கும், அறப்புறங் காத்தற்கும், தூதிற்கும் பொருளீட்டற்கும், வேந்தற்குத் துன்பம் உற்றுழி உதவுதற்கும் ஆகும்.

---

14. தொல்காப்பியம், அகத். 14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவியிடத்துத் தலைவன் தான் பிரிவினைக் கூறுங்கால் அவள் துன்புறுதலும் உண்டு. அங்ஙனம் துன்புறுங்கால் தலைவன் வலியுறுத்து அல்லது பிரியான். வலியுறுத்தல் என்பது,

''போழ்திடைப் படாமல் முயங்கியும் அதன் தலைத் தாழ்கதுப் பணிந்தும் முள்எயிற்று அமுதம் கள்ளினும் மகிழ் செய்தும்'' பிரிதல். அன்றியும், உலகத்துள்ளார் எல்லாரும் பிரிதற்குரியர்; பிரிந்த பின் ஆற்றியிருத்தற்கும் உரியர் என்று உலகியலைக் கூறியும், அவள் குணநலன் களைச் சிறப்பித்தும், தான் பிரியும் பொருட்கருத்தின் இன்றியமையாமையைக் கூறியும் பிரிவான்; தலைவியும் ஆற்றியிருப்பாள்.

ஒரோவழி தலைவியிடம் கூறாது தோழியிடம் கூறிப் பிரிவன். தோழி அப்பிரிவினைத் தலைவிக்கு உரைக்கும்.''[15]

தலைவன் வலியுறுத்துப் பிரிதல் குறித்து மேலும் சில காணலாம். தலைவன் தலைவியைக் கூடும்போது வழக்கத்திற்கும் மாறாக— மேலாகச் சில செயல்களைச் செய்வதுண்டு.

'முத்தாரம் புரளும் தலைவியின் இளையமுலைகளைச் சிறிது நேரமும் இடையீடின்றி இறுகத் தழுவியும், தலைவனுடைய ஆசை அடங்கவில்லை; தலைவியின் நீண்ட கூந்தலை அணி செய்தான்!

'தலைவியின் முள்ளின் முனை போன்ற கூர்மையான பற்களுக்கிடையில் ஊறும் வாயமுதத்தைக் 'கள்ளினும் இன்பம் தருவதாயிற்றே' என உரைத்து உண்டும் தலைவனுடைய ஆசை அடங்கவில்லை; தலைவியின் அணிகலன்களைத் திருத்தினான்!

---

15. நற்றிணைச் சொற்பொழிவுகள், பக். 133-34

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தலைவியின் அழகுத் தேமல் படர்ந்த மாமை நிறத்துடன் கூடிய மார்பை, நேருக்கு நேராக வைத்த கண் வாங்காதவனாய்ப் பார்த்துக் கொண்டே இருந்தும் தலைவனுடைய ஆசை அடங்கவில்லை; தலைவியின் ஒளி பொருந்திய நெற்றியைத் தடவினான்!''

வழக்கத்திற்கு மாறான— மேலான இத்தகைய தலைவனுடைய பேரன்பு காட்டும் செயல்களுக்கு உரிய காரணம் தெரியாமல் கலங்கினாள் தலைவி. அளவுக்கு மீறிய அன்பு ஏதோ ஒன்றிற்கு அறிகுறிதான். அது பிரிவாயிருக்குமோ?

பறித்துக் கொள்ளும் பொருள் ஒன்றும் கையில் வைத்திராவிட்டாலும், வழிப்போக்கர்களுடைய உடல் துள்ளுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைவதற்காக அவர்களை வீழ்த்தும் கடுங்கண் மறவர் அலைந்து திரியும் பாலை வழியில் பொருள் தேடிவருவதற்காக எண்ணுகிறான் தலைவன் என்பதைத் தலைவி உணர்ந்து விட்டாள். இதைத் தோழி தலைவனிடம் கூறிப் பொருளுக்காகச் செல்லும் பிரிவைத் தவிர்க்குமாறு அவனை வேண்டுகிறாள்.

பாலைக் கலியில் அருமையான இந்தப் பாடல் இடம் பெறுகிறது. இதில் வரும் தலைவனின் வழக்கத்திற்கு மாறான— மேலான செயல்களைத் தலைவனின் வலியுறுத்தலுக்கு மேற்கோளாகக் காட்டும் சிறப்பும் நுட்பமும் எண்ணி மகிழ்தற்குரியது!

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கின்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம் பார்த்து அல்கும்— கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்

புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை
வெள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளினர் என்பது அறிந்தனள் என்தோழி;
காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்திடைப் படாஅமல் முயங்கியும் அமையாரென்

தாழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும்;
முள்ளுறழ் முனையெயிற்று அமிழ்தூறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனவுரைத்தும் அமையாரென்
ஒள்இழை திருத்துவர் காதலர் மற்றவர்

உள்ளுவது எவன்கொல் அறியேன் என்னும்;
நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையாரென்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும்;

எனவாங்கு;
கழிபெரு நல்கல் ஒன்றுடைத் தெனஎன் தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒருநாள்நீர்
பொழுது இடைப்பட நீப்பின் வாழ்வாளோ
ஒழிகினிப் பெருமகின் பொருட்பிணிச் செலவே

(பாலைக்கலி: 3)

'நீண்டு தழைத்துள்ள கருங்கூந்தலுடனே என் பெருத்த தோள்களையும் தடவிக் கொடுத்து அப்போது என்னைத் தேற்றி ஆறுதல் கொள்ளுமாறும், இறுகச் செறிந்த கைவளையல்கள் இப்போது நெகிழுமாறும் செய்து, பொருளீட்டும் பொருட்டு அகன்று சென்றார் தலைவர்' என்னும் தலைவியின் கூற்றும், தலைவன் வலியுறுத்துப் பிரிதலைச் சுட்டிக் காட்டுகிறது!

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோர்

(குறுந். 190: 1-2)

இனி, முல்லைக்கு இருத்தல் ஒழுக்கத்தைக் கூற வேண்டிய காரணம் என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகநானூற்றிலுள்ள முல்லைப் பாடல்களை ஆய்ந்த பேராசிரியர் S. ஆறுமுக முதலியார் அவர்கள் விளக்குகிறார்:

''முல்லைத் திணை உரிப்பொருளாகிய இருத்தலிலும் அதன் நிமித்தங்களிலும் நாம் தலைவியின் கற்புடைமையையே காணலாகும். வெண்மை நிறம் வாய்ந்த முல்லை மலர்கள் கற்பிற்கு ஓர் அறிகுறியாகும். 'முல்லை சான்ற கற்பு' என்றன்றோ இக்கற்புடமை புலவர்களால் புகழ்ந்து பேசப்படுகிறது?

7962

''இல் வாழ்க்கையில், பகை களைதல் பற்றிப் பிரிந்து, வினை முற்றி மீள்வோன், பாசறையினின்று ஊர் நோக்கி வரும் காலம் கார்ப்பருவமாகிய ஆவணி புரட்டாசி மாதங்களாதலின் அவை வெப்பமும் தட்பமும் மிகாது, நீரும் நிழலும் பெறுதலும், ஊர்ப் பக்கத்துக் காடும் சோலையும் காட்சி பெருக், மாவும், புள்ளும் மகிழ்ந்து விளையாடுதலும், மாலையிற் பசுக்கள் மன்றிற் புகுதலும், தீங்குழல் இசைத்தலும் பிறவும் காமக் குறிப்பை மிகுவித்துப் பிரிவாற்றிக் கொண்டு தனித்திருக்கும் தலைவியது கற்பு நிலையைப் பெருகக் காட்டுதலின் இருத்தலை முல்லைக்கு'' உரியதாக்கி முற்காலத்தவர் புலவரிற் வழக்கஞ் செய்தனர் போலும். [16]

பிரிந்து மீளும் தலைமகனுடைய திறமெல்லாம் பிரிந்திருந்த தலைவி கூறுதலே முல்லைப் பொருளாம் என்றும், அம்முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உதவியாயிருப்பது கார்காலம் என்றும், தலைவியை எண்ணித் திரும்பி வருகின்ற தலைவனுக்கும், தலைவனைப் பிரிந்திருந்த தலைவிக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று என்றும் நச்சினார்க்கினியர் விளக்கம் தருவார். [17]

---

16. அகநானூற்றுச் சொற்பொழிவுகள், பக். 93
17. தொல். அகத். 6 நச். உரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லை வாழ்க்கையாகிய நாடகத்திற்குக் கார்கால வருணனையும், மாலை நேர வருணனையும் ஆடரங்காக அமைந்துள்ளது எனலாம்.

ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும் ஆகிய மழை பெய்யும் காலமே கார்காலம் என்பர் இளம் பூரணர். [18]

கார்காலம் என்பது முன் மழைக்காலம் (The early rainy season) என்றும், கூதிர்காலம் என்பது பின் மழைக் காலம் (The later rainy season) என்றும் கூறுகிறார் டாக்டர். சி. இலக்குவனார். [19]

கார்காலம் வடமொழியில் 'வருஷருது' என்றும், ஆங்கிலத்தில் 'வின்டர்' (Winter) என்றும் பெயர் பெறும்.

கார்காலம் வடமொழியில் 'வருஷருது' என்றும், ஆங்கிலத்தில் 'வின்டர்' (Winter) என்றும் பெயர் பெறும். ஆக்ஸ்போர்டு அகராதி இப்பருவத்தை ஆண்டின் கடுமை யான குளிர்காலம் (Coldest Season of the year) என்று கூறுகிறது.

முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் அன்பின் ஐந்திணைகளுள் முல்லைத் திணை முதற்கண் இடம் பெறுவதுபோல், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு காலங்களுள் கார்காலம் முதலில் இடம் பெற்றுள்ளது எண்ணுதற்குரியது.

ஞாயிற்றுக்குரிய வோரை சிம்மவோரை என்றும் அதற்குரிய திங்கள் ஆவணித் திங்களாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் முறை என்றும் நச்சினார்க்கினியர் கூறுவார் (தொல். பொருள். 6)

---

18. தொல் அகத். 6 இளம். உரை
19. Tholkappiam with critical studies, p. 399

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கார்காலத்தை மக்கள் விரும்பி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதற்குக் காரணம் கார்காலத்தில் பெய்யும் மழையினால் ஏற்படும் நன்மைகள் ஆகும்.

வறண்ட ஞாலம் தளிர்க்கவும் (ஐங். 452: 1-2)

கானம் வளமுறவும் (433: 3)

வேனிற்கால வெம்மை நீங்கிக் காடு அழகு பெறவும் (484: 1-2)

பெரும் நிலப்பரப்பு குளிர்ச்சியடையவும் (470: 1)

பெரும் நிலப்பரப்பு மணம் பரப்பவும் (கலி. 109: 1)

நிலவுலகத்துத் துன்பம் நீங்கவும் (பரி. 10: 3)

வருவதாக, கார்கால மழை போற்றப்படுகிறது.

'மன்னனைப் போல மதித்து விரும்புவதற்குரிய மழைக்காலம் வந்தது' என்று 'ருது சம்ஹாரம்' என்னும் தம்முடைய காப்பியத்தில் காளிதாசன் மழைக் காலத்தைப் போற்றுகிறார். (The Rainy Season has come dear like a King) [20]

காளிதாசனின் மேகதூதம், ருதுசம்காரம் என்னும் காவியங்களிற் காணும் தலைவியர்தம் ஆற்றியிருக்கும் ஒழுக்கம் முல்லை நிலத் தலைவியின் ஒழுக்கமாய் இணைந்து விளங்குவதைக் காணலாம்.

மாலை, யாமம், வைகரை, விடியல், நண்பகல், எற்பாடு என்னும் ஆறுவகையாகப் பிரிக்கப்படும் சிறு பொழுதுகளுள் மாலைக் காலம் முதலில் இடம் பெற்றுள்ளது எண்ணுதற்குரியது. [21]

ஆங்கிலத்தில் மாலைக் காலம் 'Evening' என்று பெயர் பெறுகின்றது. ஆக்சுபோர்டு அகராதி மாலைக்காலத்தைச்

---

20. Rithu Samhara, Canto II, P. 6

21. தொல். பொருள். 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

('The close of the Day, usually the time from about sunset till bed time') 'சூரியன் மறைந்ததிலிருந்து படுக்கைக்குச் செல்லும் காலம் வரையிலான பகலின் முடிவுக் காலம்' என்று குறிக்கின்றது.

மாலையாவது இரவுப் பொழுதின் முற்பகுதி, பத்து நாழிகை (2½ நாழிகை = ஒரு மணி) அளவினை உடையது. என்னும் இளம்பூரணரின் கருத்து ஆங்கில அகராதியின் கருத்துடன் ஒத்துப் போவதைக் காணலாம்.

மாலைக் காலம் முல்லை நிலத்திற்கு இன்றியமையாத முல்லைப் பூ மலரும் காலம் ஆதலாலும், முல்லை நிலத்துப் பொருளாகிய ஆநிரை (பசுக்கூட்டம்) வரும் காலம் ஆதலாலும், முல்லை நிலத்தில் பிரிவுக் காலத்தில் தனித்திருப்போர்க்கு முல்லை மலரையும், பசுக்கூட்டத்தையும் காணும்போது வருத்தம் மிகுமாதலாலும், மாலைக் காலமும் சிறந்த காலமாயிற்று என்பர். [22]

முல்லை நிலத்து வாழும் தலைவனுடைய மேனி, முல்லை மலரின் மணமுடையது. அதனால் முல்லை நிலத் தலைவன் 'முல்லை நாடன்' என்று வழங்கப் பட்டான்.

> தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்
> மணந்தனன் மன்எம் தோளே;
> இன்றும் முல்லை முகம் நாறும்மே (குறுந். 193)

எனத் தலைவி கூறுமாற்றால், தலைவன் மேனி முல்லை மலரின் மணமுடையது என்பதை அறியலாம். 'நெடிய வெண்ணிலவுப் பொழுதில் முன்னொரு நாளில் தலைவன் எம்தோள்களைத் தழுவிக் கூடி இன்புற்றான். அதனால் எம் தோள்கள் இன்றும் முல்லை அரும்புகளின் மணத்தை வீசுகின்றன.'

---

22. தொல். பொருள். 6. இளம். உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதைப் போலவே, முல்லை நிலத் தலைவியின் நெற்றியும், தோளும் முல்லை மணம் உடையவை என்பதை அறியலாம்.

நின்னே போலு மஞ்ஞை யாலநின்
நன்னுத னாறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுத லரிவை காரினும் விரைந்தே (ஐங். 492)

'நல்ல நெற்றியை உடைய தலைவியே, உன்னைப் போன்ற மயில்கள் ஆடுதலாலும், உன்னுடைய நல்ல நெற்றியைப் போல் மணக்கும் முல்லைகள் மலர்தலாலும், உன்னைப் போலவே மான்கள் மருண்டு நோக்குதலாலும் வானில் எழுந்த மேகத்தினும் விரைந்து உன்னை நினைத்து வந்தேன்.' என்று கூறினான் தலைவன்.

நின்னுத னாறு நறுந்தண் புறவின்
நின்னே போல மஞ்ஞை யாலக்
கார் தொடங்கின்றாற் பொழுதே
பேரிய லரிவை நாநயத் தகவே (ஐங். 413)

'பெரிய இயல்பினையுடைய தலைவியே, நாம் விரும்புமாறு உன்னுடைய நெற்றிபோல் மணம் கமழும் குளிர்ந்த முல்லைக் காட்டின்கண் உன்னைப் போலவே மயில்கள் மெல்லிய குரலெடுத்து அகவ, இப்போது கார்காலம் தொடங்கியது' என்றான் தலைவன்.

தலைவியின் நெற்றி, முல்லை மணம் வீசும் சிறப்பை 'நன்னுதல்நாறு முல்லை' என்னும் அடியும், அந்நெறியின் மணத்தை முல்லைக்காடு பெறும் சிறப்பை 'நின்னுதல் நாறும் நறுந்தன் புறவின்' என்னும் அடியும், தோள்கள் முல்லை மணம் பெறும் சிறப்பைத் 'தோளே... முல்லை முகை நாறும்மே' என்னும் அடியும் புலப்படுத்தி நிற்கின்றன. மேலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூத்த முல்லைப் பசுமுகைத் தாது
நாறும் நறுநுதல் அரிவை (குறுந். 223)

என்னும் குறுந்தொகை அடிகளும்,

'மண நாறும் நறுநுதல் மலரிவீழ் இருங்கூந்தல்' என்னும் பாலைக் கலிப் பாடலின் (கலி, 14) அடியும்,

கொய்யகை முல்லை காலொடு மயங்கி
மையிருங் கானம் நாறும் நறுநுதல் (அகம். 43)

என்னும் அகநானூற்று அடிகளும், 'மகளிர் நுதல் முல்லையின் நறுமணம் கமழும், நெற்றி நறுமணம் உடையது என்பதனால் நுதல் நாறும் தண் புறவு என்னும் கருத்திற்கு அணி சேர்ப்பதைக் காணலாம்.

மணம் நிறைந்த சாந்து அல்லது, கூந்தலில் சூட்டிய மணம் கமழும் மலர்களால் நெற்றி மணம் வீசியது என்று எண்ண இடமுண்டு.[23]

மகளிருடைய தோள் மணக்கக் காரணம், ஆடவர் தம் முல்லை மண மேனியேயாகும். ஆடவர் மார்பிற் சந்தனத்தையும், மலர் மாலையையும் அணிந்திருந்தனர். ஆடவர் மார்பில் அணியும் மாலை 'தார்' எனவும், தலையில் அணியும் மாலை 'கண்ணி' எனவும் வழங்கப்பட்டன.

அரிநீர் அவிழ்நீலம் அல்லி அனிச்சம்
புரிநெகிழ் முல்லை நறவோடு அமைந்த
தெரிமலர்க் கண்ணியும் தாரும் நயந்தார் (கலி. 91:1-3)

.....கமழும் நின்
சாந்தினால் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ
(கலி. 79: 9-10)

---

23. டாக்டர் ஈ. கோ. பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தலைவி, பக். 99

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆடவர் மேனி முல்லை மணம் உடையது என்னும் கருத்து, வழி வழியே புலவர் தம் இலக்கிய உலகிலே இருந்து வருகிறது என்பார் திரு. கி. வா. ஜகந்நாதன்.[24]

பந்தினை இளையவர் பயிலிடம் மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனம்அல சண்பக வனமாம்
நந்தன வனம்அல நறைவிரி புறவம் (கம்ப. பா. கா. 80)

இளம் பெண்கள் பந்து விளையாடுகின்ற இடங்களாகிய சந்தனச் சோலைகள் எல்லாம், அவர்களின் மேனியில் வீசும் சண்பக மணத்தால், சண்பகச் சோலைகள் போலத் தோன்றின. முருகனைப் போன்ற இளங் காளையர் வேல், வாள் பயிற்சி பெரும் களங்களாகிய பூஞ் சோலைகள் எல்லாம் அவர்களின் மேனியில் இயல்பாக வீசும் முல்லை மணத்தால், முல்லை வனம் போலத் தோன்றின.

தரவு

கொன்செய்த கலையல்குல் கொலைசெய்த மதர்வேற்கண்
மின்செய்த சிறுமருங்குற் பெருந்தேவி விழிகுளிர்ப்பப்
பொன்செய்த மணிமன்றில் நடஞ்செய்த புகழோய்கேள்

தாழிசை

முருகுயிர்க்கும் நறுந்தெரியல் மொய்குழலின் மையுண்கண்
பொருகயற்குன் திருமேனி புதுவெள்ளப் புணரியே
தேன்மறிக்கும் வெறித்தொங்கல் அறற்கூந்தல் திருந்திழைகண்
மான்மறிக்குன் திருமேனி மலர்முல்லைப் புறவமே
பிறையளிக்கும் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கண்
சிறையளிக்குன் திருமேனி தேனளிக்கும் பொதும்பரே

அதனால்
மதுவிரி கோதை மடவரற் கம்ம

---

24. முல்லை மணம், பக். 10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவிருந் துண்ண வுண்ண
அதிசயம் விளைக்குநின் அற்புதக் கூத்தே
(சிதம்பரச் செய்யுட் கோவை, 57)

குமரகுருபரப் பெருமான் சிதம்பரத்தில் நடனமிடும் நடராசப் பெருமானைப் போற்றுகிறார். வேலைப்பாடமைந்த சிறந்த ஆடையை உடைய அல்குலையும், வேலையொத்த கண்களையும், மின்னலையொத்த இடையையும் உடைய சிவகாமி அம்மையாரது கண்கள் குளிர்ச்சியடையுமாறு பொன்னம்பலத்தில் நடனமிடும் நடராசப் பெருமானே, கேட்பாயாக.

சிவகாமி அம்மையாரது கண்களாகிய கயல் மீன்களுக்குக் கடலாக உனது திருமேனி அமைந்துள்ளது.

தேனொழுகும் மணம் மிக்க மலர் மாலையை அணிந்த கரும்மணல் போன்ற கூந்தலையும், நல்ல அணிகலன்களையும் உடைய சிவகாமி அம்மையாரது கண்ணாகிய மான்கன்றுக்கு மலர்ந்த முல்லைப் பூக்களையுடைய முல்லைக் காடாக உனது திருமேனி அமைந்துள்ளது.

சிவகாமி அம்மையாரது கண்ணாகிய வண்டுக்குத் தேன் சிந்தும் சோலையாக உனது திருமேனி அமைந்துள்ளது.

அதனால் சிவகாமி அம்மையாருக்குப் புதிய விருந்தாக உண்ண உண்ண உனது அற்புதக் கூத்து அதிசயத்தை விளைக்கின்றது.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை.

என்னும் பாடல் எட்டுத் தொகை நூல்களை எடுத்து உரைக்கின்றது. இப்பாடலின் அடைவு முறையின் வரிசையில் முதலிடம் பெற்ற சிறப்பினை உடையது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நற்றிணையாகும். இவ்வாறு எட்டுத்தொகை நூல்களில் முதல் நூலாகக் கருதப்படும் நற்றிணையில் முதல் கடவுள் வாழ்த்துப் பாடலும், பரிபாடலுள் காணும் முதல் நான்கு பாடல் களும் முல்லை நிலத் தெய்வமான மாயோனுக்கு உரியதாக அமைந்துள்ளன.

மாநிலஞ் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசைகையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக
இயன்ற வெல்லாம் பயின்று, அகத்தடக்கிய
வேத முதல்வன் என்ப—
தீதற விளங்கிய திகிரியோனே

பெரிய நிலப்பரப்பைத் தன் இரு பாதங்களாகவும், சங்கினம் ஒலிக்கும் அலைகடலை ஆடையாகவும், ஆகாயத்தைத் திருமேனியாகவும், திசைகளைக் கைகளாக வும், சந்திரனையும் சூரியனையும் இரு கண்களாகவும் கொண்டுள்ள திருமால், எங்கும் நிறைந்தும் எல்லா வற்றையும் தன்னுள் அடக்கிக் கரந்தும் இருக்கின்றான், நான்கு மறைகளுக்கு முதல்வனாகவும் திகழ்கின்றான்.

எனவே தமிழிலக்கியம் மாயோனை வேத முதல்வன் (The God of supreme) எனப் போற்றுகின்றது, என்றும் அந்நிலை வடமொழியின் கண் உள்ள வேதம், உபநிடதங் களுக்குச் சமமானதாகும், என்றும் கூறுவார் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.[25]

பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையை வழி பட்டனர். முல்லை நிலத்தினர் இயற்கை எழிலை— அடவியின் அடர்த்தியான கருமையை— மாயோன் எனக் கருதிப் போற்றிப் புகழ்ந்தனர். காட்டில் மலர்ந்த

25. Vaishnavism in Tamil Literature, A Glimpse of Tamilology, p, 174

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காயாம் பூவினையும் அந்நில மக்கள் பரவி ஏத்தினர். இம்மலர்கள் அவர்கட்குத் திருமாலின் நிறத்தினை நினைவூட்டின. மன்னர்களைப் பாராட்டெடுக்கும் போது, புலமைச் செல்வர்கள் அவர்களைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடுவர். இவ்வகை வாழ்த்துத் தொல் காப்பியத்தே பூவை நிலை எனப்படும்.

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் (தொல். 1006)

''பூவை என்பது காயாம் பூவைக் குறிக்கும். அஃது ஈண்டு உருவகமாக நின்று திருமாலை உணர்த்துகின்றது'' என்று டாக்டர். இரா. சாரங்கபாணி முல்லை நிலத் தெய்வமான மாயோனின் தோற்றம், வளர்ச்சி நிலை குறித்து அழகாக விளக்குகிறார். [26]

பரிபாடலின் முதற், கடவுள் வாழ்த்துப் பாடல் அறமும் அளியும், மறனும் அணங்கும், திங்களும் ஞாயிறும், அரனும் அயனும், அவர் செய்தொழிலும் விசும்பு முதலிய பூதமும் பிறவுமாகிய எல்லாப் பொருளும் திருமாலே என்பதைச் சிறப்புற எடுத்துக்காட்டுகின்றது.

விறல்மிகு விழுசீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க் களியு நீ
திறனிலோர்த் திருத்திய தீதுசீர் சிறப்பின்
மறனும் மாற்றலர்க் கணங்கு நீ
அங்கணோர் வானத் தணிநிலாத் திகழ்தரும்
திங்களுந் தெறுகதிர்க் கனலியு நீ
ஐந்தலை யுயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை யொருவனு மடங்கலு நீ
நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
புலமும் பூவனு நாற்றமு நீ

---

26. பரிபாடல் திறன், பக். 129

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலனுயர் எழிலி மாக விசும்பும்
நிலனு நீடிய இமயமு நீ (பரிபாடல். 1: 37-48)

இறைவனுடைய இயல்புகளைப் பற்றியே பிற தொகை நூல்களிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் விளக்க, பரிபாடலின் இந்தப் பாடல் இறைவனைத் தொழுதற்குச் சாதனமான போற்றித் துதிகளைக் கொண்டுள்ளது எண்ணத்தக்கது.

இவ்வாறு முல்லைத் திணைப் பாடல்களால் அறியலாகும் முல்லை வாழ்க்கை, பல அரிய பழக்க வழக்கங்களையும் உயரிய கொள்கைக் கோட்பாடு களையும் கொண்டுள்ளது. அவை அக வளர்ச்சியால் சிறப்புறும் பண்பாட்டாலும் (Culture) புறவளர்ச்சியால் சிறப்புறும் நாகரிகத்தாலும் (Civilization) தொன்று தொட்டு நிலவிவரும் புகழுடையன. அவைகளைக் காண்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

ஐங்குறுநூறு

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூறு என்னும் நூலில் முல்லைத் திணைக்குரிய பாடல்கள் நூறு உள்ளன. அவைகள் அனைத்தையும் பாடியவர் பேயனார் என்னும் புலவர். இவர் சேர நாட்டினராதல் கூடும் என்பர். இவர் பிறந்து வளர்ந்து புலமை வீறு பெற்ற நிலம் முல்லை என்றும் அதனால் இவர் பாடிய முல்லைப் பாட்டுகள் மிகச் சிறந்து அமைந்துள்ளன என்றும் கருதப் படுகிறது. இவர் காட்டும் முல்லை வாழ்க்கையைக் காண்போம்.

முல்லை நிலத்து ஆயர், இடையர் என்றும் பொதுவர் என்றும் வழங்கப்பட்டனர்.

பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி
மாசுண் உடுக்கை மடிவாய் இடையன்
சிறுதலை ஆயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத்து அற்றே (புறம். 54)

என்னும் புறநானூற்று அடிகளும்,

மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவும் தளவும்
குல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தன
பல்லான் பொதுவர் கதழ்விடைகோள் காண்மார்
(கலி. 103: 1-5)

என்னும் கலித்தொகை அடிகளும் உரைப்பதைக் காணலாம்.

இடையர் என்பதையும் பொதுவர் என்பதையும் காரண வகையால் அமைந்த பெயர்கள் என்று நுட்பமாக விளக்குவார் உரை வேந்தர் அறிஞர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானில அமைப்பில் முதல் மூன்றுமே நிலவளம் சிறந்தவையாகும். நெய்தல் நீர்வளத்தாற் சிறந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்றனுள் முல்லை ஏனை யிரண்டற்கும் இடையில் நிற்றலால் முல்லை நிலத்து ஆயரை இடையர் என்றும், முல்லை நிலத்து வாழும் ஆனிரைகளின் பாற்பயன் (மோர், நெய் முதலியன) ஏனை எல்லா நிலத்தவர்க்கும் பொதுவாய்ப் பயன்படும் சிறப்புப் பற்றி அதனை நல்கும் ஆயரைப் பொதுவர் என்றும் குறிப்பதுண்டு. [1]

ஆயர்கள் மிகத் தொன்மையானவர்கள்; பழம் புகழுடைய பாண்டிய மன்னர் குலத்தோடு வைத்து எண்ணத்தக்க பழம் பெருமையுடையவர்கள்.

பொங்கும் கடலலைகள் தங்கும் தன் நாட்டின் எல்லைகளை அழிக்க, அது கண்டு சோர்வுறாது, இயற்கை யழித்த தன் நாட்டுப் பகுதிக்கு ஈடாகப் பகை கொண்ட நாடுகளான சேர சோழ நாடுகளின் பகுதிகளை வென்று தன் நாட்டினைவிரிவு படுத்திக் கொண்ட தொல்லிசை

---

1. ஐங்குறுநூறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு, பக். 855

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுடையவன், பாண்டிய மன்னன். இயற்கையின் கொடுமையையும் தன் ஆற்றலினால் வென்றுவிட்ட வாடாத புகழையுடைய குடி பாண்டியக் குடி. தொல்லிசை நட்ட அந்தப் பாண்டியக் குடியொடு தோன்றியவர் ஆயர்.

மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினால் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத்து ஆயர் .... (கலி. 104)

மெகத்தனிசு குறிப்பும் ஆயர்களின் தொன்மையைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றது.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவில் சந்திர குப்த மௌரியர் அவையில் கிரேக்கத் தூதுவனாக இருந்த மெகத்தனிசு வட இந்தியாவை மனத்துள் கொண்டு ஏழு வகைச் சாதிகளைக் குறிப்பிடுவார். அவை யாவன:

1. தத்துவ ஞானிகள் 2. உழவர் 3. ஆயர் 4. கம்மியர் 5. பொருநர் 6. அதிகாரிகள் 7. மந்திரத் துணைவர்

இவ்வேழு சாதியினரும் அயல் சாதியில் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும், எந்தச் சாதியாலும் தன் தொழிலை விடுத்து வேறு தொழிலைச் செய்ய முடியாது என்றும் மெகத்தனிசு குறிப்பிடுகின்றார். [2]

தொன்மைப் புகழைப் போலவே தூய்மைச் சிறப்பை யும் பெற்றவர்கள் முல்லை நிலத்து ஆயர். இயற்கை யெழில் சூழ்ந்த முல்லை நிலத்தில் வாழும் இவர்களுடைய

---

2. க. ப. அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், பக். 90

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையில் எளிமை ஏற்றம் பெற்றது; அமைதி அரசோச்சியது; இன்பம் எழில் நடம் புரிந்தது.

''கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை'' என்று ஆயர் வாழ்வின் உயர்வும் சிறப்பும் குறித்து இளங்கோவடிகள் போற்றுவார்.

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும். அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கை. மனைவியின் நற்குணங்களே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்னும் வாழ்க்கைக்கு விளக்கம் கண்ட திருவள்ளுவர் நெறியில், முல்லை நிலத் தலைவன் தலைவியர் இல்லற வாழ்வை மேற்கொள்கின்றனர். நன்மக்கட் பேற்றைப் பெற்று நலமுடன் கூடி வாழ்கின்றனர்.

மான்கன்றினை இடையிலே இட்டு ஆண்மானும் பெண்மானும் கிடந்ததைப் போலப் புதல்வன் நடுவிலே விளங்க இரண்டு பக்கத்திலும் தலைவனும் தலைவியும் படுத்துக்கிடக்கின்றனர். மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் இவ் இன்பக் காட்சி காணுதல் அரிது என்று மகிழ்ச்சியடைகிறாள் தலைவியின் செவிலித்தாய். (401)

தன் மகனை அணைத்துக் கிடந்த தலைவியின் புறத்தை விருப்பத்தோடு அணைத்துக் கிடந்தான் தலைவன். இந்தக் காட்சி, பாணர் யாழின் நரம்பினைத் தடவ, அப்போது எழும் இசை போல இன்பம் பயப்பதாயிருந்ததோடு நற்பண்பினையும் உடையதாயிருந்தது (402)

அழகிய நெற்றியை உடைய தலைவியாகிய தன் மனைவி மகனுக்குப் பாலூட்டத் தலைவன் பெருகிய காதலால் அவளின் சிறுபுறம் தழுவி இன்பம் அடைந்தான் (404)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகன் இனிய புன்னகையைச் செய்து கொண்டு சிறுதேர் உருட்டி விளையாடுகின்றான்.

புணர்ந்த காதலியிற் புதல்வன் றலையும்
அமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
முறுவ லின்னகை பயிற்றிச்
சிறுதே ருருட்டுந் தளர்நடை கண்டே (403)

காதலியைத் தழுவிய வண்ணம் தலைவன் அதனைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான் (406). பாணர் முல்லைப் பண்ணைப் பாடவும் தலைவி முல்லைப்பூச் சூடவும் மகன் முல்லைச் சிரிப்புடன் தலைவனுடைய மார்பில் ஏறி விளையாடவும் தலைவன் இல்லிருந்து மகிழ்ந்தான். (410)

தலைவன் மகனைக் தழுவிக்கொள்ள, தலைவியோ அவ்விருவரையும் தழுவிக் கிடந்த காட்சி இனிதாயிருந்தது. இவ்வின்பத்துக்கு உலகு முழுதும் ஒப்பதாகும் என்று போற்றுகிறாள் செவிலித்தாய் (409)

மனைக்கு விளக்காகிய முல்லைத் தலைவி, தலைவியின் நெஞ்சங் கவர்ந்த முல்லைத் தலைவன் ஆகியோர் தம் முல்லை வாழ்க்கை, 'நாமிருவர், நமக்கொருவர்' என்னும் வளமான வாழ்வை நினைவூட்டுகின்றது!

செவிலிக் கூற்றுப் பத்து (ஐங்குறுநூறு) உணர்த்தும் கருத்துகள் மணவாழ்வால் தலைவன்— தலைவியர் பெறும் இன்ப வாழ்விற்கு அப்பாற்பட்டதோர் உண்மையான அன்பை, இனம்புரியாத இன்பத்தை உலகுக்குக் காட்டுவதைக் காண்கிறோம். இச்சிறப்புப் பின்வரும் பெர்ட்ண்டு ரசல் வாக்கில் பொலிவதைக் காணலாம்.

Marriage is something more serious than the pleasure of the two people in each other's company... something more intimate, affectionate and realistic. [3]

---

3. Marriage and Morals, P. 63

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கார்காலத் தொடக்கத்தில் மழை பெய்யத் தொடங்கி யதும் தலைவனும் தலைவியும் புதுப்புனலில் நீராடி மகிழ்வார்கள். காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் முதலிய மலர்கள் விரிந்து மணம் பரப்பும் மலர்ச் சோலைகளில் விளையாடி மகிழ்வார்கள் (412). 'தலைவியின் மணமிக்க நெற்றி போல முல்லைக்காடு மணங்கமழுகிறது' என்றும், தலைவியைப் போல கோலமா மயில்கள் தம் வண்ணத் தோகை விரித்து ஆடுகின்றன என்றும், தலைவன் தலைவியோடு உரையாடி மகிழ்வான் (413). கிளைகளிலும் கொடிகளி லும் மலர்கள் விரிந்து மணம் பரப்புகின்றன; விலங்கு களும், பறவைகளும் தத்தம் துணையோடு கூடி இன்புறு கின்றன. அதனால் 'துணையுடன் கழிக்கின் இளமை இனிது' என்று தலைவன் தலைவிக்கு இன்ப நாட்டம் ஊட்டுவான்; பின் கூடி மகிழ்வான்.

இதுவே மடந்தை நாம் மேவிய பொழுதே
உதுவே மடந்தை நாமுள்ளிய புறவே
இத்துடன் கழிக்கின் இளமை
இனிதால் அம்ம இனியவர்ப் புணர்வே (415)

புதுப் புனலாடியும் மலர்ப்பொழில் விளையாடியும் தலைவியுடன் இன்பம் துய்த்த தலைவன் வினைமேற் பிரிய எண்ணுவான்; தோழிக்கும் தலைவிக்கும் தெரிவிப்பான். தலைவியின் உடன்பாடு பெற்றுப் பிரிவான். பிரிவு உணர்த்திய தலைவனிடம் தலைவியின் ஆற்றாமை கூறிப் பிரிந்து செல்லுதலைத் தடுப்பாள் தோழி.

தலைவன் நெற்றியில் பசலை பாயும்; ஒளி மங்கும். தலைவிக்கு இறப்பு நேரிடவே மகன் தாய்ப்பாலுக்காக அழுவான்.

புறவணி நாடன் காதன் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முலைக்கே (424)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவி பிரிவுக்கு இசையாள் என்று அறிந்து தலைவன் சில நேரங்களில் பிரிவைத் தவிர்ப்பதுண்டு.

'அரசனும் தன் காதலியைப் பிரிந்து பகைமேற் செல்வதற்கு வாரான்; அதனால் போர்வினையைத் தவிர்த்துவிட்டான். ஆகவே நானும் உன்னைப் பிரிந்து செல்ல மாட்டேன்' என்று தலைவியைப் பார்த்துக் கூறுவான், தலைவன். (428)

இதற்கு மாறாகப் போர்வினை மேற்செல்ல முடிவெடுக்கும் தலைவன், முல்லை ஒழுக்கத்தினை நினைவூட்டித் தலைவியின் உடன்பாட்டினைப் பெற்றுப் பிரிந்து செல்வான்.

பல்லிருங் கூந்தற் பசப்பு நீவிடின்
செல்வேந் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி யரண முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே (429)

அவ்வாறு தலைவன் பிரிந்து செல்லுகின்ற வழி சுரமாயிற்றே என்று தலைவி கவலையடைவாள். தலைவன் சென்ற வழியின் இனிமையைக் கூறித் தோழி தலைவியை ஆறுதல் சொல்லித் தேற்றுவாள்.

'தலைவன் சென்ற வழி நன்று. அவ்வழியில் மணி நிற மயில்கள் உள்ளன; காவலர் போன்ற வீரர்கள் உள்ளனர்; பெண் மான்கள் கன்றுகளுடன் துள்ளி விளையாடுகின்றன. கொன்றை, பிடவம் போன்ற மலர் களுடன் முல்லை மலரும் விரிந்து மணம் வீசுகின்றன. குருந்த மாலையணிந்த கோவலர் வாழும் ஊர்கள் உள்ளன.

நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதற் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்பு மாருடைத்தே (438)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் வேனிற் காலத்தில் திரிந்து முறையே மென்பாலை— வன்பாலை என்ற பெயரினைப் பெறும். அதுவே சுரம் என்றும் வழங்கப் பெறும். ஆதலின், தலைவி தலைவன் சென்ற நெறியினைச் சுரம் என்று கருதி ஆற்றாதவளானாள். அந்நிலமே மழை பெய்தவுடன் தன் இயல்பான நிலையினை யடைந்ததால் தோழி அதனைப் புறவாக (முல்லை வனமாக) அணிந்துரைக்கின்றாள்.'' * ஆகவே தோழியின் சொற்கள் தலைவிக்கு ஆறுதலைத் தந்தன.

தமிழகத்தில் பாலை என்பது நிலப் பாலையைக் குறிக்காது, காலப் பாலையையே குறிக்கும் என்னும் கருத்திற்கு ஐங்குறுநூற்றிலுள்ள புறவணிப் பத்திலுள்ள தோழியின் பாடல்கள் அருமையான சான்றாக அமைந்துள்ளன.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்
காலை யெய்தினிர் ..... (காடுகாண், 65-67)

என்னும் சிலப்பதிகாரத்தின் கருத்தும் கருதத் தக்கது.

வினைமேற்சென்ற தலைவன் போர் குறித்து அமைந்துள்ள பாடி வீடாகிய பாசறையில் தங்கியிருப்பான். பகை மன்னரோடு தொடங்கிய போர் முடியாத நிலையில் திரும்பி வருவதாகத் தலைவிக்குத் தான் சொல்லி வந்த கார்காலம் வந்தபோது தலைவியின் நினைவு தோன்றும்! 'வேந்தன் மேற்கொண்ட போர்வினையை விடின் தலைவியைச் சென்று காணலாம்; விருந்தோம்பலாகிய மனையறத்தை அருந்ததி போன்ற தலைவியும் பெறுவாள்' என்று புலம்புவான். தலைவியிடத்திலிருந்து வந்த தூதரின் சொல் கேட்டுத் தன்னுடைய துன்பத்தைத் தலைவி அறியின் நல்லது என்று இரங்குவான்!

---

* ஐங். சொற்பொழிவுகள், பக்: 226

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐய வாயின செய்யோள் கிளவி
கார்நா ளுருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன வெமக்கே
யாமுறு துயரமவ ளறியினோ நன்றே (441)

அரசன் பகை முடித்துத் தன் நாடு நோக்கி மீளக் கருதினால், தலைவியின் இளமை பொருந்திய மார்பில் துயிலும் இன்பத்தைப் பெறலாம் என்று ஏங்குவான்!

முரசுமா றிரட்டு மருந்தொழில் பகைதணிந்து
நாடுமுன் னியரோ பீடுகெழு வேந்தன்
வெய்யவு யிர்க்குநோய் தணியச்
செய்யோ ளிளமுலைப் படீஇயரெங் கண்ணே (450)

பாசறையில் தனித்துறையும் தலைவன் கார்கால வரவு கண்டு வருந்துவதைப் போலவே, இல்லத்தில் தனித்துறையும் தலைவியும் வருந்துவாள்.

முல்லை நிலத்துப் பள்ளங்களில் தேரைகள் ஒலிக்கவும் மேட்டுப் பகுதிகளில் பறவைக் கூட்டங்கள் ஒலிக்கவும் வந்த கார்காலத்தில் பகைவர்களின் திறை கொள்ளுவதற் காகத் தலைவன் செய்யும் முயற்சி, பொன்னிற மேனியின் பொலிவினையழித்துப் பசலையடையச் செய்தது. நெடுங் கண்கள் நீரைச் சொரிந்தன.'

'கார்காலத்தே வருவேன் எனப் பிரிந்த தலைவன் கார்கால வரவினை நினைக்க மாட்டாரோ? நினைத்திருந் தால் வாராமல் இராரே' (456)

'மன்னன் பகை தணிந்து எல்லாரும் மீண்டு வந்தும் தலைவன் வரவில்லையே!' (455)

'பனிப் பருவத்தில் தலைவன் நம்மைப் பிரிந்து வாழ்தலை மேற்கொள்ளமாட்டாராயினும் மடநெஞ்சம் அவரை மறந்து சிறிது நேரமும் இராது.'

பெய்பனி நலிய வுய்தல் செல்லாது
குருகினம் நரலும் பிரிவருங் காலைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறந்தமை கல்லார் காதலர்
மறந்தமை கல்லாதென் மடங்கெழு நெஞ்சே (457)

'பெருஞ்சின வேந்தனும் பாசறைத் தொழிலை முடிக்க வில்லை; தலைவனும் தன் வருகை பற்றிய தூதுவனையும் அனுப்பவில்லை.'

இவ்வாறு வருந்தும் தலைவிக்குத் 'தலைவன் விரைவில் வருவான்' என்பதற்கான காரணங்களைக் காட்டித் தோழி ஆறுதல் கூறுவாள்.

'தலைவியே! ஏதில்லாமல் பெய்கின்ற மழையினைக் கார்கால மழையென்று பிறழக் கொண்ட அறியாமையால் மலர்ந்த கொன்றை மலர்களைப் பார்த்துக் கார்காலம் என்று வருந்துகிறாய். இது உண்மையான கார்காலம் அன்று.' (462)

'வெற்றி வேந்தனின் பாசறையில் இருக்கும் தலைவன் உன்னைத் துறந்து வாழும் வல்லமையுடையவர் அல்லர். விரைவில் வருவர்; ஆகவே வருந்தற்க' (461)

'பகையரசர் நாட்டில் பெறப்படும் விலையுயர்ந்த அரிய பொருள்களைக் கொண்டு வருதற்காகக் காலம் தாழ்த்தனர்' (463)

'கணவனைப் பிரிந்த மகளிரின் கண் போல மலரும் கருவிளையும், அவரின் மேனியில் படரும் பசலை போல மலரும் பீர்க்கும் தோன்றும் பனிக் காலத்தே தலைவன் நின்னை மறந்து வாழ்பவரல்லர் (464)

'அரசனும் பகைவர் மீது கொண்ட சினம் தணிந்தா னாதலின் தலைவன் குதிரைகள் பூட்டிய நெடுந்தேரினை வேகமாகச் செலுத்தி வருவார்' (465)

'வினைமேற் சென்ற தலைவன் நின்னை நினைக்காரா யினும், அவரது அறிவு நின் மேனியின் அழகை மறக்க விடுமோ?'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

.....
உள்ளார் காதல ராயி னொள்ளிழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோநின் மாமைக் கவினே (470)

'போர் மேற்சென்ற அரசன் நீண்டநாள் தங்காது நம்மினும் விரைவான் என்று, சென்று மீண்டோர் கூறினராகலின் தலைவன் விரைவில் வருவான், வருந்தற்க' (467)

பாசறையிலும் இல்லத்திலும் தனித்துறையும் தலைவனும் தலைவியும் தூதாய் வந்த பாணனால் ஒருவர் நிலையை மற்றொருவர் உணர்வார்கள்.

''சங்க காலத்தில் இயற்றமிழ், புலவரிடத்தே வளர, இசையும் கூத்தும் பாணரிடத்தே வழிவழியாக வழங்கி வந்தன. பாட்டிடை எழும் பண், மக்கள் உள்ளத்தில் அன்பும் அருளும் வளர்வதற்குப் பெருந்துணையாய் இருத்தலின், பண்ணிசைத்து வாழும் மக்கள் பாணர் எனப் பட்டனர். வேந்தர் தம்மிற் பகைத்துப் படைகொண்டு போர் செய்யுமிடத்தும் பாணரும் புலவரும் தங்கு தடையாதும் இன்றி எங்கும் செல்வர்; போர்க்களத்தில் மன்னர்கள் மறவுணர்ச்சி மிகுந்து பகைவர் நாட்டினை அடர்ந்து அழித்து ஒழிப்பார்களாயின், அவர் செயலால் நாடு அடையும் கேட்டினை அவர்க்குத் தம் இசை வாயிலாக உணர்த்தி, அவர் உள்ளத்தில் அருளறம் தோன்றச் செய்வர். மறவெறி கொண்டு மனையறத்தில் மனங் கொள்ளாது பாசறைக்கண் நெடிதுறையும் வேந்தர்பால் சென்று மனை மகளின் காதல் மாண்பும் மனைவாழ்வின் இன்பச் சிறப்பும் இசையில் தொடுத்துப் பாடி, அவர் உள்ளத்து மறப் பண்பை மாற்றி மனை நலத்தை நினைப்பிப்பர்.

இசையும் கூத்தும் பயிலாது போர்த்துறையில் ஈடுபட்டு மற்போரிலும், நாடு காத்தலிலும் சிறந்த பாணர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும் உண்டு. பாண் மக்களுள் இசையும் கூத்தும் பயிலாது தாழ் நிலையில் வாழ்ந்தோர் தூண்டில் கொண்டு சென்று மீன் பிடித்து விற்று வாழ்ந்தனர். ஒரு சிலர் செல்வர் மனைக்கும், பரத்தையர் மனைக்கும் தூது சென்று அவரது புறத்தொழுக்கத்துக்கு வாயில்களாகப் பணிபுரிந்து வாழ்ந்தனர். பாணர்களின் செயல் வகை பற்றிப் பாணர், அகவுநர், கூத்தர், கோடியர், இயவர், பொருநர் எனப் பல பெயர்களால் குறிக்கப்படுவர். அவையனைத்தும் அவரவர் செய்தொழில் காரணமாகப் பிறந்தவையேயன்றிச் சாதிப் பெயர்கள் அல்ல என்பது தெளிவு.''[4]

''இசைக் கலைஞனாகிய பாணனுக்கும் முல்லைத் திணையில் இடமுண்டு. அவன் குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் தன் இசைத் திறனால் மகிழ்ச்சி அளிப்பதோடு அவர்களுக்கு உற்றுழி எல்லாம் உதவுபவனாகக் காணப்படுகிறான்'' என்பார் டாக்டர் மு. வ [5]

பருவ வரவின்கண் தலைவன் வரக் காலம் தாழ்ப்பின் பாணனைத் தூதாகத் தலைவிபால் அனுப்பி வைப்பான். அப்போது பாணனிடத்துத் தோழியும் தலைமகளும் கூறும் கூற்றுக்கள் நிகழும். தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனிடத்துத் தலைமகன் கூறுவதாகவும் கூற்று நிகழும்'' என்பார் வித்துவான் வீ. குமாரசாமி ஐயர்.[6]

தலைவியைப் பார்த்துப் போகலாம் என்று தூதாக வந்த பாணனிடம் தோழி, தலைவியின் ஆற்றாமை குறித்துப் பேசுவாள். 'கைவளை நெகிழவும் பொன்மேனி வாடவும் மலர்க் கண்கள் நீர் சொரியவும் பிரிந்து சென்ற

---

4. ஐங்குறுநூறு (பதி), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பக், 960-62.
5. முல்லைத் திணை, பக். 57
6. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக். 282

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவன் கார்காலம் வந்தும் வரவில்லை; அதனை உணராதவன் போல் வருகின்றாயே, பாணனே!' (471)

'சிறியாழ்ப்பாண, தலைவர் வருவேன் என்று சொல்லிய கார்காலம் வந்தது. அதனை எம்மைப்போல் அறியாது ஒழிந்தாலும் அவர் கூறியவை பொய்யாயின கண்டு நாங்கள் நாணி வருந்துவதனையும் அறியாமல் இருக்கின்றாரே, அதற்காகவே நாங்கள் வருந்துகிறோம்' (472)

தோழியின் சொற்களினால் தலைவனுடைய தொடிநிலை கலங்க வாடிய தோளையும், வடிநலம் இழந்த கண்ணையும் நோக்கிப் பாணன் புலம்புவான். அதனைக் கண்டு தலைவி தோழியிடம், 'பாணன் நம் காதலரைத் தலைவனாக உடையனாயினும் நம்பால் மிக்க அன்புடையனாயிருக்கிறான், என்று கூறி மகிழ்வாள். (475)

'பகைவர் அரண்களை அழித்த விரைவாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தி வழிகள் பல கடந்து நம் காதலரைக் கொண்டு வருவேன் என்று கூறும் பாணனின் அறிவு நன்மையுடைத்து' என்று பாணனைப் போற்றுவாள் (474)

'பாணனே, தலைவரை நினைந்து அவர் சென்ற நாட்டிற்குச் செல்லுதலை நீ விரும்பினால் பொய் பேசுவதில் வல்லவரான தலைவரைப் போல எம்மை மறந்து விடாதே' என்பாள். (473)

'ஆக்களை உடைய ஆயர்கள் முல்லைப்பூ மாலைகளை அணிந்து திரியும் அன்பில்லாத மாலைக்காலம், தலைவர் சென்ற நாட்டில் உண்டா, பாணனே' என்று கேட்டு ஏங்குவாள்.

கருவி வானங் கார்சிறந் தார்ப்பப்
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பின் மாலையு முடைத்தோ
வன்புறைப் பாண அவர் சென்ற நாடே (476)

தலைவிக்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன் தலைவியினுடைய ஆற்றாமைத் துன்பத்தையெல்லாம் தலைவனுக்குக் கூறுவான்.

'பெருமை, உன்னையே விரும்பி வாழும் தலைவி இல்லின் கண்ணே உன் பிரிவைத் தாங்காது கண்ணீர் சொரிந்து வருந்துகிறாள். அவள் வருத்தத்தை நான் சொல்லக் கேட்டும் நீ மருளாமல் இருக்கிறாய். ஆகவே உனக்கு யாம் பாணரும் ஆகோம். எமக்கு நீ தலைவனும் ஆகாய்!'

நினைக்குயாம் பாணரு மல்லே மெமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரித ழுண்க ணுகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே (480)

தூதாய் வந்த பாணனிடம் தலைவியின் நிலை குறித்துத் தெரிந்து கொள்வான் தலைவன். 'தலைவி சொல்லிய திறம் கூறுக, என்று கேட்டு மகிழ்வான். தலைவியின் பதில் தன் துன்பத்தைத் துடைக்கும் மருந்தாகும் என்று விரும்புவான்.

'முல்லை நல்யாழ்ப்பாண, நான் பெரிதும் விரும்பும் என் காதலி குறித்த கார்காலத்தில் நான் திரும்பி வரவில்லையென்று, வாடிய நெற்றியினையுடையளாய்த் துன்பம் மிகுவதால் வாழ்க்கையில் வெறுப்புற்று உன்னிடத்துச் சொல்லிய சொற்களை நீ எமக்குக் கூறுக' (478)

'வேற்று நாட்டில் வந்துள்ள நான் நாள்தோறும் வாடைக் காற்றினால் வரும் பொறுத்தற்கரிய துன்பத்தால் வாடி வருந்துகின்றேன். அவ்வாறு வருந்தும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்குப் பனிமலர்க் கண்ணையுடைய காதலி விடுத்த பதிலை நீ சொல்லக் கேட்குந்தொறும் வாடைத் துன்பத் திற்கு அருமருந்தாய் இனிமை தருகிறது.' (479)

இதற்குப் பிறகு, சிறிது நாளில் தலைவியைக் காண வருவேன் என்று பாணனிடம் உறுதி கூறுவான்; தலைவிக்குத் துணையாகத் தங்குமாறும் வேண்டுவான், தலைவன்.

'பனிமலர் நெடுங்கண் பசலைபடரத் துன்பத்தினை அடைகின்ற தலைவியினுடைய கையற்ற நெஞ்சிற்கு உசாத் துணையாகச் சிறிது காலம் தங்குவையாயின் என்னுடைய தேர் அங்கு வருவதைக் காண்பாய்'

பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ(டு) அரும்படர் உழப்போள்
கையறு நெஞ்சிற்(கு) உயவுத் துணையாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்னாற் பாணவெந் தேரே (477)

இவ்வாறு பாணனால் தலைவியின் துயர நிலையை உள்ளவாறு அறிந்த தலைவன், தான் மேற்கொண்ட வினை முற்றுப் பெற்றதால் விரைந்து செல்லும் குதிரை பூட்டிய தேரிலேறித் தலைவியைக் காண வருவான்.

அரசனது போர்வினை முடிந்து மீளும் தலைவன் தேரினை விரைவாகச் செலுத்துக என்று தேர்ப்பாக னுக்குச் சொல்லுவான்.

'தேர்ப்பாகனே, பருத்த தோள்களையும் அழகிய அல்குலையும் செவ்விய அணிகலன்களையும் உடைய தலைவியை நினைத்தலால் வரும் வருத்தம் தீர, குதிரை பூட்டிய தேரை, அக்குதிரைகள் விரைந்து செல்லுமாறு தாற்று முற் கோலாற் குத்திச் செலுத்துக' (481)

'வெற்றி பெற்ற தானையையுடைய வேந்தனோடு இடைச்சுரத்தில் ஒரு பொழுது தங்கினும் அஃது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊழியினும் நெடிதாய்த் தோன்றும். ஆகவே தலைவிக்குப் பெரு விருந்தாக விரைந்து தேரைச் செலுத்துக (482)

'வேனிற்கால வெம்மை நீங்கக் கார்கால மழை பெய்துள்ளதால் காடு அழகு பெற்றுள்ளது. செல்லும் நெறியில் மலர்கள் விரிந்து மணம் வீசுகின்றன. குதிரைகளும் விரைந்து செல்லும் இயல்பின. தலைவியைப் பிரிந்து நீண்ட காலமாகிவிட்டது. ஆதலால் தேரின் பெருமை சிறக்க விரைவாகச் செலுத்துக. (483, 484)

'பொறுத்தற்கரிய பிரிவுத் துன்பத்தால் எய்தும் அவலம் தலைவியை விட்டு நீங்கவும், தலைவியின் பெருந்தோள் நலமுற யாம் இயங்கவும் தேரைச் செலுத்துக' (485)

'வேனிற்காலம் முடிந்து கார்காலம் தொடங்கியது. பிரிவுத் துன்பத்தால் வருந்தும் தலைவி நம்மைக் கருதும் காலம் இது. ஆகவே பறவை போன்று நிலந் தீண்டாத செலவினையுடைய குதிரை பூட்டிய தேரை விரைவாகத் தேர்ந்து செலுத்துக' (486)

'மதியுடை வலவ, இக்கார்காலம் பிரிந்தோரை நினைந்து வருந்தும் காலமாகும். செறிந்த வளையலை அணிந்துள்ள தலைவியின் நெஞ்சம் மகிழ்ச்சியுறத் தேரினை விரைந்து செலுத்துக.

....

இதுமற் பிரிந்தோ(ர்) உள்ளும் பொழுதே
செறிதொடி யுள்ள முவப்ப
மதியுடை வலவ வேமதி தேரே (487)

'இடியும் மின்னலும் கூடிய வானம் மழை பெய்யத் தொடங்கியது. பெருமை நிறைந்த தலைவி நம்மை நினைத்து ஏங்கும் காலம் இதுவாகும். அவ் ஏக்கம் நீங்குமாறு தேரைச் செலுத்துக' (488)

'அஞ்சிறை வண்டினம் மொய்ப்ப முல்லைப் பூக்கள் மலரும் மாலைப் பொழுதில் வருந்தும் நெஞ்சினை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுடைய தலைவி நம் வரவு கண்டு மகிழும் வண்ணம் நுண்புரி வண்கயிற்றினை இயக்கித் தேரினைச் செலுத்துக' (489)

'அழகிய தலைவியை நாம் அடைவதற்காகக் கார் காலம் இங்கே வந்துள்ளது. அங்கே தலைவி அடைந்துள்ள பிரிவுத் துன்பமாகிய நோய் நீங்குமாறு நெடிய தேரைச் செலுத்துக'

அந்தீங் கிளவி தான்றர வெம்வயின்
வந்தன்று மாதோ காரே யாவயின்
ஆய்தொடி யரும்படர் தீர
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே (490)

இவ்வாறு வினைவயிற் பிரிந்திருந்த தலைவன் வினை முடிந்தபின் தேரேறித் தலைவியை அடைவான். பிரிந்திருந்த தலைவனும் தலைவியும் கூடி மகிழ்ந்திருப்பர். வினை முடிந்து திரும்பிய தலைவன் தலைவியின் அழகையும் பெருமையையும் புகழ்ந்து கூறுவான்.

'மடந்தையே! கார்காலம் இடையீடின்றி வருத்துதலால் துன்பம்மிக்கு வருந்தும் உள்ளத்தோடு கூடிய நான் உன்னுடைய அழகு துணைசெய்ய விரைந்து வந்தேன்' (491)

'கார்காலத் தொடக்கத்தில் மயில்கள் ஆடின; முல்லைப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின; மான்கள் மருண்டு நோக்கின; அவைகளைக் காணும்பொழுது தலைவியின் மயில் போன்ற சாயலையும், முல்லை மணம் வீசும் நெற்றியினையும், மான் போன்ற மருண்ட நோக்கினையும் நினைப்பித்தன. ஆகவே மேகத்தினும் விரைந்து வந்தேன்.

நின்னே போலு மஞ்ஞை யாலநின்
நன்னுத னாறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுத லரிவை காரினும் விரைந்தே (492)

'தலைவியே உன்னை நினைத்து வரும்போது ஆமாவின் நல்லேறுகள் சிலைக்கவும், விசும்பில் இடியேறுகள் முழங்கவும், பெண்மான்கள் தம் கன்றோடு நிரியவும் கார்காலம் தொடங்கியது' (493)

'வண்டுகள் தேனுண்டு பாடவும், தேரைகள் ஒலிக்கவும், முல்லைப் பூக்கள் மலரவும், கார்காலத்து மாலைப் பொழுது இன்பம் செய்தது. ஆகவே நீ குறித்த காலத்தில் தப்பாமல் வந்து சேர்ந்தோம். வருத்தம் தீர்ந்து மகிழ்ச்சி கொள்க.' (494)

'முள் போன்று கூரிய பற்களையுடைய தலைவியே! யாம் பிரிந்து சென்ற நிலத்தில் காடுகள், பலவாய மலர்களின் மணம் வீச விளங்கின. அவை உன் கூந்தல் நலம் புனைய நினைக்குந்தோறும், உன் பிரிவால் உண்டான தனிமை வருத்த, வருந்தி வந்தமையால், அத்தனிமை நீக்கி இன்புறுத்தின.

இனி, குறித்த பருவத்தின் கண் தலைவன் வந்த போது, தோழியும் தலைவியின் சிறப்பையும் பொலிவையும் புகழ்ந்து கூறுவாள்.

'பேரமர்க் கண்களையுடைய தலைவியே, விலங்குகள் புதர்களில் புக்கு வாழவும், வரகு பூங்கொத்து எடுத்துத் திகழவும், மாமலை புலம்பவும், கார்காலமழை முழக்கிட்டு அலைக்கவும் தொடங்கிய கார்காலத்தில் உன்னைப் பிரிந்த தலைவர் உன் தோளுக்குத் துணையாய் வந்தார். ஆகவே போதவிழ் கூந்தலில் மலர்களை அணிந்து மகிழ்வாயாக.

மாபுதல் சேர வரகிணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித் தலைப்பப்
பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே (496)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கோதை போன்று கொன்றை மலர்கள் மலரவும் புற்றுக்களில் ஈயல்கள் வெளிப்படவும் விலங்குகள் உணவினை வெறுக்கவும் தொடங்கிய கார்காலத்தில் உன்னை நினைந்து தப்பமால் தலைவர் வந்து சேர்ந்தார். (497)

'வேந்தன் வினைமுற்றியதால் நெடுந்தேர் ஏறித் தலைவன் வந்தமையால் உன் தோள்கள் வனப்புற்றன; தொடி கழலாமல் நின்றன. நீண்ட கண்கள் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.

தோள்கவி னெய்தின தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப் புற்றன
ஏந்துகோட் டியானை வேந்துதொழில் விட்டென
விரைசெல நெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே (498)

'பிடவங்கள் மலரவும், முல்லைகள் அரும்புகளை ஈனவும், கார்காலத்தில் அழகு பெற்ற காட்டினைத் தலைவி கண்டால் பெரிதும் வருந்துவள் எனக் கருதி முடிக்க வேண்டிய வினையினையும் மேற்கொள்ளாது இங்கு வந்தார் தலைவர். தலைவி அழகிய நலம்பெற வேண்டும் என்பதே தலைவனின் விருப்பமாகும். (499)

சில நேரங்களில் வினைமுற்றி வந்த தலைவனையும் தோழி சிறப்பித்துக் கூறுவாள்.

'வெற்றி பொருந்திய தோன்றலே, நீ குறித்த காலத்தில் தலைவியின் நலம் துய்க்க வந்ததால், உன்னைப் பிரிந்திருந்த காலத்தில் கொன்றைப் பூவைப் போலப் பசலை படர்ந்திருந்த மையுண்ட கண்கள், இப்போது குன்றிடத்தே உள்ள நெடிய சுனைக்கண் பூத்த குவளை மலர் போல பழைய அழகைப் பெற்றன.

கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்
குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்கவின் பெற்றன விவட்கே வெல்போர்
வியனெடும் பாசறை நீடிய
வயமான் தோன்றல்நீ வந்த மாறே (500)

இவ்வாறு தலைவனும் தலைவியும் இல்லில் இருத்தலாகிய ஒழுக்கத்தில் தொடங்கி, இடையில் வினையிற் பிரியும் போது இருவரும் தனித்திருத்தலைக் கூறி முடிவில் தலைவனும் தலைவியும் மீண்டும் இல்லில் வாழும் நிலையைக் கூறுமுகமாக முல்லை வாழ்க்கையை ஐங்குறுநூறு விளக்குகிறது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

குறுந்தொகை

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஒங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்னும் எட்டுத் தொகை நூல்களின் பெயர்களைக் கூறும் பழம்பாடல் 'நல்ல' என்னும் சிறப்புச் சொல்லைச் சேர்த்தே குறுந்தொகையினைக் குறிப்பிடுகின்றது. இத்தொகை நூலில் முல்லைத் திணைக்கண் ஏறக்குறைய நாற்பத்தைந்து பாடல்கள் உள்ளன. 'இருத்தலும் இருத்தல் நிமித்தமும்' ஆகிய முல்லைத் திணைக்குரிய ஒழுக்கம் (உரிப்பொருள்) வேற்றுத் திணைப் பாடல்களிலும் காணப்படுகின்றன என்றும், அவற்றையும் ஒருங்கு சேர்த்து எண்ணுமிடத்து இக்குறுந்தொகையில் முல்லைக்குரிய இன்பவொழுக்கம் நுவலும் அகப்பாடல்கள் எழுபத்தைந்திற்குமேல் உள்ளன என்றும் கூறுகின்றார் அறிஞர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.[1]

வினைமேற் சென்ற தலைவனை எதிர்பார்த்து ஏங்கிப் பிரிவாற்றாது வருந்தும் தலைவி, தலைவியை

1. குறுந்தொகைச் சொற்பொழிவுகள், பக். 59

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆற்றுவிக்கும் தோழி, வினைமுடித்து மீண்டு தலைவியை அடையும் தலைவன், தலைவன் தலைவியர் இல்லற வாழ்வைக் கண்டு மகிழ்ந்து போற்றும் செவிலி ஆகியோர் இடம் பெறும் முல்லை வாழ்க்கையைக் குறுந்தொகைப் பாடல்கள் வழிக் காண்போம்.

தலைவி

'செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாம்கலந்த'பின் களவொழுக் கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன், தலைவியை வரைந்து கொள்வது குறித்து வரைவிடை வைத்துப் பொருளை நாடிப் பிரிந்து சென்றான். பொருள் பெற்றுத் திரும்பி வந்து தலைவியை மணந்தான். இவர்களின் இல்லறச் சிறப்பைக் காண வந்த தோழி, தலைவியைப் பார்த்துத் 'தலைவன் வரைந்து கொள்ளும் வரையில் எவ்வாறு ஆற்றியிருந்தாய்' என்று கேட்டாள்.

அதற்குத் தலைவி, 'தலைவன் வரைவிடை வைத்துப் பொருளை நாடிப் பிரிந்து சென்றிருந்தபோது நான் ஆற்றாது வருந்தித் தலைவனை எதிர் நோக்கி இருந்தேன். அப்போது ஒரு நாள் நம் அயல் வீட்டுப் பெண்மணி, 'தலைவன் வரைவொடு வருவான்' என்னும் பொருளில் ''வரும், வரும்'' என்றாள். அந்த நன்மை தரும் உறுதி யுரையினால்தான் நான் ஆற்றியிருந்தேன்' என்று பதிலிறுத்தாள்.

'தோழி, கரிய சிறைகளையும் கூரிய நகங்களையும் உடைய வெளவால், சர்க்கரையிட்ட பால் போல் இனிக்கும் தேமாம்பழத்தையும் புளிப்பான நெல்லிக் காயையும் உண்ட பின் முள்ளற்ற பெரிய மூங்கிலில் தூங்கும் நாடனாகிய தலைவன், ''வரும்'' என்றாள் நம் அயலிலாட்டி; அவள் அமிழ்தத்தை உண்பாளாக.'

அமிழ்தம் உண்க நம்அயல்இ லாட்டி
பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி அயலது
முள்இல் அம்பணை மூங்கிலில் தூங்கும்
கழைநிவந்து ஓங்கிய சோலை
மலைகெழு நாடனை வரும்என் றோளே! (குறுந் 201)

வினைமேற் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவ தாகக் குறித்த கார்காலம் வந்தது. தலைவன் வரவில்லை. அவனை நினைத்து நெஞ்சழிந்து தலைவி வருந்துகிறாள்.

'முல்லைப் பூக்களும் மலர்ந்தன. பனையோலைப் பறியையுடைய இடையர்கள் மந்தையில் சென்று தங்கினர். மந்தையிற் கறந்த பாலை வீட்டிற் சேர்த்து விட்டு இடைமகன் கூழோடு திரும்பினான். அவன் தலையிலே முல்லையரும்புகளைச் சூடியிருந்தான். இத்தகைய கார்காலத்திலும் தலைவரோ வாராதிருக் கின்றார்.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே (221)

'உழுத நிலத்தில் விதைப்பதற்காக உழவர்கள் காலையில் தங்கள் ஓலைப்பெட்டிகளில் வித்துகளைக் கொண்டு செல்வது வழக்கம். வித்துகளைத் தூவிய பின் மாலையில் வீடு திரும்பும்போது அவ்ஓலைப்பெட்டிகள் நிறைய முல்லைப் போதுகளைக் கொண்டு வருகின்றனர். தெளிந்த ஓசையுடைய மணிகள் ஒலிக்கச் சுரவழியைக் கடந்து நம்மை நாடி வரும் தலைவருடைய தேர் வருகின்றது என்னும் உரை வரவில்லை.' (155)

கார்காலத்தில் புணர்தற் குறிப்புடன் துள்ளி விளையாடும் மான்கள் தலைவியின் பிரிவுத் துன்பத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகுதிப்படுத்தின. விலங்கினங்களுக்குள்ள காதலன்புகூட தலைவனிடத்தில் இல்லையே என்று மனம் நோகின்றாள்.

'பெண் மானோடு தெளிந்த நீரைக் குடித்து மகிழ்ந்த கலைமான் துள்ளி விளையாடுகின்றது. பிரிந்து சென்றிருக்கிற தலைவர் திரும்பி வருவதை விரும்பி வருந்தி நொந்து, வாழ்வதற்காக உயிரை வைத்துள்ளீரோ என்று இடித்துரைத்தவாறு மழையைப் பெய்யும் கார்காலமும் வந்தது.' (65)

'மானேறுகள் தம்முடைய இளம் பெண் மான்களைத் தழுவிக் கொண்டு மயக்கம் மிகுந்து காட்டின் புதல்களிலே மறைந்து ஒடுங்குகின்றன. துதிக்கையினையுடைய களிறுகள் தத்தம் பிடிகளோடு சேர்ந்து கார்மேகங்கள் அழகுற்று விளங்கும் மலைப்பக்கங்களைச் சென்றடைகின்றன. கார்காலத்துப் பெருமழையும் மாலைக் காலத்திலே வந்துள்ளது. நம் பொன்மேனியின் நன்னலத்தைச் சிதைத்த தலைவர் இன்னமும் வாராராயின் நம் இன்னுயிரின் நிலைதான் என்னாகுமோ?'

மாலை வந்தன்று மாரி மாமழை
பொன்னேர் மேனி நன்னலம் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்
என்னாம் தோழிநம் இன்னுயிர் நிலையே (319)

கன்றைப் பிரிந்து மேய்ச்சல் நிலத்திற்குச் சென்று மேய்ந்து எருதோடு திரும்பிய தாய்ப்பசு தன் கன்றுகளுக்குப் பாலூட்டி மாலைப் பொழுதில் மகிழ்ந்திருக்கிறது. இதைக் காணும் தலைவிக்கு, பொருள் தேடி வருவதற்காகச் சென்ற தலைவன் திரும்பி வந்து தன்னோடு மகிழ்ந்திருக்கவில்லையே என்னும் ஏக்கம் உண்டாகிறது.

'தண்ணெனத் தூற்றும் பனிக்கால மாதத்தின், மேய்ச்சல் நிலத்தில் பயிரை மேய்ந்ததால் பருத்த முலைக் காம்புகளுடன் கூடிய மடியையுடைய பசுக்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாலை ஒழுக விட்டவாறு தம் கன்றுகளை நினைந்து எருதோடு ஊருக்குள் மீண்டு வருகின்ற மாலைக்காலம் இது. இந்த மாலைக் காலத்தில் பொருள் தேடுவதற்காகத் தம்மை விட்டுப் பிரிந்த தலைவர்கள், மீண்டும் தம் மிடத்தில் வரக்காணும் பேறு பெற்ற தலைவியர் தவஞ் செய்தோரேயாவர்!'

நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக்கடுந் திங்கள்
புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலம்தூங்கு அணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி உள்ளி நிறையிறந்து
ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறல் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே (344)

"பசு தன் கன்றிற்கு வேண்டிய பால் கொடுத்து எஞ்சியதைக் கோவலர்க்களித்தலும் தலைவன் தான் பெற்ற பொருளால் தலைவியை மகிழச் செய்து பின்னர் சுற்றம் பேணலும் ஒப்பாகும். இவ்வொருபுடை ஒப்புமை யால் பழந்தமிழ் மக்கள் தங்களைச் சுற்றியுள்ள ஆடு மாடு களின் வாழ்க்கை முறையையே தங்கள் வாழ்க்கை ஒழுக்கத்திற்கு உரிய இலக்கிய மரபாகக் கொண்டனர் என்பது தெளிவாகும்... பசு, கன்று இரண்டின் ஒரு நாள் வாழ்க்கையையே, தலைவன் தலைவி இருவர் தம் ஓராண்டு கால வாழ்க்கைக்குரிய இலக்கியக் கொள்கையாகச் சங்க காலப் புலவர்கள் கொண்டனர். 'காரும் மாலையும் முல்லை' என்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இச்செய்திகளால் தொடக்ககாலப் புலவர்கள் மிகுதியும் போலச் செய்தல் கொள்கையையே (Theory of Imitation) பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரிய வருகிறது" என்று அ. சீநிவாசன் [2] கூறும் கருத்து எண்ணி மகிழ்தற்குரியது.

---

2. பழசும் புதுசும், பக். 45

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழியின் ஆறுதல் மொழி கேட்டுத் தலைவி மாலைப் பொழுதினை ஒருவாறு ஆற்றியிருந்தாலும், இரவில் உறக்கம் கொள்ளாது துன்பப்படுகின்றாள். யாமத்து வேளையிலே கேட்கும் எருமையின் மணியோசை, அவளுடைய ஏக்கத்தை மிகுதிப்படுத்துகின்றது.

'மழை பெய்யாததனால் புழுதி படிந்த யானையைப் போலத் தோன்றும் பெரிய துருகற்கள் நிறைந்த மலைவழியைக் கடந்து சென்ற தலைவர் அழகிய பணைத்த எம் தோள்களை நினையாதவராயிருக்கின்றார்! அதனால் முருக்கிய கொம்புகளையுடைய கரிய எருமையினது கழுத்திலே கட்டப்பட்டுள்ள மணியானது அது நடக்குந்தோறும் ஒலிக்கின்ற யாமத்து வேளை தாம் வருவதற்குரிய செவ்வியாக இருப்பவும் வாராராயினர்'

பணைத்தோள்களை நினைப்பாராயின் அவற்றோடு பொருந்தி இன்பங்காணும் ஆர்வத்தால் வந்திருப்பார் என்பது தலைவியின் ஏக்கத்துக்குக் காரணம்!

இவ்வாறு மாலையும் இரவும் தலைவனது பிரிவை நினைவூட்டிப் பெரிதாக வருத்தத்தைத் தருகின்றன தலைவிக்கு. மாலைப் பொழுதைக் கடத்தலே அரிதாயிருக்க, அதனைக் கடந்ததும் இரவுப் பொழுதாகிய வெள்ளத்துள் சிக்கித் தவிக்கும் தலைவி ஆற்றியிருக்கும் வழியறியாது அலமருகின்றாள்!

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினம் தணிந்த கையறு மாலை
உயிர்வரம் பாக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே (387)

'பகற் பொழுது நீங்க முல்லைப் பூக்கள் மலர்ந்தன. கதிரவன் வெப்பமும் குறைந்தது. மகளிர் செயலறுதற்குரிய இம்மாலைக் காலத்தை, இரவுப் பொழுதை எல்லையாக வைத்துக் கடந்தனமாயின், அவ் இரவுப் பொழுதோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடலைக் காட்டிலும் பெரிதாயிருக்கின்றது. மாலைக் காலத்தைக் கடத்தலால் வரும் பயன் யாது?'

கார்காலத்தின் வரவைக் கண்ட தலைவியின் உள்ளத்திலே பிரிவினால் ஏற்பட்ட வருத்தம் மிகுதியாகின்றது. 'இளமைச் செவ்வியை நோக்காது பொருளையே விரும்பிப் பிரிந்த தலைவர் எங்குள்ளாரோ' என்றும், 'இக்கார்காலம் முல்லைக் கொடியின் அரும்புகளைத் தன் பற்களாகக் கொண்டு சிரிக்கின்றதைக் காண்' என்றும் ஏங்குகிறாள்.

இளமை பாராார் வளம்நகைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ எனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே (126)

'இது கார்காலம் அன்று. கார்காலமானால் தலைவர் வந்திருப்பார். ஏனெனில் அவர் பொய் கூறார்' என்று வருந்தும் தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றனர். இந்தப் பொய்யான ஆறுதல் தலைவியின் வருத்தத்தைப் போக்க உதவவில்லை.

'செல்வச் சிறுவர்களின் சிறிய அடிகளில் விளங்கும் பொன்னால் செய்யப்பெற்ற கிண்கிணி போன்று அரும்புகளை ஈன்றிருக்கின்ற கொன்றை மரம் குருந்த மரத்தோடு சேர்ந்து சுழலும். பெரிதும் குளிர்ச்சியுடைய இந்தக் காலத்தையும் 'கார்காலம் அன்று' என்று கூறினால், இதுவெல்லாம் கனவுதானோ என்று கேட்க விருப்புகின்றேன்' என்கிறாள் தலைவி.

குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
கார்அன்று என்றி ஆயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே! (148)

இதற்கு மாறாகச் சில நேரங்களில் உண்மையான கார் காலத்தையும் தலைவன் வாராமையைக் காரணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டிக் கார்காலம் என்று தலைவி ஏற்க மறுக்கின்றாள்.

'தலைவர் பொய் கூறாத வாய்மையாளர். ஆகவே பெண்களின் மலர் சூடிய கூந்தலைப் போன்று மலர்கள் விரிந்து காணப்படும் கானம், கொன்றை மலரோடு கவின் பெற்றுக் கார்காலம் என்று காட்டினும், தலைவர் வராததனால் நான் அதனைக் கார்காலம் என்று கொள்ள மாட்டேன்' என்கிறாள்.

கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய்வழங் கலரே (21)

எவ்வளவுதான் தலைவன்மீது நம்பிக்கை வைத்துத் தலைவி ஆற்றியிருந்தாலும் கார்கால நிகழ்ச்சிகள் தலைவியின் காம நோயை மிகுதியாக்கும். அப்போது தலைவனைப் பிரிந்த ஏக்கம் தலைவியை இடையறாது துன்புறுத்தும். தலைவி ஆற்றவியலாது அலமருவாள்! தூதும் வரவில்லையே என்று நோவாள்.

'செக்கர் வானத்தில் கதிரவன் மறையும் பொழுது முல்லைப்பூ மலர்கின்ற மாலைக்காலம் வந்ததென்பர் அறிவு மயங்கியோர். என்னைப் போலத் துணைவர் உடன் இல்லாதவர்க்குக் கோழி கூவுகின்ற விடியற்காலமும் மாலைக்காலம் போல்வதுதான். பகற்பொழுதும் மாலைக் காலந்தான்'

மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே (234)

'கோங்க மரத்தில் இன வண்டுகள் ஒலிக்க முதற்பூக்கள் தோன்றின. பொருளீட்டுதலை விரும்பிச் சென்ற தலைவர் மீண்டும் வருதலை அறிவிக்கின்ற தூதுகளும் வரவில்லை. நம்முடனான இனிய துயிலையும் அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறந்தார். அதனால் நறுமணமுள்ள கூந்தற் பாயலையும் நினையாராயினர்.'

இவ்வாறு தம்மையும் தம்முடனான இனிய துயிலையும் மறந்து பிரிந்துறையும் தலைவர் கார்காலத்தில் குறித்தவாறு வாராமை கண்டு நெஞ்சழிவாள் தலைவி. அப்போது, தன்னுடைய அழிநிலையைத் தலைவர்க்கு யாரேனும் எடுத்துச் சொன்னால் நல்லது என்பாள்.

'நம்முடைய தோட்டத்துப் புதலில் படர்ந்து மழைக் காலத்தில் மலரும் பீர்க்கின் மலர்கள் சிலவற்றை அப்படியே கொண்டு சென்று தலைவரிடத்தில் காண்பித்து 'நின்னைப் பிரிந்து வாழும் மணமிக்க நெற்றியையுடைய தலைவியும் இவ்வாறு ஆயினள்' என்று கூறுவாரைப் பெற்றால் நல்லது.' (98)

இவ்வாறு நெஞ்சழிந்த தலைவி பிரிவிடை ஆற்றாளாகி இரவு முழுவதும் உறங்காமல் தலைவனை நினைந்து ஏக்கமுறுகிறாள். தொழுவத்தில் ஏறு பசுவுடன் புணரும் போது ஏற்றின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணி ஒலிக்கிறது. இம்மணியோசையைக் கேட்கும் தலைவிக்குப் புணர்ச்சி வேட்கை எழுகிறது.

'தழைத்த கூந்தலுடன் பெருத்த என் தோள்களைத் தடவி எனக்கு ஆறுதல் கூறிப் பின் வளையல்கள் நெகிழுமாறு பொருளீட்டுதற்காகப் பிரிந்தார் தலைவர். அவர், வெஞ்சினத்தையுடைய பாம்பின் தலை துண்டித்துப் போகும்படி இடியேறு ஒலிக்கின்ற நடுயாம வேளையில் தொழுவத்தில் ஆனேறு பசுக்களை விரும்பிச் செல்லுந் தோறும் ஒலிக்கின்ற ஒற்றை மணியின் குரலை அறிவாரோ?' என்று கேட்பதன் வழி தன் உள்ளத்து எழும் வேதனையைப் புலப்படுத்துகிறாள் தலைவி.

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்
நல்லேறு இயங்குதொறு இயம்பும்
பல்லான் தொழுவத்து ஒருமணிக் குரலே! (190)

தொழுவத்தில் நடுயாம வேளையில் நல்லேற்றின் ஒரு மணிக் குரலைக் கேட்டுப் புணர்ச்சி வேட்கை எழ வேதனையடைந்த தலைவி, பறவைக் கூட்டங்கள் பகற்பொழுதில் தாம் புணர்ந்தமையினால் எழுப்பும் தீங்குரலைக் கேட்டுத் தாங்கொணாத துயர் அடைந்தாள். இதற்குக் காரணரான தலைவன்மீது சினமுற்றுத் 'தலைவன்வரின் அவனைத் தழுவேன்' என்கிறாள்.

'மரக்கிளைகளில் உள்ள பறவைக் கூட்டங்கள் தத்தம் துணைகளோடு கூடியிருந்தமையினால், பிரிந்தோர் வருந்துமாறு, தம் இனிய குரலினாலே அகவும். அதனைக் கேட்டும் திரும்பி வாராத தலைவர் நமக்கு அயன்மை யுடையவர் ஆனார். அதனால் அவர் மீண்டும் வந்தால், 'எம் கூந்தலை ஒப்பனை செய்யற்க; எம்மையும் தொடாதே என்று கூறுவேன்.'

ஏதி லாளர் இவண்வரின் போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்மும் தொடாஅல் என்குவெம் மன்னே (191)

தன்னைப் பொருதழிக்கும் பகையாகிய வாடைக் காற்று வருத்தும் காலத்திலும் வாராத தலைவனைக் குறித்துத் தலைவி மனம் நோகின்றாள். இறந்துபடுவேன் என்கிறாள்.

'நீர்நிலையிலுள்ள நீல மலர்களை மலரச் செய்தும், புதலிலுள்ள கருவிளை மலர்களை அசைத்தும், ஈங்கைச் செடியின் அரும்புகளை அவிழ்த்தும், வண்ணமலர்கள் பலவற்றை உதிர்த்தும் வீசுகின்றது வாடைக்காற்று. 'இந்த வாடைக் காற்று நம் தலைவிக்கு என்ன அன்பத்தைச் செய்ததோ, என்னாயினளோ அவள்,'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கவலையுறாத நம் தலைவர், இனி வாராராயினும், அல்லது வரினும் நமக்கு என்ன உறவாவார். அதற்குள் நாம் இறந்து படுவோமே' (110)

தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலத்தின் வரவினைக் கண்ட தலைவி, குறித்தவாறு அவன் வாராததற்குக் கலக்கமுறுவாள். அப்போது 'தலைவன் மேற்கொண்ட வினை முற்ற முடியாமல் மீள்வனோ' என்று தலைவி மயங்குவதும் உண்டு.

'இதோ கார்காலம் வந்து விட்டது. பிச்சியின் அரும்புகள் நன்கு சிவந்துள்ளன. இது கண்டு நான் மயங்கினேன். மழை பொழியும் மேகங்களின் முழக்கத்தை நள்ளிரவில் என்னைப் பிரிந்துறையும் தலைவர் கேட்பின், அவர் நிலை என்னாகும்? நம்மை நினைந்து செய்வினை முடியாது மீள்வரோ என்று அஞ்சுகிறேன்,' என்று கூறுகின்றாள். தன் மயக்கத்திற்குக் காரணம் 'ஆற்றாமையன்று, தலைவனுக்காகக் கொள்ளும் அச்சமே' என்பதைத் தெளிவுறுத்துகிறாள். என்னே தலைவியின் அருமைப் பண்பு!

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே
யானே மருள்வென் தோழி பானாள்
இன்னும் தமியர் கேட்பின் பெயர்த்தும்
என்னா குவர்சொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே (94)

வினைமேற் சென்ற தலைவன் தன்னிடத்தில் கொண்ட பெருங்காதலால் வினைமுடியாது இடையில் மீள்வதும் கூடும் என்று முதலில் எண்ணிய தலைவி, பின்னர் வினை முடித்த பின்பே வருவான் எனத் துணிகின்றாள். அது வரை ஆற்றியிருக்க வேண்டிய தன் கடமையை உணர்கிறாள். அதனால் தான் ஆற்றியிருப்பதாகவும் உரைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றாள். இதன் வழி தலைவியின் முல்லை வாழ்க்கை சிறப்புறுகின்றது.

'குரவமும் புன்கும் தழைத்து மலர்ந்து மணம் பரப்பச் சோலைகள் அழகாய் விளங்குகின்றன. கிளைகள் எல்லாம் கண்ணுக்கு இனிதாயுள்ளன. இவ்வாறான இனிய காலத்திலும் காதலர் நம்மை நினையாது மறந்தாராயினும், செய்வினை முடியாது மீளுதல் ஆண்மையன்று எனப் பெரியோர் கருதினர். இதனை முன்பு துணியாத என் நெஞ்சம் இப்போது துணிந்துள்ளதால் நான் ஆற்றியிருந்து வாழ்வேன். இத்துணிபிற்கு என் தறுகண்மை துணையாயிற்று' என்கிறாள். தலைவியின் கற்புநலம் இருந்தவாறென்னே! (341)

தோழி

வினைமேற் சென்ற தலைவனை எதிர்பார்த்து ஏங்கிப் பிரிவாற்றாது வருந்தும் தலைவியைத் தோழி ஆறுதல் கூறி ஆற்றுவிக்கின்றாள். தலைவியின் இன்ப துன்பத்தில் பங்கேற்கும் தோழியின் நிலையைத் தலைவியோடு சேர்த்து 'ஒரே எண்ணம் கொண்ட இரு உள்ளங்கள், ஒரே துடிப்பைக் கொண்ட இரு இதயங்கள்'

Two souls with but a single thought,
Two hearts that beat as one

என்று ஒப்பிட்டுக் கூறலாம்!

கார்காலம் வந்து தலைவி துன்புறும்போது அவளின் துன்பத்தை மாற்றும் பொருட்டுத் தோழி, 'இது கார்கால மன்று, இப்போது பெய்வது வம்ப மழை; தலைவர் குறித்த நேரத்தில் தவறாது வருவார்; வருந்த வேண்டா' என்று தேறுதல் மொழிகளைக் கூறுகின்றாள்.

'கற்கள் நிறைந்த சுரவழியில் கடந்து சென்ற தலைவர் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாராத நிலையில் பெய்யும் மழையினைக் கார்காலத்து மழையெனத் தவறாகக் கருதிய கொன்றை மரங்கள் பூங்கொத்துகளை மலரச் செய்தன. அவை பேதைமை உடையன. (66)

'கார்காலத்தில் பெய்ய வேண்டிய மழைக்குத் தேவையான புதுநீரைக் கொள்ளும் பொருட்டுக் கடந்து சென்ற கார்காலத்தில் பெய்யாது எஞ்சி நின்ற பழைய நீரினை மேகங்கள் கொட்டுகின்றன. அந்த மேகங்கள் முழங்கும் இடிக்குரலைக் கேட்டுக் கார்காலம் வந்ததெனத் தவறாக நினைத்த மயில்கள் ஆடின, பிடவ மலர்களும் பூத்தன. அவை அறியாமை உடையன, நின் துயரத்தைக் கைவிடுவாயாக.' (251)

'மேகங்கள் காலமல்லாக் காலத்தில் வம்ப மழையைப் பொழிந்தன. மழைத் துளிகளை எதிர்கொண்ட முல்லை அரும்புகளும் செம்முல்லை மலர்களும் மலர்ந்தன. முல்லை மணமும் செம்முல்லை மணமும் தேன் மணக்கும் வண்ணம் கலந்து தோன்றின. இது உண்மையான கார்காலமானால் தலைவர் தாம் சொன்னவாறு வந்திருக்கமாட்டாரோ? ஆகவே இது கார்காலமன்று.

தண்துளிக்கு ஏற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூஅமல் தளவமொடு தேம்கமழ்பு கஞல
வம்புப் பெய்யுமால் மழையே, வம்பன்று
காரிது பருவம் ஆயின்
வாராரோ நம்காத லோரே (382)

'வந்தது கார்காலமன்று' என்றும் கார்காலத்து மழையை 'வம்பமாரி' என்றும் கூறிய தோழி, சில நேரங்களில் கார்கால வரவை ஏற்றுக் கொண்டு, 'தலைவர் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் வந்ததாகலின், அவரும் வந்துவிடுவார். நின் வருத்தமும் தீரும்' என்று தலைவிக்கு நம்பிக்கையூட்டுகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தலைவியே, கைவளையல்கள் நெகிழுமாறு கண்ணீர் சொரிகின்ற கண்ணோடு இனி மயங்க வேண்டா. சுவர்களில், தலைவர் பிரிந்து சென்ற நாள்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் கோடுகளை இட்டு வருந்தும் வருத்தத்தை விடுக. தலைவர் திரும்பி வருவேன் என்று சொல்லிச் சென்ற கார்காலம் இதோ வந்துவிட்டது. காதலரைப் பிரிந்தோர் தனித்து இரங்கும் மாலைக் காலத்தில், பசுக்களை ஓட்டிக் கொண்டு வீடு திரும்பும் இடையர்கள் அணிந்துள்ள மாலையில் உள்ள முல்லையரும்புகள் 'கார் காலம் வந்தது, பிரிந்தோர் வருவர்' என்று சொல்வது போல மலர்ந்துள்ளன.' (358)

அப்போது மணியோசை கேட்கிறது. 'இது தலைவனுடைய தேரின் மணியோசையோ, ஆனினத்துக் கழுத்து மணியோசையோ என்று தோழி ஐயுறுகின்றாள்.

'மாலை நேரத்தில் காளைகளோடு மேய்ச்சல் நிலத்திலிருந்து ஊர் திரும்பும் பசுக்களின் கழுத்திற் கட்டப்பட்டிருக்கும் மணியோசையா? வில் வீரர்கள் தன் இரு பக்கத்திலும் போற்றிவர வினைமுடித்த நிறைவான உள்ளத்தோடு மணல் நிரம்பிய காட்டு வழியிலே வரும் தலைவனது தேரின் மணியோசையா என்று முல்லை படர்ந்த பாறைமீது ஏறி நின்று பார்த்து வருவோம், வருவாயாக' என்று தோழி தலைவியை அழைப்பதன் மூலம் தலைவிக்கு நம்பிக்கையூட்டுகின்றாள்.

முல்லை ஊர்ந்த கல்உயர்வு ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்
புல்லார் நல்லான் பூண்மணி கொல்லோ
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வரூஉம்
தேர்மணி கொல்ஆண்டு இயம்பிய உளவே (275)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வந்து தலைவியைச் சேர்ந்திருந்தான். பிரிந்து சென்றிருந்த காலத்தில் தலைவிக்குத் துணையாயிருந்து ஆறுதல் மொழி கூறிய தோழியைப் பாராட்டுகிறான். 'நன்றாகத் தலைவிக்கு ஆறுதல் கூறியிருந்தாய்' என்று நன்றி கூறிய தலைவனைப் பார்த்துத் தோழி 'நன்றி கூற வேண்டியது காக்கைக்குத்தான்' என்கின்றாள்.

'தலைவியினுடைய பிரிவுத் துன்பத்தைப் போக்கும் வண்ணம் விருந்தினர் வருமாறு காக்கை கரைந்தது. கரைந்த வண்ணம் தலைவனும் திரும்பி வந்தான். அதனால் அக்காக்கைக்கு நல்ல பசு நெய் கலந்த வெண்ணெல் வெண்சோறு ஏழு கலத்தில் ஏந்தித் தந்தாலும் அப்பலி சிறிதாகும். அதன் உதவி பெரிது என்பது தோழியின் கருத்து!

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்லா பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (210)

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கை இன்றும் இருந்து வருவதைக் காணலாம்.

'பெருஞ்சோற்ற பலிமாந்திய கருங்காக்கை' எனப் பொருநராற்றுப்படை காக்கைக்குச் சோறிடும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றது. (பொருந. 188)

தலைவன்

வினைமேற் பிரிந்து சென்ற தலைவன் பெரும்பான்மையும் தான் குறித்த காலம் வரும் முன்பே வினையை முடித்துத் திரும்புவான். கார்கால மழையின் தொடக்கமும் தலைவனின் திரும்பிவருதலும் ஒன்றாக நிகழும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வினைமுடியும் காலம்வரை தலைவியைப் பற்றி நினைக்காமல் வினையின் மேலேயே சென்ற தலைவனின் உள்ளம், வினைமுடிந்ததும் தலைவியினிடத்தில் பெறுகின்ற இன்பத்தை நினைக்கும். அதனால் விரைவாகச் சென்று தலைவியைக் காண விரும்புவான். ஆகவே தேரை விரைவாகச் செலுத்துமாறு பாகனுக்குக் கூறுவான்.

'பாணர்கள் மீட்டும் 'படுமலைப் பாலை' என்னும் பண்ணைப் போன்று ஒலிக்கும், இடியோசையோடு கூடிய, மழை பெய்த கொல்லைப் புறத்தில் முல்லைப் பூக்கள் மலர்ந்தன. அந்த முல்லைப் பூக்களின் தாதினைப் போல மணம் வீசும் நெற்றியினையுடைய தலைவியின் தோளாகிய அணையிடத்தே உறங்கிக் கழித்த நாள்களே இவ்வுலகத்தில் வாழ்ந்த நாள்களாகும். அவ்வாறு தலைவியோடு இணைந்து வாழாத நாள்கள் எல்லாம் என்ன பயனை உடையன? அவை உள்ளீடில்லாத கருக்காயைப் போன்று பயனற்றவையே ஆகும். அப்படிப்பட்ட தலைவியை அடையுமாறு தேரினை விரைவாகச் செலுத்துவாயாக.'

எல்லாம் எவனோ பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத்து அஞ்சுவர நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்
அரிவை தோளணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழும் நாளே (323)

'பரல்கற்களோடு கூடிய பள்ளத்தில் தேங்கியுள்ள மழை நீரினைக் குடித்துவிட்டு ஆண்மான் தன் துணையான பெண் மானோடு துள்ளி விளையாடுகின்ற மாலைப் பொழுது வருவதற்கு முன்பே, கயற்கண்களையும் இனிய சொற்களையும் உடைய தலைவி படும் துன்பத்திலிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீங்குமாறு தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகளை விரைவாகச் செலுத்துவாயாக' (250)

இவ்வாறு தலைவியை மாலைப் பொழுதிற்குள் அடைய வேண்டும் என்று விரைந்து வரும் தலைவன் வழியில் முல்லைப் பூக்கள் மலர்ந்திருப்பதைக் காண்கின்றான். காம மயக்கத்தால் அரும்பாகிய பற்களைக் கொண்டு முல்லைக்கொடி நகைப்பதாய் உணருகின்றான்!

'முல்லையே நீ வாழ்க! கார்காலத்து மழை பெய்த முல்லைப் புறத்தில் மேயச் சென்ற பசுக்கள் ஊரை நோக்கித் திரும்பி வருகின்ற மாலைக்காலத்தில் உன்னுடைய அரும்புகளாகிய பற்கள் தோன்ற புன்னகை செய்கின்றாய். தலைவியரைப் பிரிந்து தனிமைத் துன்பம் அடைந்திருப்பாரைப் பார்த்து எள்ளி நகைப்பதைப் போலக் காட்டுதல் உனக்குப் பண்புள்ள செயலாகுமா'

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்லா புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே (962)

வினை குறித்துச் சென்ற தலைவன் வினையை முடித்த பின் இல்லம் திரும்பித் தலைவியோடு இன்புற்றிருக்கின்றான். அறச்செயல்களைச் செய்து அகமகிழ்கின்றான். கார்கால மழையை மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்றான்.

'வினை முடித்த வீறார்ந்த உள்ளமொடு தலைவியை அடைந்து தலைவியின் மணம் கமழும் கூந்தலாகிய மெல்லணைத் துயில் பெற்று மகிழ்ந்துள்ளேன். ஆதலால் மின்னலிட்டும் முரசினைப் போல இடி முழக்கமிட்டும் தண்ணென நீரைச் சொரிந்து, பெருமேகமே, இனி மழை பெய்வாயாக, வாழ்வாயாக'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் சொல்லிச் சென்ற கார்காலத்திற்குள் சொல்லியவாறே தலைவியை அடைந்துவிட்ட உள்ள நிறைவோடு கார்கால வானத்தைத் தலைவன் வாழ்த்து கிறான். செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு திகழும் தலைவன், 'உள்ளிய வினைமுடித்தன்ன இனியோளாகிய தலைவியை அடைந்த சிறப்பை இங்கே கண்டு மகிழலாம்.

தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை இனிய சிதறி ஊழின்
கடிப்பிகு முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்க இனிவாழியே பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
இவளின் மேவினம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே (270)

செவிலித்தாய்

தோழியின் தாயாகிய செவிலித்தாயின் செயல்கள் குறுந்தொகை காட்டும் முல்லை வாழ்க்கையில் இடம் பெறுகின்றன. களவு ஒழுக்கக் காலத்தில் தலைவியின் ஒழுக்க நெறி முறைகளை முன்னறிந்து தலைவியின் தாய் முதலியோர்க்குத் தெரிவித்து அத்தலைவன் தலைவியர்க்கு நன்மை செய்தவளாதலின் செவிலித்தாயையே சான்றோர் ''தாய்'' என்று கூறுவர். இவள் நற்றாய்க்குத் தோழியும் ஆவாள். கற்பொழுக்கத்தைக் காட்டினும் செவிலித் தாயினது சொல் சான்றோரால் உயர்த்துப் பேசப்பெறும்.

தலைவி தலைவனோடு கூடி இல்லிருந்து நடத்தும் இல்லறத்தைக் கண்டு செவிலித்தாய் பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றாள். அவள் நடத்தும் அறச்செயல்களை அறிந்து பெருமை கொள்கின்றாள். தலைவனுடைய காதற் சிறப்பும் தலைவியினுடைய அட்டில் சிறப்பும் கண்டு பூரிப்பு அடைகின்றாள். தன் மனைக்குத் திரும்பிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் தலைவியின் அரிய சிறப்புகளையும் பெருமைகளையும் நற்றாய்க்கு இனிது மொழிகின்றாள்.

'முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போன்ற தன் விரல்களை ஆடையில் துடைத்துக் கொள்கிறாள். துடைத்த அழுக்கான ஆடையைத் துவைக்காமலும் மாற்றாமலும் அதே ஆடையை உடுத்திக் கொள்கின்றாள். குவளை மலர் போன்ற கண்ணில் தாளிப்புப் புகை கமழ, இனிதாகத் தாளித்துப் புளிக் குழம்பினைச் சமைக்கின்றாள். இவ்வாறு தலைவி சமைத்த புளிக் குழம்பினைத் தலைவன் 'இனிமையாயிருக்கின்றது' என்று பாராட்டியவாறே உண்கின்றான். அதனால் தலைவியின் ஒளி பொருந்திய முகம் மகிழ்ச்சியினால் நுண்ணிதாக மலர்ந்தது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று எண்ணுதல் முகனே (167)

உணவைச் சமைக்கும் போதும் படைக்கும் போதும் மகிழ்ச்சியடைதலாகிய தலைவியின் உயர்ந்த பண்பு எண்ணிப் பாராட்டற்குரியது.

'தன்னைக் காத்துக் கொண்டதோடு தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்' என்னும் திருக்குறள் காட்டும் பெண்ணுக்கு இலக்கணமாகத் தலைவி திகழ்வதைக் காண்கிறோம்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் 56)

இவ்வாறு தலைவியின் இல்லறம் பேணும் பெற்றியைப் பாராட்டிக் கூறிய செவிலி, தலைவனின் இயல்பையும் அயரா அன்பினையும் சிறப்பித்துப் பேசுகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'காட்டுக் கோழியினுடைய கழுத்தில் நீர்த்துளி துளிக்குமாறு புதலில் நீர் ஒழுகும் மணம் வீசும் முல்லை நிலத்தின்கண் அமைந்த சிற்றூரில் தலைவி உள்ளாள். அரசனால் ஏவப்பட்டு வேற்றூருக்குத் தேர் ஏறிச் செல்லும் தலைவன் அவ்விடத்தே சில நாள் தங்கி வருதலை அறியான், உடனே திரும்பி விடுவான்.

சீறூர் ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொரு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே (242)

'தலைவன் தலைவியைப் பிரியாது வாழ்கின்றான். எச்செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை. மன்னன் கட்டளை மறுத்தற் இயலாதாகவே அதன் காரணமாக மட்டும் சில நேரங்களில் பிரிந்து செல்வான். அவ்வாறு சென்றாலும் உடனே மீண்டு வருவான்' என்பதைக் கூறுகிறாள் செவிலி.

தலைவியைப் பிரியாது வாழும் பேரன்பினனாகத் தலைவனும், தலைவனை உணவாலும் உணர்வாலும் பேணிக்காக்கும் பேரன்பினளாகத் தலைவியும் உள்ள முல்லை வாழ்க்கையின் சிறப்பைச் செவிலி படம்பிடித்துக் காட்டுகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

FORWARDED FREE OF COST; AND WITH
THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF
EDUCATION; GOVERNMENT OF INDIA, NEWDELHI

4

நற்றிணை

'நற்றிணை நல்ல குறுந்தொகை' என்னும் எட்டுத் தொகை நூல்களைப் பற்றி வரிசைப்படுத்திக் கூறும் பழம் பாடல் நற்றிணையை முதலாவதாகக் கொண்டு இதன் சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

இப்பாடலில் நற்றிணை, அகம், புறம் என்னும் நூல்கள் அடைமொழியின்றிக் கூறப்பட்டுள்ளன. பிற நூல்கள் ஐந்தும் அடைமொழி பெற்று வந்துள்ளன. அடைமொழியின்றி இந்நூல்கள் கூறப்பெற்றிருத்தல் இவைகளுக்குத் தனிச்சிறப்பு உண்டு என்பதை உணர்த்தும் என்பர்.

''அகத்திணைப் பாடல்களுக்குத் 'திணை' எனப் பெயர் வழங்கும் மரபு உண்டு. திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, என்ற நூல்களின் பெயர்களைக் காண்க. அத்தகைய 'திணை' என்ற பெயரோடு 'நல்' என்ற அடையும் சேர வழங்குகிறது, இந்நூல். 'நல்ல குறுந்தொகை' என்று பிற்காலத்தார் பாடினார்கள். ஆனால் தொகுத்த காலத்தே 'நல்' என்ற அடை இந்நூலுக்குத்தான் இடப்பட்டது என்பதை நாம் மறக்கலாகாது'' என்று கூறுவதன் வழி நற்றிணை அடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழி பெற்ற நூல் என்று கருதுவர் அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.[1]

எனவே அடைமொழி பெறாத நிலையிலும் பெற்ற நிலையிலும் நற்றிணை மிகச் சிறந்த நூல் என்பது விளங்கும். ஒன்பது அடிக்குக் குறையாமலும் பன்னிரண்டு அடிக்கு மேற்படாமலும் உள்ள நானூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் இது 'நற்றிணை நானூறு' என்றும் வழங்கப்பெறும்.

இதன் பாடல்கள் நெடுந்தொகை என்னும் அக நானூற்றுப் பாடல்களைப் போல மிகப் பெரியன அல்ல ஆதலால் பொருள் முடிவு காண வருந்த வேண்டுவதில்லை. குறுந்தொகைப் பாடல்களைப் போல மிகச் சிறியன அல்ல ஆதலால் பொருள் ஆழங்காணாது அலைய வேண்டுவதில்லை. இடை நிகரான பாடல்களே ஆதலால் இரண்டின் அழகும் இதனிடை உண்டு.

நற்றிணைக்குச் சிறந்த ஆராய்ச்சி உரை எழுதிய பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் ஒவ்வொரு பாடலின் தலைப்பிலும் திணை வகுத்துக் குறிப்பிட்டுள்ளார்கள். அம்முறையில் நற்றிணையில் இருபத்தெட்டு முல்லைத் திணைப் பாடல்கள் உள்ளன என்றாலும் சிலர் முப்பது பாடல்கள் உள்ளன என்று கருதுகின்றனர். அவைகள் காட்டும் முல்லை வாழ்க்கையைக் காண்போம்.

நற்றிணை காட்டும் முல்லை வாழ்க்கையில், வினை மேற்சென்ற தலைவன் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வரும்வரை ஆற்றியிருந்து, பருவம் வந்தபோது வருந்தி, தலைவன் பொய் கூறான் என்று அவன் மொழியில் நம்பிக்கை கொள்ளும் தலைவி, தலைவனின் பேரன்பினைச் சுட்டித் தலைவியை ஆற்றுவிக்கும் தோழி, வினைமுடியும் வரை தலைவியின் நினைவில்லாமல் வினை

---

1. நற்றிணைச் சொற்பொழிவுகள், பக். 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிந்தபின் தலைவியின்மீது கொண்ட வேட்கை மிக வருந்தித் தோழியை விரைவாகச் செலுத்துமாறு பாகனிடம் கூறும் தலைவன், தன் நிலையையும் தலைவியின் நிலையையும் கூறிக் கொண்டு வந்த தலைவன் மகிழ்ச்சியடையுமாறு தோழியை விரைவாகச் செலுத்தும் பாகன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தலைவி

களவு ஒழுக்கக் காலத்தில் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைவனிடம், அவன் வரும் அளவிலும் தனிமை ஆற்றியிருந்தமை கூறலும் முல்லை ஒழுக்கத்தின் பகுதியாகிய 'இருத்தல் நிமித்தம்' ஆகும்.

களவொழுக்கத்தில் ஈடுபட்டுத் தலைவியுடன் பழகிய தலைவன் தலைவியின் சுற்றத்தார் மகிழுமாறு பொருள் தந்து தலைவியை மணக்க விரும்புகின்றான். தன் இல்லத்தில் மிகுதியாகப் பொருள் இருந்தாலும் தானே முயன்று ஈட்டிய பொருளே திருமணத்திற்கு உரியதெனக் கருதுகின்றான். ஆகவே பொருளைப் பெறப் பிரிந்து செல்லும் தலைவன் பிரியும் போது தான் மீளும் பருவத்தையும் சொல்லிச் செல்கின்றான். அவன் குறித்துச் சென்ற பருவம் வந்தும் அவன் வராததால் தலைவி துயரடைகிறாள். தோழியை அழைத்துத் தன் நிலையைக் கூறுகிறாள்.

'தோழி நீ வாழ்வாயாக. தலைவன் சொல்லிய பருவம் கழிந்தது. இடியோசையோடு மேகம் நீர் நிறைந்து வானத்தே இயங்குகின்றது. வாடைக்காற்றுப் பனியொடு வந்து என்னைத் தாக்குகின்றது. இவ்வாறு சில நாள்கள் கழிவதோடு, குளிர்ந்த இன்னோசை தரும் மணிகளையுடைய ஆனிரைகளை ஊருக்குள் செலுத்தி வரும் ஆயர், கொன்றைப் பழத்தாற் செய்யப்பட்ட குழலை ஊதும் ஓசை பொதுவிடத்திலெல்லாம் எழுந்து ஒலிக்கும் மாலைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம் பருவ மழையோடு சேர்ந்து வருமானால் நான் உயிர் வாழ மாட்டேன்.' (364)

இதைக் கேட்ட தோழி தலைவியை ஆற்றுகின்றாள்.

பின்னர் தலைவன் ஈட்டிய பொருளோடு திரும்பு கின்றான். தலைவியை மணம் விரும்பிச் சான்றோருடன் அவள் இல்லம் வருகின்றான். அப்போது தோழி தலைவனின் திருமண முயற்சியைப் பாராட்டுகின்றாள்.

'தலைவனே நீ வாழ்க, ஆட்டிடையன் அணிந்து கொள்ளுமாறு குரா மலர்கள் பூக்கின்ற இந்த அகன்ற இடத்திலுள்ள சிற்றூரில் வாழ்கின்றோம். இதுவே எங்கள் பெருவிருப்பம். எம்மைவிட்டுப் பிரியக் கருதுவீரா யின் ஒன்று சொல்வேன். வேறுபட்டுப் பிரிந்த காலத்தில் வருந்தினால், பெருங்குடிக்குரிய பெருமைகள் குன்றுவன வாகும்.

எம்விட் டகறிர் ஆயின் கொன்னொன்று
கூறுவல் வாழியர் ஐய வேறுபட்டு
இரீஇய காலை இரியின்
பெரிய அல்லவோ பெரியவர் நிலையே (266)

நீர் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற காலத்து நாங்கள் வருந்தவில்லை; ஆற்றியிருந்தோம். ஏனெனில் வருந்தினோ மாயின் பெருங்குடிக்கு ஏற்ற பெருமைக்குரிய நிலையை எவ்வாறு அடையக்கூடும். அவ்வாறு ஆற்றியிருந்ததைத் தவிர வேறு என்ன செய்ய இயலும் எங்களால்? நீர்தாம் நும் முயற்சியாலே இப்போது மணவினைக்கு முயன்று வந்துள்ளீர்' என்பது தோழி தலைவனுக்கு உணர்த்தும் கருத்தாகும்.

''ஆயர் ஆடு மாடுகளை மேய்த்தலில் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் குழலிசைத்து இன்பம் கண்டனர். இவ் ஓய்வு நேரமே ஆயரிடையே மூங்கிற் குழலோசையைத் தோற்றுவித்தது'' என்பார் பி. டி. சீனிவாச அய்யங்கார். இந்தப் புல்லாங்குழலுக்கு அடிப்படையாய்— முன்னோடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாய்— அமைந்திருப்பது 'கொன்றைப் பழத்தாற் செய்யப் பட்ட குழல்' [கோவலர் கொன்றையந் தீங்குழல் - 364:10] என்பதை அறிந்து மகிழலாம்.

திருமணம் நிகழ்ந்து தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கையில் இன்ப அன்பு பொங்க மகிழ்ச்சியோடி ருக்கின்றனர். அப்போது தலைவன் வினைமேற் பிரிய எண்ணுகின்றான். தலைவியும் உடன்படப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த பருவத்தில் வரவில்லை. தலைவன் குறித்த காலம்வரை பொறுத்திருந்த தலைவி, காலம் வந்த பின் தலைவன் வரக் காணாது துடித்துச் சோர்கின்றாள்.

'இரப்பவர்களுக்குத் தேர்களைப் பரிசிலாக வழங்கும் அஞ்சி என்பவனுடைய பரிசில் இருக்கை போல மேகம் மழை பெய்யத் தொடங்கியது. பொறுத்தற்கரிய துயரி னால் வருந்தும்போது சாவு ஏற்படும் என்பதற்கிணங்க சாவு வராததனால் தலைவனிடத்தில் எனக்கு அன்பில்லா மல் இல்லை. கரையோடு மோதி ஓடுகின்ற காட்டாற்றின் கரையில் வேர்கள் பறிக்கப்பட்டுள்ள மாமரத்தின் தளிரைப் போல நடுங்கும் நெஞ்சத்தையுடைய நான் இந்தத் துன்பத்தை எவ்வாறு தாங்குவேன்' என்று தன்னுள்ளே வருந்திக் கூறுகிறாள் தலைவி. (381)

அருந்துயர் உழத்தலின் உண்மை சான்மெனப்
பெரும்பிறி திண்மையின் இலேனும் அல்லேன்
கரைபொரு திழிதரும் காண்யாற் றிகுகரை
வேர்கிளர் மாஅத்து அந்தளிர் போல
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு இடும்பை
யாங்கனந் தாங்குவென் ....

பிரிவுத் துயரம் தன் உயிரை வேரறுப்பதாகவும், தான் மாந்தளிர் போல உயிர் கொண்டு இருப்பதாகவும் தலைவி கூறுவது, அவளுடைய சோகத்தின் உச்ச நிலையைக் காட்டுவதாயுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோடைக்காலத்தில் பாலையாக மாறிப் போன முல்லை நிலக்காட்டில் ஆயர் மகளிர் கூட்டத்தினைப் போல பிடவ மலர்கள் பூத்துள்ள மாலைப் பொழுதில் தலைவி காம மயக்கங் கொண்டு வருந்துகிறாள். கார்கால மேகத்தை நோக்கி 'மின்னல் முதலிய கருவிகளையுடைய மேகமே நீ, பிரிந்து உறையும் தலைவரது மன நிலையை அறிந்து எனக்கு உரைக்க வந்தாயா? அவ்வாறு அறிந்து உரைத்தல் சான்றோர் செய்கையாகாது. நின் இடிக்குரல் ஒலியினால் பாம்புகளின் படத்தை மழுங்கச் செய்து என் தலைவரது நெஞ்சத்தைக் கனிவிக்காமல் இருக்கிறாய். ஆகவே நின் இடியோசை எனக்கு இனிமையாயில்லை' என்கிறாள். (238)

பிறர் துன்பத்தை அறிந்து வைத்தல் மட்டும் போதாது. அத்துன்பத்தைப் போக்கவும் வழி செய்ய வேண்டும். அதுவே சான்றோர் இயல்பு என்பதைத் தலைவி சுட்டுகிறாள்.

பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றோர்கட் கெல்லாம் கடன்

என்பது கலித்தொகை. (136)

'நிலமானது தன்னிலையினின்று மாறுபட்டு ஒரு பக்க மாகச் சாய்ந்து பெயர்ந்தாலும் நம் தலைவர் சொன்ன சொல் தவறார்' என்று தலைவனின் வாய்மையில் பெரு நம்பிக்கை கொண்ட தலைவிக்குக் கார்கால மழை தாங்க வியலாத வேதனையைத் தருகிறது.

'முல்லை நிலக் காடுகளில் இரவில் இடையர் பெரிய மரத்தின் வேரடிக் கட்டையில் நெருப்பைக் கொளுத்தி அதனை வீழ்த்துவர். அவ்வாறு அம்மரத்தின் வேரடிக் கட்டையில் மூட்டிய தீ எவராலும் அணைக்கப்படாமல் தானே தணியும். அதுபோல என்னுள் எரித்து வரும் காமத்தியும் தணிப்பாரின்றித் தானே தணிகிறது. இரவு முற்றும் கனிந்து என்னை அணுவணுவாக எரிக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் என் செய்வேன்' என்று தோழியினிடத்தில் மனம் நொந்து கூறுகின்றாள். (289)

'தாம் விரும்பும் காதலரால் விரும்பப் படாவிடில், உலகத்தாரால் விரும்பப்படும் நிலையில் உள்ளவரும் நல்வினை உடையவர் அல்லர்' என்பது வான்மறை வள்ளுவம்.

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ(ர்) எனின் (1194)

கார்காலத்துத் தோன்றும் பொருள்களும் நிகழ்ச்சிகளும் தலைவியின் காமத்தை மிகுவித்துத் துன்பத்தைத் தருகின்றன. குயில் கூவுகின்றது. தெளிந்த நீரினைக் கொண்டு ஆறு ஓடுகின்றது. உழவர் மகள் ஒருத்தி, கூடகப் பெட்டியில் குருக்கத்தி மலரையும் பித்திகை மலரையும் வைத்துத் தெருவிலே விற்று வருகிறாள். இவை ஒன்றினைக் காட்டிலும் ஒன்று கொடிதாகவுள்ளன என்று தோழியினிடத்தில் சொல்லி வருந்துகின்றாள். (97)

கார்காலத்துக் கருப்பொருள்களைப் போலவே மாலைப் பொழுதின் நிகழ்வுகளும் தலைவியின் நெஞ்சத்தை நோகச் செய்கின்றன.

'கதிரவன் மறைந்ததும் பறவைகள் தத்தம் குஞ்சு களுடன் கூட்டை அடைந்தன. கலைமான் பெண்மானைத் தழுவி இன்புறுகின்றது. முல்லையரும்புகளும் மலர்ந்துள்ளன. புதல்களில் விளக்கேற்றினாற் போல தோன்றி மலர்கள் பூத்துள்ளன. பசுவின் கழுத்திற் கட்டியுள்ள மணியோசையானது ஆயர் ஊதும் குழலிசை யோடு மெல்லிதாக ஒலிக்கிறது. காதலரைப் பிரிந்து தனித்திருப்போரைத் துன்புறுத்தும் அருளில்லாத இம் மாலைக்காலம் நம் தலைவர் சென்ற நாட்டினும் தோன்றுமா? அவ்வாறு தோன்றினால் வினைமேற் சென்ற தலைவர் அவ்விடத்துத் தங்கமாட்டார்,' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவி தன் காதல் மிகுதியாலும் பெண்மையாலும் கூறுகின்றாள். (69)

தோழி

வினைமேற் சென்ற தலைவன் கார்ப்பருவம் வந்தும் வரவில்லை. மேகம் முழங்கி மழை பெய்கின்றது. மயில்கள் ஆரவாரித்து மகிழ்ச்சியடைகின்றன. அதனைக் கண்டு தலைவி வருந்துவாள் எனக் கருதிய தோழி ஆற்றுவிக்கிறாள்.

'மேகமே, எம் தலைவர், மல்லிகை மலர்கள் புதல்களில் பூத்திருக்கும் கார்காலத்தில் வருவேன் என்று கூறிச் சென்றார். இஃது அக்காலமன்று. பருவமல்லாக் காலத்தும் நீ இடிமுழக்கத்துடன் மழையைப் பெய்கின்றாய். அறிவில்லாத மயில் கூட்டங்கள் மயங்கி ஆடுகின்றன. அவ்வாறு நானும் மயங்கி, இது கார்காலமென்று நினைத்துத் தலைவர் இன்று வருவார் என்று கூற மாட்டேன்,' என்று தோழி மேகத்தை நோக்கிக் கூறுவதைப் போல, 'இது உண்மையான கார்காலத்தின் தொடக்கம் அன்று' என்பதைத் தலைவிக்கு உணர்த்தினாள். (248)

'நீரினை முகக்கும் காலத்தை மறந்த அறிவில்லாத மேகம், கடல் நீரை முகந்து கொண்டு நிறை சூலுற்றுக் கார்மேகமாக மாறி நீர்ச்சுமையினைத் தாங்கமாட்டாமல் கனத்த மழையாகப் பெய்கிறது. இதுவே கார்காலம் என்று கருதி மறந்த நிலையில் பிடவம், கொன்றை, கோடல் ஆகிய மலர்கள் பலவாகப் பூத்துள்ளன' என்று கூறி, 'இது வம்ப மாரிதான்; தலைவர் குறித்துச் சென்ற கார்காலமன்று' என்று தலைவியைத் தெளிவுறுத்துகிறாள். (99)

இவ்வாறு தலைவி ஆற்றியிருக்கும்போது கார்கால நிகழ்வுகள் ஒவ்வொன்றாகத் தோன்றுவதைக் காணு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றாள். பொய்கை மலர்களைப் பறித்துச சோர்வுற்ற ஆயமகளிர் இனிது உறங்குமாறு அன்னையும் உயிர்க் கின்றாள். கார்மேகங்கள் வானத்தில் திரிகின்றன. நொச்சியும் முல்லையும் மலர்கின்றன. இவைகளைக் காணும் தலைவியின் ஆற்றாமை மிகுதியாகின்றது. அப்போது தலைவனின் பேரன்பினைச் சுட்டிக்காட்டித் தோழி ஆற்றுகிறாள்.

'தலைவர் சென்றுள்ள நாடு மிகத் தொலைவிலிருந்தா லும், நின்னிடத்தில் மிகப்பெரும் அன்பினையுடைய ராகலின், நல்ல புகழினைப் பெறுவதாயினும் சொன்ன சொல் தவறாது வருவார்.'

தவச்சேய் நாட்டார் ஆயினும் மிகப்பேர்
அன்பினர் வாழி தோழி நன்புகழ்
உலப்பின்று பெறினும் தவிரலர்
கேட்டிசின் அல்லெனோ விசும்பின் தகவே (115)

தலைவி வருந்தியிருக்கும் பொழுது சில நேரங்களில் தலைவனுடன் வினைவயிற் சென்ற வீரர் பலரும் மலர் மாலை சூடி வருவர். அது கண்ட தோழி தலைவியை நோக்கித் தலைவனும் விரைவில் வருவான் எனத் தேற்றுகிறாள்.

'அருமன் என்பவனுடைய சிறுகுடி என்னும் ஊரினைப் போன்ற சாயலையுடைய தலைவியே, நின் கூந்தலிலே சூடிய மாலை போல முல்லைப்பூ மாலை யணிந்து நம் தலைவருடன் சென்றிருந்த வீரர்கள் திரும்பி விட்டனர். நம் தலைவரும் குதிரை மீதேறி இடையில் எங்கும் தங்காமல் விரைவில் வருவார்' என்கிறாள். (367)

'கருங் கண்ணையுடைய கருணைக் கிழங்கின் கறியோடு கூடிய வெண்சோறு' குறித்தும் (''கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு, சூருடைப் பலியொடு.....'') 'தெய்வத்திற்கு இடப்பட்ட பலிச் சோறு' குறித்தும், தோழி குறிப்பது அறியத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வினைமேற் சென்ற தலைவன் திரும்பி வந்ததைக் கண்ட தோழி மகிழ்ச்சியடைகிறாள். தலைவியின் வருத்த மெல்லாம், தீரும் என்று தனக்குள் கூறுகின்றாள்.

'இறைப்பிலே வாழும் சேவற்குருவி வேற்றுப் புலத்துப் பேடையுடன் கூடி இன்புற்றுப் பின்னர் தன் பேடையிடத்தும் வந்தது. சேவலின் மேனியில் புணர் குறியால் ஏற்பட்டிருந்த மாறுபாட்டை நோக்கிய பேடை சேவலைக் கூட்டுக்குள்ளே விட மறுத்தது. மழையில் நனைந்த சேவல் குளிரால் நடுங்கியதைக் கண்ட பேடை கூட்டுக்குள்ளே வருமாறு அழைத்தது. இவ்வாறாக வந்த மாலைப்பொழுதில் தலைவனுடைய குதிரைகள் பூட்டிய தேரும் வந்தது. தலைவியின் அழகும் கெடாமல் பிழைக்கும்.' (181)

குறித்த பருவம் கடந்த பின் திரும்பி வரும் தலைவனைத் தலைவி சினந்து ஊடாமல் மணந்து உறவாட வேண்டும் என விரும்புகிறாள் தோழி.

தலைவனும் அவனுடன் சென்ற ஏவல் இளைஞரும் முல்லை சூடியுள்ளனர். படு மழை பொழிந்த தண்நறும் புறவின் வழியாகத் தலைவனுடைய குதிரைகள் பூட்டிய தேர் மாலை வேளையில் அவர்களைக் கொண்டு வந்து சேர்த்தது. பொறுத்தற்கரிய துன்பத்தை நீக்கித் தலைவனுக்கு விருந்தினைப் படைக்கும் விருப்பத்தினளாயுள்ளாள் தலைவி. ஆகவே யாரும் கவலைப்பட வேண்டா என்கிறாள் தோழி. (361)

தலைவன்

வினைமுற்றி மீளும் தலைவன், 'வினைமுடித்தன்ன இன்பம்' தரும் தலைவியை நினைக்கின்றான். அப்போது நெஞ்சுக்கும், பாகனுக்கும், கண்டார்க்கும் ஆகப் பல்வேறு நிலைகளில் தலைவன் கூறும் மொழிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனுடைய பண்பாட்டையும் தலைவியிடத்துக் கொண்ட அன்புடைமையையும் தெற்றெனப் புலப்படுத்துகின்றன.

தலைவன் வினைமேற் சென்ற போது, 'முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல் வருவன்' என்று தலைவிக்குக் கூறிச் சென்றான். அப்போது தலைவி மிக்க துன்பம் அடைந்தாள். ஆடுகளை மேய்த்துத் திரும்பும் இடையன் முல்லை மலர்மாலையணிந்து வருவான். அம்மாலைப் போதில் பெரிய மாளிகையின் சுவரில் இருக்கும் பல்லி தம் வரவை அறிவித்துத் தலைவிக்குச் சொல்லுமோ என்று தலைவன் கூறுகின்றான்.

பல்லி சொல்லும் சொல்லைக் கேட்டுத் தலைவி தன் வரவை அறிந்திருப்பாளோ, துன்பந் தீர்ந்திருப்பாளோ என்று தலைவன் தன் நெஞ்சிற்கு உரைக்கின்றான். *(169)*

வினைமுற்றி வீடு திரும்பும் தலைவன், 'நம் வரவை எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருக்கும் தலைவியை விரைந்து சென்று அடையுமாறு, தேரினை வேகமாகச் செலுத்துக' என்று பாகனிடம் கூறுகின்றான்.

'நம் அரசன் வினை முடித்தான். கண்களைப் போன்ற குவளை மலர்கள் சுனைகளில் பூத்துள்ளன. வேங்கை மலர்கள் உதிர்ந்துள்ளன. நெடுந்தெருவைப் போன்ற பெரிய வழியில் இளையர் பலரும் தங்கிச் செல்கின்றனர். உடைந்த காந்தள் மலர்கள் சங்குகளைப் போல் வீழ்ந்துள்ளன. புள்ளினங்கள் நிமித்தங்காட்டி நம் வரவை அறிவுறுத்தினவோ? ஏதில் ஒன்றினைப் புதல்வனுக்குக் காட்டியவாறு தலைவி பொய் கூறி அவனைத் தேற்றுகிறாள்!' என்று கூறுவதன் வழித் தேரினை விரைவாகச் செலுத்திய பாகனைத் தலைவன் பாராட்டுகின்றான். *(161)*

தலைவன் வரும் வழியின் இடையில் ஆண்மான் தன் குட்டியோடு சென்ற பெண்மானை விருப்பத்தோடு தேடிச் செல்வதைக் காண்கின்றான். அப்போது தலைவியையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதற்புதல்வனையும் காணும் பெருவிருப்பம் தலைவனுக்கு உண்டாகின்றது. அதனை வெளிப்படையாகப் பாகனிடம் கூறாமல் குறிப்பாகக் கூறுகின்றான்.

செல்க பாக நின்தேரே உவக்காண்
கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனனிரிங் தோடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடுஉ நின்ற இரலை ஏறே (242)

தலைவன் கருத்தினை உணர்ந்த பாகனும் தேரினை விரைவாகச் செலுத்தினான்.

தலைவன் வருகின்ற காட்டு வழியில், பறவைகள் தம் பேடைகளுக்கு இரையூட்டி மகிழ்வதைக் காண்கிறான். தானும் தன் தலைவியைச் சேர்ந்து இன்புற்று வாழ வேண்டும் என்னும் நினைவை அது தலைவனுக்கு உண்டாக்குவதால் பாகனிடம் தேரை விரைவாகச் செலுத்துமாறு கூறுகின்றான்.

'பாகனே, நம்முடன் திரும்பி வருகின்ற படை வீரர் வழியில் இடையிடையே தங்கி இளைப்பாறி மெல்ல வர விரும்பினால் அவர் விருப்பம் போல் வருக. உருக்கிய நெய்யில் பாலைத் தெளித்தாற் போல அழகான புள்ளிகளைக் கழுத்தில் கொண்ட காட்டுக் கோழி மழை பொழிந்த காட்டு நிலத்தில் ஈரமணலைப் பறித்து நாங்கூழ்ப் புழுவை இரையாகக் கவர்கிறது. கவர்ந்த இரையைக் கொன்று தன் பெடைக்கு ஊட்டும் காட்சியைக் காண்பாய் அங்கே. நாமும் தலைவியை அடைவதற்கு வாய்ப்பாகத் தாற்றுமுள்ளினாலே குதிரைகளைத் தீண்டித் தேரினை விரைவாகச் செலுத்துவாயாக.'

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பழித்து அசைஇ
வேண்டமர் நடையர் மென்மெல வருக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்கு
ஏமதி வலவ தேரே ..... (21)

தன்னுடன் வந்த படைவீரர், வழியின் இடையில் தங்கிச் செல்ல விரும்பினால் அவர்களை அங்கே விட்டு விட்டும் தலைவன் தலைவியைக் காண விரைந்து வருவதைக் கண்டோம். இதற்கு என்ன காரணம்?

நினைவுகளினாலேயே மாந்தன் வாழ்கின்றான் என்பர். தலைவன் மனம் தலைவியோடு மகிழ்ந்த இன்பக் காட்சிகளை நினைக்கிறது. மறத்தற்கு இயலாத நினைவு களை அசைபோட்டு மகிழும் தலைவன் அவைகளைப் பாகனுக்குச் சொல்லுகின்றான். தன் வருகையைக் கண்டு மகிழ்ந்த தலைவி முன்னொருகால் செய்த செயல்களை நினைவூட்டுகின்றான்.

'பாகனே, இன்று போலவே முன்னொரு முறை வினைவயிற் பிரிந்து மீண்டு வந்தேன். அப்போது கோடையின் வெம்மை முடிந்து பெய்த மழை நீர் தங்கிய பள்ளங்களில் எல்லாம் தவளைகள் பேரொலி எழுப்பின. அதனால் தேரின் மணியோசை தலைவிக்குக் கேட்காதென எண்ணி நம் வருகையை முன்கூட்டி அறிவிப்பதற்காக இளையரை விடுத்தோம். அவர் சென்று கூறினதும் தலைவி, அதுவரையில் நாம் இல்லாமையால் கழுவி ஒப்பனை செய்யாத கூந்தலை நீராடி மாசு போக்கிச் சில மலர்களைக் கொண்டு கூந்தலை முடித்திருந்தாள். அந் நிலையில் நான் செல்லவும் என்னைக் கண்டவுடன் ஒப்பனையை மறந்த தலைவி மேனி துவள அவிழ்ந்து குலையும் கூந்தலோடு என்னைத் தழுவிக் கொண்டாள். அந்நிகழ்ச்சி மறத்தற்கரிதாகும். அது போன்ற ஒரு காட்சியை இன்றும் காண விரும்புகின்றேன்.

மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே (42)

தலைவியின் கற்புடைமையும் காதல் மிகுதியும் வெளிப்பட நின்ற காட்சியில் திளைத்த தலைவனுக்குத் தன் புதல்வன் நினைவு தோன்றுகிறது. புதல்வனை அணைத்திருக்கும் தலைவியின் தாய்மைச் செயல் அவன் மனத்திரையிலே நிழலாட, அந்த இனிய காட்சியைப் பாகனுக்குத் தெரிவிக்கின்றான்.

'பாக! மின்னல் போல ஒளி வீசும் அணிகலன்களை யணிந்து எம் புதல்வன் தூங்கும் இடத்தில் சென்று, விருந்தினரைப் போற்றும் இயல்பு கொண்ட தலைவி, 'எந்தாய் வருவாயாக' என்று அழைத்தவாறே அவனை உறக்கத்தினின்றும் எழச் செய்வாள். அந்த இனிக்கும் சொல்லை நான் மீண்டும் கேட்டு மகிழ விரும்புகின்றேன். ஆகவே மலர்கள் பூத்து மணம் வீசுகின்ற முல்லை நிலத்தின் பெருவழி பிளக்குமாறு வினைத்திறன் கொண்ட நெடுந்தேரினை விரைவாகச் செலுத்துவாயாக.

விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்
மின்னொளிர் அவிரிழை நன்னகர் விளங்க
நடைநாட் செய்த நவிலாச் சீறடிப்
பூங்கட் புதல்வன் உறங்குவயின் ஒல்கி
வந்தீக எந்தை என்னும்
அந்தீம் கிளவி கேட்க நாமே (221)

தலைவியின் நினைவும், தலைவியோடு சேர்ந்த குழந்தையின் நினைவும் தலைவனுடைய நெஞ்சத் திரையில் நிழலாடிய பின் தலைவியின் இல்லறமாட்சி எழில் நடம்புரிகின்றது. விருந்தினரைப் போற்றும் தலைவியின் இல்லறக் கடமையாற்றும் திறத்தைப் பாகனுக்குக் கூறுகிறான்.

'இல்லின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழும் செயல்கள் எல்லாம், விருந்தினரைப் பேணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

[உபசரித்து] அவர்க்கு உதவி செய்வதற்காகவே' என்று இல்லறத்தாரின் விருந்தாற்றும் பண்பின் சிறப்புக் குறித்துத் திருவள்ளுவர் கூறுவார்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

'பாக! கார்கால மழையின் இறுதி நாளில் இடையன் பல கால்கள் இட்டுப் பின்னிச் செய்த உறியினைக் கையில் வைத்து, தீக்கடைகோல் முதலிய கருவிகளைப் போட்டு வைத்திருக்கும் தோற்பையையும் பனையோலைப் பாயையும் முதுகிற் கட்டிக் கொண்டு பால் விலை கூறிச் செல்கிறான். மழைத்துளிகள் அவன் உடம்பின் ஒரு பகுதியை நனைக்கின்றது. கையில் உள்ள கோலை யூன்றி அதன்மீது ஒரு காலை மடித்து வைத்துக் குளிரால் ஒடுங்கி நிற்கின்றான். அப்போது வீளை (சீழ்க்கை) யென்னும் ஒலியைத் தன் இதழ்களைக் குவித்து உண்டாக்கி பல இடங்களிலும் சிதறிக் கிடக்கின்ற ஆடுகளை ஒருங்கு சேர்க்கின்றான்.

இத்தகைய காட்டுப் பகுதியில் புதிய வருவாயினை யுடைய சிற்றூரில் தலைவி வாழ்கிறாள். அவள் இரவுப் பொழுதாயினும் வந்த விருந்தினரைக் கண்டு மகிழ்ச்சி யடைவாள். முல்லை சான்ற கற்பு மேம்பாட்டினைப் பெற்று, இளமையும் இனிய சாயலும் உடையவள். அவளைக் காணுவதற்காக இரவுப் பொழுதிற்குள் ஊர் சென்றடைய வேண்டும்.'

வான்இகுபு சொரிந்த வயங்குபெயற் கடைநாள்
பாணி கொண்ட பல்கால் மெல்லுறி
ஞெலிகோல் கலப்பை அதனொடு சுருக்கிப்
பறிப்புறத் திட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்
தண்டுகால் வைத்த ஒருங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புறவி னதுவே பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே (142)

முல்லை வாழ்க்கையின் சிறப்பே அல்லிலாயினும் விருந்தினரைப் போற்றி மகிழ்வுடன் வாழ்வதே என்பது இங்கே வலியுறுத்தப் பெறுவதைக் காணலாம்.

தலைவியின் மகிழ்ச்சியான இன்ப நிலையும் இனிய பண்புகளும் நிழலாடிய தலைவனின் நினைவோட்டத்தில் அவளின் துன்ப நிலையும் இடம் பெறுகிறது. அவளின் துன்பத்தைப் போக்குவதற்காக விரைவாகத் தேரைச் செலுத்துமாறு பாகனைத் தூண்டுகிறான்.

'பாகனே! காயா மரங்கள் நிறைந்துள்ள மலையில் மலர்ந்துள்ள கொன்றைப் பூவின் சரம் போல மின்னல் தோன்றுகிறது. அதனைத் தொடர்ந்து மழையும் பொழிகின்றது. இதனைக் கண்ட தலைவி கைவளை சோர அழத் தொடங்கிவிட்டாள். அந்த அழுகைக்கு எதிராக, மாலைப் பொழுதில் வீடு திரும்பும் கோவலரும் கொன்றைப் பழத்தினாலான தீங்குழலினை இசைக்கின்றனர். இதனையே ஆற்றாத தலைவி, இடி இடிக்கும் இரவுப் பொழுதினை எவ்வாறு பொறுப்பளோ? ஆகவே அவளைக் காக்கும் வண்ணம் இன்றிரவுப் பொழுது தொடங்குவதற்கு முன் தலைவியைச் சென்று காண வேண்டும்.

பெயல்தொடங் கினவே பெய்யா வானம்
நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி
அழல்தொடங் கினளே ஆயிழை, அதெனதிர்
குழல்தொடங் கினரே கோவலர்
தழங்குகுரல் உருமின் கங்கு லானே (371)

ஊருக்கு அருகில் வந்து விட்ட தலைவன் நினைவுப் பாதையில், ஊராரின் இன்ப மயக்கத்தையும் புனைதல் விருப்பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தையும் கண்டு தனிமைத் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் தலைவி தோன்றுகிறாள். அவனுடைய நினைவு முழுதும் தலைவியினிடத்தே செல்ல பாகனுக்கு உரைக்கின்றான்.

'முல்லை நிலக் காட்டில் மேய்ந்து திரும்பிய ஆடுகள் ஊரிலுள்ள தொழுவம் நோக்கிச் செல்கின்றன. மாலைப் பொழுதில் பார்ப்பன மகளிர் முல்லைப்பூச் சூடியுள்ளனர். நாம் இல்லாததனால் பொலிவிழந்த வறிய மாளிகையை நோக்கி மெல்ல வருந்துவாள் தலைவி. நம் ஊருக்கு அருகில் வந்து விட்டோமாதலால் ஊர் மரங்கள் கண்ணுக்குத் தோன்றுகின்றன. ஆகவே அவளைச் சென்றடைய விரைவாகத் தேரினைச் செலுத்துக.' (321)

பாகனிடத்தில் தலைவியின் இன்ப நிலை, துன்ப நிலை ஆகியவைகளைக் கூறிய தலைவன் சில நேரங்களில் வழியில் கண்டார்களிடத்தும் அவளின் அருமை பற்றிப் பேசுகிறான். தலைவன் தலைவியினிடத்தில் பெருவேட்கையுடையனாதலின் 'எவரிடம் எதனைக் கூறுவது என்னும் பெற்றி அறியாது' வழியிற் கண்ட புதியவர்களிடத்தில் கூறுகிறான்.

'பரற்கற்கள் நிறைந்துள்ள வழியில் காணப்படுவது உப்பு வணிகர் வாழும் சிறுகுடி. அவ்விடத்துள்ள புளியின் காயைத் தின்று தம் பசியைப் போக்கிக் கொள்ளும் புதியவர்களே, நான் பிரிந்து வரும்போது மகிழ்ச்சியோடு விடை தந்தாலும் பின்னர் கண்ணீர் விட்டுக் கலங்கினாள். விருந்தினரைப் பேணும் இயல்புடையளாதலால் அதற்குரிய வாய்ப்பு இன்மையின் வருந்தினாள். நெடிய கூந்தலையும் இனிய மொழியும் உடைய அவளின் நிலையினை முற்றவும் அறிய இயலவில்லை.' (374)

இவ்வாறு பல்லாற்றானும் தன் நிலையையும் தலைவியின் நிலையையும் கூறிக் கொண்டு வந்த தலைவன் மகிழ்ச்சியடையுமாறு பாகன் கூறுகின்றான். தலைவியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நினைவாற் சோர்வடையும் தலைவனைத் தேற்றுவதைக் காணலாம்.

'தலைவ! வாழ்க நின் கண்ணி! வேந்தன் வினை முடியப் பெற்று நேற்றுத்தான் ஊருக்குச் செல்ல விடை தந்தான் என்று எண்ண வேண்டாம். வரகின் கதிர்களைத் தின்ற பெண்மான், தன் கலைமானோடு கூடி மகிழ்ந்து விளையாடும் முல்லைக் காட்டில் தலைவியின் ஊர் உள்ளது. முல்லை நிலக் காட்சியைக் கண்டால் அவளும் மகிழ்ச்சியுடன் இருக்க விரும்புவது இயற்கை. அவள் வருந்தாமலும் நீ கவலைப்படாமலும் இருக்குமாறு தேரைச் செலுத்துவேன். குதிரைகள் விரைவாகச் செல்லும் இயல்பின. என் கைவன்மையால் கான்யாற்றில் இடப் பட்ட மணற்கரை பின்னே செல்லுமாறு தேர் செல்லும். இரவுப் பொழுதில் நின் வரவினை எதிர்பார்த்திருக்கும் தலைவியின் மென்மையான பணைத்த தோளின் துயிலை விரைவில் பெற்று மகிழ்வாய்.'

எல்லிவிட் டன்று வேந்தெனச் சொல்லுபு
பரியல் வாழ்கநின் கண்ணி காண்வர
வரியுளைப் பொலிந்த வீங்குசெலல் கலிமா
வண்பரி தயங்க எழீஇத் தண்பெயற்
கான்யாற்று இருமணற் கரைபிறக் கொழிய
எவ்விருந் தயரும் மனைவி
மெல்லிறைப் பணைத்தோள் துயில்அமர் வோயே !(121)

பாகன் கூற்றுக்கிணங்க வினை முடித்துத் திரும்பி வந்த தலைவன் தலைவியுடன் கூடி இன்புற்றிருக்கின்றான். இடி முழக்கத்தோடு மேகம் மழை பெய்கிறது. தலைவியைப் பெற்ற மகிழ்ச்சியில் தலைவன் மழையை வாழ்த்துகிறான்.

'பெரிய ஆரவாரத்துடன் கூடிய மேகமே! மத்தளத் தின் ஓசை போன்று இடி முழக்கத்தைப் பெற்றுள்ளாய். கடைகுழன்ற கூந்தலையும் மாமை நிறத்தினையும் உடைய தலைவியோடு கூடி இன்புற்றிருந்த இந்த ஊரில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணமலர்கள் உதிருமாறு மழையைப் பொழிந்த உதவியையும் செய்துள்ளாய். நல்ல யாழிலிருந்து தோன்றும் 'படுமலைப் பாலை' என்னும் பண்ணைப் போல விழும் நீர்த்துளிகளைக் கொண்டுள்ளாய். உலகிற்கு ஆதாரமாகக் கொண்டு பலரும் போற்ற குன்றுகளின் கொடுமுடிகள் தோறும் பொருந்தி உலா வருவாயாக'

உலகிற்கு ஆணி யாகப் பலர்தொழப்
பலவயின் நிலைஇய குன்றின் கோடுதோறு
ஏயினை உரைஇயரோ பெருங்கலி எழிலி
படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு
எழீஇ யன்ன உறையினை முழவின்
மண்ணார் கண்ணின் இம்மென இமிரும்
வணர்ந்தொலி கூந்தல் மாஅ யோளோடு
புணர்ந்தினிது நுகர்ந்த சாரல் நல்லூர்
விரவுமலர் உதிர வீசி
இரவுப்பெயல் பொழிந்த உதவி யோயே (139)

இவ்வாறு வினைமேற் சென்ற தலைவன் வினை முடிந்த பின், வினை முடிந்து திரும்பி வரும் வரையில் ஆற்றியிருந்த தலைவியோடு கூடி இன்புற்றிருக்கும் முறையில் நற்றிணை காட்டும் முல்லை வாழ்க்கை அமைந்துள்ளது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

அகநானூறு

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோ(ர்) ஏத்துங் கலியோ டகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை

என்னும் செய்யுள் எட்டுத்தொகை நூல்களைப் பற்றிக் கூறுகின்றது. இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருள் நூல்கள் ஆகும். பதிற்றுப் பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் மூன்று நூல்களும் புறப்பொருள் நூல்கள் ஆகும்.

அகப்பொருளைப் பற்றிய ஐந்து நூல்களிலும், அக நானூறு மட்டுமே 'அகம்' என்று குறிக்கப்பட்டுள்ளது, இதன் தனிச் சிறப்பைக் காட்டி நிற்கிறது.

மேற்காணும் செய்யுளில் 'கற்றறிந்தோர் ஏத்தும் கலியே யகம் புறமென்று' பாடாமல், கலியோடகம் என ஒடுக்கொடுத்து 'அகத்'திணையும் சேர்த்துக் கற்றறிந் தோர் ஏத்தும் சிறப்பிற்கு உரியதாக்கியிருப்பது உணரத் தக்கது என்பார் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை. [1]

1. அகநானூற்றுச் சொற்பொழிவுகள், பக். 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகநானூற்றுக்கு நெடுந்தொகை என்னும் பெயரும் உண்டு. இதன் பாடல்கள் பதின்மூன்றடி முதல் முப்பத்தோரு அடிவரை அமைந்துள்ளன. ஆசிரியப் பாவினால் அமைந்த அகப்பொருள் நூல்களுள் அடியளவால் நீண்டிருத்தலின் இதற்கு நெடுந்தொகை என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர் சிலர்.

தொகை நூல்களுள் அடியளவால் நீண்டு பிற நூல்கள் இருக்கவும் இதற்கே நெடுந்தொகை எனப் பெயர் அமைந்துள்ளது, பாடல் அடிகளாலன்றிப் பொருட் சிறப்பாலும் நீண்டுளது என்பதைப் புலப்படுத்தும் என்பர் சிலர்.

அகநானூற்றில் 1 முதல் 120 பாடல்கள் வரை களிற்றியானை நிரை என்னும் பெயரிலும், 121 முதல் 300 பாடல்கள் வரை மணிமிடைப் பவளம் என்னும் பெயரிலும், 301 முதல் 400 பாடல்கள் வரை நித்திலக்கோவை என்னும் பெயரிலும் அமைந்துள்ளன.

அகநானூற்றின் இறுதியில் உள்ள 'நின்ற நீதி வென்ற நேமி' என்று தொடங்கும் பாயிரச் செய்யுளையடுத்து உரைநடைப் பகுதியொன்று உள்ளது. இதில், களிற்றியானை நிரை என்பது பொருட்காரணம் பற்றி வந்த பெயர் என்றும், மணிமிடை பவளம் என்பது செய்யுளும் பொருளும் தம்முள் ஒவ்வாமையால் உவமையாற் பெற்ற பெயர் என்றும், நித்திலக்கோவை என்பது செய்யுளும் பொருளும் ஒக்குமாகலின் வந்த பெயர் என்றும் கூறப் பட்டுள்ளது.'

எனினும் இம்மூன்று பெயர்களுக்குரிய காரணமும், இப்பெயர்களுக்கும் இவைகளுக்கான பாடல் பகுதிகளுக்கும் உரிய பொருத்தமும் நன்கு புலப்படவில்லை என்பர்.

ஆனாலும், அகநானூற்றுப் பாடல்களின் சொல்நடை செம்மாந்து செல்லும் களிறுகளின் வரிசை போல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைந்துள்ளது என்றும், பொருட் சிறப்பு வெண்ணிலவினும் சிறந்து விளங்கும் நன்முத்தின் ஒளிபோல் திகழ்கிறது என்றும், சொல்லும் பொருளும் மணியும் பவளமும் கலந்துள்ளது போல் காட்சியளிக்கிறது என்றும் கூறலாம்.

எனவே, தொன்மை வாய்ந்த இப்பெயர்களின் வழக்கும் அகநானூற்றின் தனிச் சிறப்பினைக் காட்டுவதாகும்.

எட்டுத்தொகையுள் அகநானூற்றுக்கு முன் வேறு அகப்பொருள் நூல்கள் இருந்திருக்குமானால், இதற்கு 'அகம்' எனப் பெயரமைத்தல் பொருந்தாது. அகம் என்னும் பெயருடன் இது முதன் முதலில் தோன்றியிருத்தலால் பின்னர்த் தோன்றிய நூல்களுக்கு நற்றிணை முதலாய வேறு பெயரிடுவாராயினர். இதனால் ஏனைத் தொகை நூல்களைக் காட்டிலும் அகநானூறே காலத் தொன்மை உடையது என்று கருதுவர் அறிஞர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை.

இனி, இந்நூலிலுள்ள பாடல்களின் முறை வைப்புப் பாராட்டிற்குரியதாகவும் வியக்கத்தக்கதாகவும் அமைந்துள்ளது. அம் முறைவைப்பைக் குறித்து இரண்டு பழம் பாடல்கள் உள்ளன.

பாலை வியமெல்லாம் பத்தாம் பணிநெய்தல்
நாலு நனிமுல்லை நாடுங்கால்— மேலையோர்
தேறும் இரண்டெட் டிவைகுறிஞ்சி செந்தமிழின்
ஆறு மருதம் அகம்

ஒன்றுமூன் றைந்தேழொன் பான்பாலை ஓதாது
நின்றவற்றின் நான்கு நெறிமுல்லை— அன்றியே
ஆறாம் மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு
கூறாதவை குறிஞ்சிக் கூறு

இந்நூலிலுள்ள 'இன்ன பாடல் இன்ன திணையைச் சேர்ந்ததாகும்' என்று கற்பார் எளிதில் அறிந்து நினைவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்துக் கொள்வதற்கும் தொகுத்த முறை மாறாமல் நின்று நிலவுவதற்கும் பெருந்துணையாக வைப்பு முறை அமைந்துள்ளது.

ஒற்றை எண் (1, 3, 5, 7, 9) பெறும் பாடல்களெல் லாம் பாலைத் திணையிலும், இரண்டும் எட்டும் பெறும் பாடல்களெல்லாம் குறிஞ்சித் திணையிலும், நான்கு என்னும் எண் பெறும் பாடல்களெல்லாம் முல்லைத் திணையிலும், ஆறு என்னும் எண் பெறும் பாடல்களெல் லாம் மருதத் திணையிலும், பத்து என்னும் எண் பெறும் பாடல்களெல்லாம் நெய்தல் திணையிலும் தொகுக்கப் பெற்றுள்ளன.

இதனால் இந்நூலுள் பாலைத் திணைக்கு இருநூறு, குறிஞ்சித் திணைக்கு எண்பது, மருதம், முல்லை, நெய்தல் என்னும் மூன்று திணைகட்குத் தனித்தனியே நாற்பது, பாடல்கள் உள்ளன.

அகநானூறு காட்டும் முல்லை வாழ்க்கையில் போர்வினை மேற்சென்று மீண்டு வருவேன் என்று சொன்ன காலம் வந்த பின்னரும் தலைவன் வாராதது குறித்து வருந்தும் தலைவி, தலைவியினை ஆற்றுவிக்கும் தோழி, வினை முடித்து வரும்போது தேர்ப்பாகனை விரைவுபடுத்தும் தலைவன், வினை முடித்த தலைவ னுடைய வருகையைக் கண்டு மகிழும் உழையர், பாணன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

போர்வினை மேற்சென்ற தலைவன் பாசறையில் தனித்திருக்கும்போது, இல்லில் தனித்திருக்கும் தலைவியின் எண்ணமும் தோற்றமும் எவ்வாறு இருந்தது என்பதைக் காட்டுவதே முல்லை வாழ்க்கையின் சிறப்பாகும்! தலைவன் தலைவியருடைய இல்லற நெறியின் அடிப்படை யான கற்பு நெறி முல்லைத் திணையில்தான் அமைந் துள்ளது. மனைவியைப் பிரிந்து பகையரசனோடு போர் செய்வதற்காகச் செல்லும் தலைவன் 'கார்காலத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடக்கத்தில் வருவேன், அதுவரையில் நீ பொறுத்துக் கொண்டிரு' என்று கூறிப் பிரிகின்றான். அச்சொல்லினை ஏற்றுப் பொறுத்துக் கொண்டிருக்கும் தலைவி கார்காலம் வரக்கண்டு தலைவன் இன்னும் வரவில்லையே என வருந்துவது இயல்பே. எனினும் இவ்வாறு பொறுத்துக் கொள்ளாது வருந்தல் கணவன் கற்பித்த சொல்லை மீறியதாகுமாதலின், அவன் வரும்வரையில் பொருத் திருத்தலே முறையாகும் என்று பொறுத்திருக்கின்றாள். இதுவே முல்லை வாழ்க்கையின் நுட்பம்.

தலைவி

இவ்வாறு இல்லில் தனித்திருக்கும் தலைவி ஒப்பனை செய்து கொள்ளாமல் தலைவனை நினைந்து வருந்து கிறாள். தோழி அவளுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறுகிறாள். அதற்குத் தலைவி மாலைப்பொழுதினால் தான் அடையும் வருத்தத்தைக் கூறித் தன் ஆற்றாமையை உரைக்கின்றாள்.

'மழை பொழிந்ததால் முல்லைக் காட்டு வழியில் தம்பலம் பூச்சிகள் எங்கும் பரந்து கிடக்கும். முல்லைக் கொடியில் முல்லைப் பூக்கள் மலர்ந்திருக்கும். அவை உதிர்ந்தும் இருக்கும். அங்கு ஆண் மானைத் தொடர்ந்து செல்லும் பெண் மானின் மருண்ட பார்வையைப் பார்க்கும்போது தலைவன் உன்னை நினைப்பான். அப்போது போர் வீரர்கள் வாழ்த்தத் திரும்பி வந்து கொண்டிருக்கும், அவன் தேரினை விரைவாகச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அதனால் இன்றே தலைவனும் வருவான். நம் துன்பம் தீர்வோம்' என்று ஆறுதல் கூறுகின்ற தோழியே, 'நானும் நின் சொல்லைக் கேட்டு ஆற்றியிருப்பேன். மாலைப்பொழுதும் அம்மாலைப்பொழுதில் கோவலர் ஊதும் குழலும் வருத்த வில்லையென்றால்' என்கிறாள் தலைவி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திண்தேர் வலவ கடவுஎனக் கடைஇ
இன்றே வருவர் ஆன்றிகம் பனிஎன
வன்புற இன்சொல் நன்பல பயிற்றும்
நின்வலித்து அமைகுவென் மன்னோ அல்கல்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோற்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே (74)

கார்கால நிகழ்வுகள் தலைவியின் வருத்தத்தை மிகுதிப் படுத்துகின்றன. மழை பெய்த மேட்டுப் பாங்கான செம்மண் நிலத்தில் உழவர்கள் உழுவது, விதை விதைப்பது, வரகின் விதைகள் முளைப்பது, உழவர்கள் களையெடுப்பது வரகு விளைவது, விளைந்த வரகினை உண்ட மயில்கள் அகவுவது ஆகிய நிகழ்வுகள் கார்காலத் தைக் குறிக்குமானால், கார்காலத்து வருவதாகக் கூறிய தலைவன் பொய்த்து விட்டாரல்லவா என்று தோழியைக் கேட்டுப் புலம்புகிறாள். (194)

தலைவன் மீள்வதாகச சொல்லிச் சென்ற கார்காலத்து வரவில்லை. தலைவி ஒருவாறு ஆற்றியிருக்கிறாள். முசுண்டைப் பூக்கள் மலரவும், வெண்காந்தள் மலர் களைச் சூடிக்கொண்டு திரியும் கோவலர்கள் மாலையில் ஆனிரைகளோடு ஊர் திரும்பவும், பெருமழை பெய்தலால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடவும் கூதிர்க்காலமும் வந்தது. தலைவியின் வருத்தம் மேலும் மிகுதியாயிற்று. 'நம் நிலையை அறிந்து கொள்வதற்கு இயலவில்லை என்றாலும் தமக்குப் பின்னர் உண்டாகும் துயரத்தின் நிலைமையினையாவது அறிந்துள்ளாரா தலைவர்' என்று தோழியைக் கேட்பதன் மூலம், தன்னுடைய இறப்பைப் போன்ற துன்பத்தைச் சுட்டிக்காட்டுகிறாள் தலைவி.

நம்நிலை அறியார் ஆயினும் தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே— ஓங்குநடைக்
காய்சின யானை கங்குல் சூழ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அஞ்சுவர இறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே (264)

போர்வினை மேற்சென்ற தலைவன் சொல்லியவண்ணம் கார்காலத்தில் வராதது போலவே, கூதிர்க்காலத்திலும் முன்பனிக் காலத்திலும் வராமலிருக்கின்றான். அது கண்டு வருந்தும் தலைவிக்குத் தலைவன் மேல் இருந்த நம்பிக்கை தளரத் தொடங்கியது. தன் வேதனையைச் சொல்லி வருந்துகிறாள்.

'இருண்ட மேகம் பெரிய மழையைப் பெய்தது. அதற்குப் பின்னர் பனிக்காலமும் வந்தது. நீல மலர்களும் ஈங்கையின் தளிர்களும் பனியில் அசைகின்றன. அவரைப் பூக்கள் பூத்துள்ளன. முற்றிய செந்நெற் பயிர்கள் சாய்ந்து கிடக்கின்றன. அப்படிப்பட்ட முன்பனிக் காலத்து நள்ளிரவில் வாடைக் காற்றோடு வருந்திக் கொண்டிருக்கின்றேன். நம் நோயின் தன்மையினை அறியாத தலைவன், வேந்தனின் பாசறையில் நீண்ட காலம் இருக்கிறார். நம்முடைய துன்பத்தை உணராத அறநெஞ்சம் இல்லாதவராக இருக்கும் அவர், என் துன்பத்தைப் போக்குவதற்காக வருவாரா' என்று தோழியைப் பார்த்துக் கேட்கிறாள்.

கதிர்சினை தூங்கும் அற்சிர அரைநாள்
காய்சின வேந்தன் பாசறை நீடி
நம்நோய் அறியா அறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொலென
ஆனாது எறிதரும் வாடையொடு
நோனேன் தோழி என்தனிமை யானே (294)

முல்லை சான்ற கற்பினையுடைய தலைவி, தலைவனை 'அறனிலாளர்' என்று பழித்தல் அவளுடைய நம்பிக்கை வறட்சியைக் காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழி

'அறினிலாளன்' என்று தலைவனைப் பழித்த தலைவியைத் தோழி ஆற்றுகின்றாள். 'கார்காலத்தில் இணை சேர்ந்த வண்டுகளின் பிரிவுக்கே அஞ்சும் பெருந்தகையாளன் தலைவன். அவன் நின்னைப் பிரிதல் கூடுமா? மாறாக விரைந்து வருவான்' என்று தோழி தலைவிக்கு நம்பிக்கையூட்டுகிறாள்.

'ஆய்தொடி அரிவையாகிய தலைவியே, முல்லைக் கொடியிலே கூர்மையான அரும்புகள் தோன்றியுள்ளன. தேற்றா மரத்தின் மொட்டுக்களும் கொன்றை மரத்தின் மொட்டுக்களும் மலர்ந்துள்ளன. கலைமான்கள் பரற்கற் களையுடைய பள்ளங்களில் துள்ளி விளையாடுகின்றன. மழை பெய்ததால் முல்லைக் காடு புதிய அழகினைப் பெற்றுள்ளது. இவ்வாறு கார்காலம் வந்துள்ளது.

குறும்பொறை நாடனாகிய தலைவன், மலைச் சாரலில் தோன்றும் காந்தள் மலர்களின் மலர்ச்சியில் தலைவியின் மாணலம் படர்வதை அறியும் இயல்பினை யுடையவன்.

மலர்ச்சோலைகளில் தம் துணையொடு இணைந்து வாழும் யாழொலி போல ரீங்காரம் செய்கின்ற தேனுண்ணும் வண்டுகள், தன்னுடைய தேரில் கட்டப் பட்டுள்ள மணியோசை கேட்டுப் பேதுற்று மயங்குமோ என அஞ்சித் தன் தேர்மணிகளின் நாவை ஒலியாமல் இழுத்துக் கட்டும் பெருந்தகையாளன் தலைவன். அவன், அழகாக வெட்டிவிடப்பட்ட பிடரியினையுடைய குதிரை கள் பூட்டப்பெற்ற தேரினை விரைவாகச் செலுத்திக் கொண்டு இங்கே வருவான். நின் வருத்தத்தைக் கைவிடுக'

கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள்பு அரிய
பூத்த பொங்கர்த் துணையொடு வதியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன் (4)

இடித்து முழக்கிக் கார்கால மழை பெய்கிறது. மண்ணெல்லாம் குளிர்கிறது. காடெல்லாம் தழைக்கிறது. உழவு செய்வதற்காகத் தன் இனத்தவரை உழவர்கள் அழைக்கின்றனர். கன்றினையுடைய பெண் மான்களைத் தழுவிய வாறு கலைமான்கள் துள்ளித் திரிகின்றன. மாலைப் பொழுதில் செவ்வழிப்பண் கேட்கிறது. தலைவியின் உள்ளத்தில் காதல் ஏக்கந் தோன்றுகிறது. பாணனிடம் 'இந்நிலை வாராராயின் தந்நிலை எவன் கொல்' என்று கேட்டுத் துன்புறுகிறாள். செயல் மறந்து தன்னிலை கெடுகிறாள். அப்போது அவள் வருத்தமெல்லாம் தீரத் தலைவன் வருகின்றான்.

அந்நிலையில் தோழி தலைவனை வாழ்த்துகிறாள். 'இனிய செயலைச் செய்த தலைவனே நீ வாழ்க. முல்லைப்பூமாலை கமழும் தலைவி நின் அகன்ற மார்பைத் தழுவிக் கொள்ள இனிது நிலைபெறுக'

செய்வினை அழிந்த மையல் நெஞ்சில்
துணிகொள் பருவரல் தீர வந்தோய்
இனிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தார் கமழும் விருந்தொலி கதுப்பின்
இன்னகை இளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே (314)

அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு திரும்பிய தலைவனைக் கண்டு தலைவி பெருமகிழ்ச்சியடைகிறாள். அதைக் கண்டு தோழியும் மகிழ்ச்சியடைகிறாள். அதற்குக் காரணமான தலைவனைப் பாராட்டுகிறாள்.

'தெய்வத்தன்மை பொருந்திய கற்பினையும், குடிக்கு விளக்காகிய புதல்வனைப் பெற்ற புகழ்மிகு சிறப்பினை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் உடைய தலைவிக்கு அல்லாமலும் எனக்கும் நின் வருகை மகிழ்ச்சி தருகிறது. நின் ஆயுள் சிறக்க!'

கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டிக் கன்றியும் எனக்கும்
இனிதா கின்றால் சிறக்க நின்ஆயுள் (184)

இவ்வாறு தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியை ஆற்றுவித்தலும், செய்வினை முடித்துத் திரும்பிய தலைவனை வாழ்த்தலும் ஆகிய செயல்களைத் தோழி செய்கிறாள்.

வினை முடித்துத் திரும்பிய தலைவனைத் தோழியைப் போலவே பாணனும் பாராட்டுகின்றான். கார்கால மாலைப்பொழுதினைக் கண்டு மயங்கிய தலைவி பாணனைப் பார்த்து, 'இத்தகைய மாலைப் பொழுதிலும் தலைவர் நம்மை நினைக்கவில்லையானால் நாளைக் காலைப்பொழுதுக்குள் நம் நிலைமை என்னாகுமோ' என்று சொல்லி வருந்துகிறாள். அவளுக்கு ஆறுதல் கூறவியலாத பாணன் யாழெடுத்துச் செவ்வழிப் பண்ணை இசைக்கிறான். அவளுக்காக இரங்கி அருள் செய்யுமாறு கடவுளை வாழ்த்துகிறான். தானும் அவளாக மாறித் தலைவியின் துன்பத்தைத் தன் உடலில் நிறுத்தி உணர்கிறான், துயரடைகிறான். அப்போது தலைவனுடைய தேர் வருகின்றது. அந்த நெஞ்சுநிறை காட்சியைத் தன் நண்பர்க்குக் கூறி மகிழ்கிறான்.

மாலையும் உள்ளா ராயின் காலை
யாங்கா குவம்கொல் பாண என்ற
மனையோள் செல்லெதிர் சொல்லல் செல்லேன்
செவ்வழி நல்யாழ் இசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந்நிறுத்து
அவர்திறம் செல்வேன் கண்டனென் யானே—
....
முனைநல் லூரன் புனைநெடுந் தேரே (14)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறைவனைக் குறிக்கும் 'கடவுள் வாழ்த்து' என்னும் சொல்லாட்சிப் பாணன் உரையில் வந்திருப்பது குறிப்பிடத் தக்கது!

தான் மேற்கொண்ட செயலை வெற்றியுடன் முடித்து மீளும் தலைவனைக் கண்டு உழையோர் பாராட்டி மகிழ்கின்றனர்.

'நம் அரசன் பாசறையில் போர்த்தொழிலை முடித்தான். அதனால் தலைவியைப் பார்க்கும் பெரு விருப்பத்தோடு தேரில் ஏறியதை அறிந்தேனே அல்லாமல் இங்கு வந்த வழியினை அறியவில்லை! முயல் குட்டிகள் தாவித் திரியும் முல்லைக் காட்டிலுள்ள சிற்றூரில் தலைவியினுடைய இல்லின் முன் தேரை நிறுத்தி 'இறங்குக' எனக் கூறிய நின் சொல்லைக் கேட்டு மருண்டு போனேன். வானில் திரியும் காற்றினையே குதிரையாகப் பூட்டியிருந்தாயோ? அன்றி, நின் மனத்தினைத்தான் பூட்டியிருந்தாயோ? உரைப்பாயாக, பாகனே' என்று தன் தேர்ப்பாகனைப் பாராட்டிய தலைவன் தன் மார்புடன் அவனைத் தழுவியவாறே மனைக்கண் அழைத்துச் சென்றான்.

தலைவி விருந்தாகிய ஒரு சிறப்பினைப் பெற்று மகிழ்ந்தாள் என்று உழையோர் பாராட்டினர்.

தேரினை விரைவாகச் செலுத்திய பாகனைப் பாராட்டியதோடு அவனை மார்புறத் தழுவியவாறு மனைக்கண் அழைத்துச் சென்று விருந்தூட்டிய பண்பு, அந்நாளில் தலைவர்க்கும் பாகர்க்கும் இருந்த உளங்கலந்த உறவின் பெற்றியைப் புலப்படுத்துகிறது எனலாம்.

ஏறியது அறிந்தன்று அல்லது வந்த
ஆறுநனி அறிந்தன்றோ இலனே .....
....
வான்வழங்கு இயற்கை வளியூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே (அகம். 384)

'தலைவன் பிரிவால் தலைவியின் நெற்றியில் பூத்திருந்த பசலை இனி நீங்கும்; அவள் இன்பத்திலே திளைத்து மகிழ்வாள்' என்றும் கூறி மகிழ்வர் உழையோர். (354)

மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே

என்னும் நளவெண்பாப் பாடல் (378) இங்குக் குறிக்கத் தக்கது!

தலைவன்

தன்னுடைய வேந்தனுக்கு உதவியாகப் போர் வினை மேற்சென்ற தலைவன் பாசறையில் தனித்திருக்கும்போது தலைவியை நினைத்து ஏங்குவான். மாரிக்காலத்து மாலைப்போது அவன் ஏக்கத்தை மிகுதிப்படுத்தும். தன் நெஞ்சோடு பேசி ஆறுதல் கொள்வான்.

'வானத்துப் பரவி நின்ற மேகங்கள் யானைக் கூட்டங்கள் மகிழ்ச்சியடையுமாறு மழை பெய்கின்றன. நம் வேந்தனும் பகை மன்னரோடு முரண்பட்டுப் பாசறையில் கண்மூடாமல் இருக்கின்றான். போர்ச் செயலும் நம் பொறுப்பில் உள்ளது. ஆனிரையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியொலியும், கோவலர்களின் ஆம்பற் குழலிசையும் செவ்வழிப்பண்ணை மீட்டும் யாழிசையும் மாரிக்காலத்து மாலைப்பொழுதில் கேட்கின்றன. இவ்வாறு இந்த இசைகளையெல்லாம் மாலை நேரத்தில் தனியளாயிருந்து கேட்கும் தலைவி எவ்வாறு பொறுத்துக் கொள்வாளோ? அவள் நிலை என்னாகுமோ?' (214)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கார்காலத்துப் பெய்த மழையால் நிலம் சமனாகிறது. காடு அழகு பெறுகிறது. அணி கொண்டு விளங்கும் காட்டினைக் காணுந்தோறும் தன் மேனி அணிகொள்ளா திருத்தலை நினைக்கும் தலைவி, அதற்குக் காரணமான தன்னைப் பழித்து ஊடியிருப்பாளோ என நினைத்து வருந்துகிறான் தலைவன். தன் நெஞ்சோடு பேசுகிறான்.

கார்மேகத் தொகுதி பனிக்கட்டியுடன் கூடிய மழையைப் பெய்கிறது. வைகறை வேளையில் செம்மண் நிறைந்த முல்லை நிலக் காட்டில் குட்டியைத் தழுவிய பெண்மான் கலைமானோடு துள்ளித் திரிகிறது. குருந்த மரத்தின் நிழலில் தங்குகிறது. பிடவ மலர்கள் பூத்துள்ளன, மயில்கள் தோகைகளை விரித்து ஆடுகின்றன. காயா மலர்களும் தம்பலப் பூச்சிகளும் விரவிக் கிடந்து நிலத்தை அழகு செய்கின்றன.

இவ்வாறு காடெல்லாம் கவின் பெற்று விளங்கு வதற்குக் காரணமான கார்காலத் தொடக்கத்தில் தலைவர் வேற்றுநாட்டுப் பாசறையில் தங்கியுள்ளார். 'நமக்கு அருள் செய்யாத அவர் சிறிதும் அறவுணர்வு உடையர் அல்லர்! என நம்மை நினைத்து மனம் நொந்து வேறுபட்டு, நாம் அவளை நினைத்துக் கொண்ட நோயின் இயல்பையும் அறியாதவளாகி, நம்மை வெறுக்கவும் செய்வாளோ' என்று தன் நெஞ்சினைப் பார்த்துக் கேட்கிறான் தலைவன்.

புலனணி கொண்ட காரெதிர் காலை
ஏந்துகோட்டு யானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத்து அல்கி நன்றும்
அறவர் அல்லர்நம் அருளா தோரென
நந்நோய் தன்வயின் அறியாள்
எந்நொந்து புலக்குங்கொல் மாஅ யோளே (304)

பாசறையில் தனித்துறையும்போது தலைவியை நினைத்து ஏங்கிய தலைவன் வினை முடிந்ததும் கார்காலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்ததாகத் தன் வீடு திரும்புகிறான். குதிரை பூட்டிய தேரில் வரும்போது தான் வாழும் வீட்டின் வழியிடத்தைத் தெரிவித்துத் தேரினை விரைவாகச் செலுத்துமாறு பாகனிடம் கூறுகின்றான்.

'அரவுகள் அழியுமாறு இடிமுழக்கமிட்டு மேகங்கள், கார்கால மழையைப் பெய்தன. அவ்வாறான கார்காலத்தின் ஓர் இரவிலே உறியினையும் பானையினையும் தோற்படுக்கையினையும் கொண்ட இடையன் ஆட்டுக் குட்டிகளின் பாதுகாப்பிற்காக விறகுகளை வைத்துத் தீ மூட்டுவான். மழைத்துளிகள் தன்னுடைய உடம்பின் ஒரு பக்கத்தை நனைக்கவும் தண்டுகால் ஊன்றித் தனித்து நிற்கும் அவன் தன் வாயினை மடித்துச் சீழ்க்கையொலி எழுப்புவான். அச்சீழ்க்கையொலி கேட்டு ஆட்டுக் குட்டிகளைக் கவர்ந்து செல்வதற்கு நேரம் பார்க்கும் நரியானது புதருக்குள் புகுந்து ஓடிப் போகும். அத்தகைய காட்டினிடத்து முல்லை மலர் அணிந்த கற்பினையுடைய தலைவி வாழும் ஊர் உள்ளது. அவ்வூரினை நோக்கித் தேரினை விரைவாகச் செலுத்துவாயாக'

தண்ணறும் புறவி னதுவே நறுமலர்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே (274)

கார்காலத்து மாலைப்பொழுதின் நிகழ்வுகள் தனிமைத் துன்பத்தில் வருந்திக் கொண்டிருக்கும் தலைவியின் ஏக்கத்தை மிகுதிப்படுத்தும். தான் வருவதாகக் குறித்த காலத்திலே வாராததால் தலைவியின் உள்ளம் பெரிதும் கலங்கும் என்பதைப் பாகனுக்கு எடுத்துக்கூறித் தேரினை விரைவாகச் செலுத்துவதற்கு வழிகோலுமாறு வேண்டுகிறான்.

'கார்கால மழைநீர் படிந்த செம்மண் நிலத்தில் செல்லும் தேர்க்கால்தோறும் உள்ள ஈரமணலைக் கானங் கோழிகள் கிளறும்; பாம்புப் புற்றினைக் குத்தினதால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் மண்ணுடன் விளங்கும் கொம்புகளையுடைய ஆனேறானது தனது இளைய பசுவினைத் தழுவிக் கொண்டு ஊர் நோக்கி வரும்; கன்றுகளை அழைக்கும் குரலோடு கறவையினங்கள் தொழுவங்களை அடையும்; அப்போது தோன்றும் அவைகளின் கழுத்து மணியொலி கேட்கும் மாலைநேரத்தில் தனிமைத் துன்பத்தில் வருந்தி இருக்கும் தலைவியின் உள்ளம் கலங்கிச் செயலற்றுப் போகும். அவளுடைய துன்பத்தைப் போக்க நாம் நம் வீரர்களுடன் வீடு திரும்பிச் செல்ல விரும்பினோமானால், பறவைகளைப் போலப் பறந்து செல்லும் குதிரை களுடைய கடிவாள வாரினை அறுந்து போகாதவாறு நன்கு தேர்ந்து கொள்வாயாக'

மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு
உடன்நிலை வேட்கையின் மடநாகு தழீஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதிற் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்
ஆபூண் தெண்மணி ஐதியம்பு இன்னிசை
புலம்புகொள் மாலை கேட்டொறும்
கலங்கினள் உறைவோள் கையறு நிலையே (64)

போர் முடிந்ததும் தலைவியின் பொற்புறு ஆகத்துத் துயிலின் இனிமை தலைவனுக்கு நினைவு வர, பாகனிடம் விரைந்து தேரினைச் செலுத்துமாறு கூறுகிறான்.

'வேந்தனும் போரில் வெற்றி பெற்றான்; பகைவரும் திறைகளைச் செலுத்தித் தமர் ஆயினர். இரு பக்கத்துச் சேனைகளும் ஒன்றாயின. புதிய வருவாயினையும், நெல்லினைத் தரும் பல குடிப்பரப்பினையும், யானைகள் படியும் குளத்தினையும், நெருங்கிய காவற்காடுகளையும் உடைய குளிர்ச்சியான குடவாயில் என்னும் ஊரைப் போன்ற சிறப்பினை யுடையவள் தலைவி. அவளுடைய பாடறிந்து ஒழுகும் இயல்பு நிறைந்த மார்பகத்து இனிமையான துயிலைப் பெற வேண்டும். அதற்காகப் பாகனே, உடன் வரும் தேர்களையெல்லாம் பின்னடையச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யுமாறு நம் தேரினை விரைவாகச் செலுத்துவாயாக! (44)

தலைவியினுடைய எதிர்பார்ப்பும், அடக்கமும், ஏக்கமும் தலைவனுடைய நினைவுக்கு வர, உடனே சென்று அவளைக் கூடி மகிழ வேண்டும் எனத் துடிக்கின்றான். இரவுப் பொழுதிற்குள் தலைவியைச் சேறுமாறு பாகனுக்குக் கூறுகிறான்.

'காற்றினைப் போன்று கடுகிச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் நம் இனிய உயிர்த்துணையான தலைவர் இன்று வருவாரோ' என்று தோழியைக் கேட்டு எதிர்பார்த்திருப்பாள் தலைவி. வளையல்களை ஒலிக்காமல் ஒடுக்கியும், தனியாக வாழும் பெரிய மனையினைப் பார்த்துப் பார்த்து ஏங்கி வருந்தியும் வாழ்பவள் அவள். அதனால் இன்று இரவுப் பொழுதிற்குள்ளாகவே அவளைச் சென்று அடையுமாறு தேரினை விரைவாகச் செலுத்துவாயாக.' (224)

'ஆணும் பெண்ணுமான மான்கள் துள்ளித் திரிந்து கொண்டும் வண்டுகள் பூந்தாதுக்களை ஊதிக்கொண்டும் மகிழ்வோடு இருக்கின்ற மாலைக் காலத்தில் முல்லை நிலத்தை ஒட்டியுள்ள ஊரில், நீர் சொரியும் கண்களையும் பசலை படர்ந்த மேனியினையும், ஒப்பனை செய்யாத கூந்தலையும் கொண்டு தலைவி வாடியிருக்கிறாள். அவளுடைய வாட்டத்தைப் போக்குவதற்காக, அன்னப் பறவைகளைப் போல விரைவாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரினைக் காற்றோ என மயக்கம் ஏற்படுமாறு விரைவாகச் செலுத்துவாயாக!' (234)

தலைவியின் தூதாக வந்த பாணனிடமிருந்து, அவளின் தாங்கவியலாத துன்பத்தினை அறிந்த தலைவன், பாகனுக்கு இவ்வாறு அறிவுறுத்துகிறான்.

'பகல் முழுவதும் தங்கியிருந்த மரத்தை விட்டு வாவல் பறவை மாலையில் புறத்தே பறந்து செல்லும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலர்ந்துள்ள முல்லைப் பூவோ சிரிப்பதைப் போலத் தோன்றி மணம் பரப்பி வண்டினத்தைத் தன்னைவிட்டு நீங்காதவாறு தடுக்கும். இவ்வாறான குளிர்காலத்தில் நம்மைத் தேடித் தலைவர் வந்தாலும் வாராவிட்டாலும்' அவர் வாழ்க', என்று கூறித் தன் கண் சிவக்குமாறு அரிய துன்பத்தைத் தலைவி பெற்றுள்ளாள்' என்று தூது வந்த பாணன் கூறினான். நாம் முன்னிய செயலும் முடிந்தது. அதனால் நீயும் தேரினை விரைவாகச் செலுத்துவாயாக!' (244)

வினைமேற் சென்ற தலைவனை நினைத்துத் தலைவி எவ்வளவுதான் வாடி வருத்தப்பட்டாலும், வினை முடிந்து அவன் கொண்டுவரும் செல்வத்தைப் பற்றிக் கேட்கும் போது அவள் பெருமகிழ்ச்சியடைவாள். இந்நினைவு தோன்றத் தலைவன் பாகனுக்குக் கூறுகிறான்.

'வருவோம் என்று நம் தலைவர் உரைத்துச் சென்ற நாளும் பொய்த்துவிட்டன. கண்கள் சொரியும் கண்ணீரும் நிற்கவில்லை. முல்லை மாலையை இழந்த நம் கூந்தலைப் பற்றியும் அவர் நினைக்கவில்லை. மனைவியை வருந்த விடுவது அறமன்று என்று அறத்திற்கும் அஞ்ச வில்லை. அவருடைய அருட்செயல் நம்மிடம் மாறினா லும் மாறட்டும்' என்றெல்லாம் கூறிப் பெரிதும் புலம்புவாள் தலைவி. ஆயினும் போர் செய்து நாம் அட்ட செல்வத்தைப் பற்றி உறவினர் புகழ்ந்து பேசுவ தைக் கேட்கும்பொழுது, தலைவி நம்மோடு அணையும் இன்பத்தைப் பெறுவாள்.

அருள்கண் மாறலோ மாறுக அந்தில்
அறனஞ் சலரே ஆயிழை நமரெனச்
சிறிய சொல்லிப் பெரிய புலப்பினும்
பனிபடு நறுந்தார் குழைய நம்மொடு
துனிதீர் முயக்கம் பெற்றோர் போல
உவக்குநள், வாழிய நெஞ்சே ..... (144)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வினைமுடித்து மீளும் தலைவனுக்கு வானில் தோன்றும் இளநிலா, தன் புதல்வனை நினைவூட்டுகிறது. புதல்வனோடு கூடிய தலைவியைக் காணத் துடிக்கும் அவன், பாகனை வேண்டுகிறான்.

'நம் வேந்தனும் வெம்பகை முடித்தான். கார்கால மழை பெய்யத் தொடங்கியது. கோவலர்கள் தம் கொன்றையம் குழலை இசைக்கப் பசுக் கூட்டங்கள் கன்று களோடு நினைத்தவண்ணம் வீடுகளை நோக்கி விரை கின்றன. பல்வகை அரும்புகளும் மலர்கின்றன. இவ்வாறு தோன்றும் மாலைக் காலத்தில் இனிமையான சொற்களையும் இளமதி போன்ற முகத்தினையும் பொன்னாலான தாலியினையும் உடைய என் மகனை நினைத்து 'இங்கே வருகுவையாயின் தருகுவென்பால்' என அழைப்பாள் தலைவி. அவளைச் சென்று விரைவில் காண வேண்டும். ஆகவே பாகனே, தேரினை விரையச் செலுத்துவாயாக!'

முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குல்எம் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே (54)

தலையும் பிணையும் மகிழ்ச்சியுடனும் பொறுப்புடனும் வாழ்வதைக் கண்ட தலைவனுக்குத் தலைவியின் உயர்ந்த பண்பும் நாணமும் நினைவுக்கு வருகின்றன. அவனுள்ளத் தில் காதலுணர்வு மிகுதியாகப் பாகனுக்கு உரைக்கிறான்.

'பிடவ மலர்கள் பூத்துள்ள புதர்கள் நிறைந்த முல்லை நிலத்தில் கலைமான்கள் அறுகின் கொத்துகளைக் குட்டிகளையுடைய பெண்மான்களை அருந்தச் செய்யும். பிறகு அவை துயிலும் போது காவல் காக்கும். அது போலத் தலைவிக்குத் தலையளி செய்யவில்லையே என்று தளரும் நெஞ்சம் மீண்டும் இன்பமுற வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri.Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்னப் பறவைகள் மகிழ்ந்து விளையாடுகின்ற மனையின்கண், கையில் ஏந்திய பச்சைக் கிளியினிடத்தில் பிறர் அறியாதவாறு மெல்லென, 'பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவார் என உரைப்பாயாக' என்று கூறுபவள் தலைவி. தலைவியினுடைய நலத்தினைப் பெற்று மகிழ வேண்டும். அதனால் நின்தேர் விரைந்து செல்வதாக.'

செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாணலம் பெறவே (34)

இல்லத்திலே இருக்கும் பிறர் அறிந்தால் தன்னுடைய ஆற்றியிருத்தலாகிய பண்புக்கு இழுக்கு வருமோ என அஞ்சிய தலைவியின் கூற்று, தலைவியின் உயர்ந்த பண்பைக் காட்டுவதாயுள்ளது.

வினை முடித்த தலைவன் 'வினைமுடித்தன்னோளா' கிய தலைவியிடத்தில் 'வினைமுடித்தன்ன' இன்பத் தைக் காண விரைகிறான். விரைந்து செல்ல விரும்பும் பாகனுக்குத் தேரின் குதிரைகளைச் செலுத்தும் விதம் குறித்துக் கூறுகிறான். இதில் தலைவனுடைய மிக உயர்ந்த பண்பு வெளிப்படும் அருமையான கருத்து இடம் பெற்றுள்ளது.

'மேகங்கள் கார்காலத்து மழையைத் தப்பாமல் பெய்தன. நீலமணி போன்ற காயா மலர்களுக்கு இடை யில் இந்திரகோபப் பூச்சி பரத்தலினால் காடு அழகு பெற்றுத் திகழ்கிறது. நல்ல முல்லை மலர்கள் கழலின் கொடிக்கண் வீழ்தலினால் ஓவியப் புலவனின் செய்கையை யொத்துத் தோன்றுகிறது. சிவந்த முல்லை நில வழி. இந்த வழியில் விரைவாகத் தாவிச் செல்லும் குதிரையின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கால்கள் மெல்ல நடக்குமாறு, சாட்டையால் அடித்தலை மறந்து, பாகனே, தேரைச் செலுத்துவாயாக.'

ஏனெனில், வாழைக்குலை போல முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமானுடன் புணரும் நிலையிலுள்ள பெண்மான், விரைந்து செல்லும் குதிரை பூட்டிய தேரின் ஒலியைக் கேட்பின், மருண்டு செல்லுதலும் கூடுமல்லவா?

இடிமறந்து ஏமதி வலவ குவிமுகை
வாழை வான்பூ ஊழுறுபு உதிர்ந்த
ஒழிகுலை யன்ன திரிமரும்பு ஏற்றொடு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே (134)

தலைவியைக் கூடி மகிழ்தற்கு விரைகின்ற தலைவன், ஆணும் பெண்ணுமாய்ப் புணரும் நிலையிலுள்ள மானினங்களின் பிரிவுக்கு அஞ்சினான் என்பது தலைவனுடைய உயர்ந்த பண்பைக் காட்டுவதாயுள்ளது!

இவ்வாறு போர் வினைமேற் சென்ற தலைவனை இல்லிருந்து நினைத்து ஏங்கும் தலைவி, போர் வினை முடித்தபின் தலைவியின் பல்வேறு இயல்புகளையும் ஏக்கங்களையும் சிறப்புகளையும் நினைத்து விரையும் தலைவன் ஆகிய இருவரின் எண்ணங்களையும் முதன்மையாகக் கொண்டுள்ளது அகநானூறு காட்டும் முல்லை வாழ்க்கை!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகை ஆறாவதாகும். இது, கலிப்பா வகையுட் சிறந்த ஒத்தாழிசைக் கலிப்பாவாலான நூற்றைம்பது பாடல்களைக் கொண்டு உள்ளது. அப்பாடல்களுள் முதற்பாடலான கடவுள் வாழ்த்து நல்லந்துவனாரால் இயற்றப் பெற்றது. பாலைத் திணை பற்றிய 35 பாடல்களையும் சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோவும், குறிஞ்சித் திணை பற்றிய 29 பாடல்களையும் கபிலரும், மருதத்திணை பற்றிய 35 பாடல்களையும் மருதனிளநாகனாரும், முல்லைத் திணை பற்றிய 17 பாடல்களையும் சோழன் நல்லுருத்திரனும், நெய்தல் திணை பற்றிய 33 பாடல்களையும் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடிய நல்லந்துவனாரும் இயற்றியுள்ளனர்.

கலித்தொகை, 'குறுங்கலித்தொகை' எனவும் 'கலி எனவும் வழங்கும். இறையனார் களவியல் உரைப் பகுதியில் 'நூற்றைம்பது கலி' எனக் குறிக்கப் பட்டுள்ளது.

'கற்றறிந்தார் ஏத்துங் கலி', 'கல்வி வலார் கண்டகலி' என்னும் தொடர்கள் கலித்தொகையின் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்டுவனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்
விருத்தக் கவிவள்ளும் வேண்டேம்— திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம் நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்

என்று கற்றறிந்த பிற்றை நாள் புலவர்களால் போற்றிப் புகழப்படுவதாயிற்று.

பாவகையால் மட்டுமல்லாமல் பொருள் வகையாலும் சொல் வகையாலும் மற்றத் தொகை நூல்களுக்கும் கலித் தொகைக்கும் வேறுபாடு உண்டு.

''ஐந்திணைக்குரிய பாடல்களே ஏனைத்தொகையில் உள; ஏழு திணைக்குரிய பாடல்களையும் கொண்டு இலங்குவது கலித்தொகையே. கைக்கிளை, பெருந்திணைச் செய்யுள்கள் சங்கவிலக்கியத்து மிகச் சில. அச்சில தாமும் கலித்தொகை ஒன்றிற்றான் காணப்படுவ...ஏறு தழுவி வரைந்து கொள்ளுதல் என்னும் முல்லைத் துறைப் பாக்கள் கலித்தொகையிலன்றிப் பிற தொகை நூல்களில் காணுமாறில்லை'' என்பார் டாக்டர் வ.சுப.மாணிக்கம். [1]

''கலிப்பாக்களில் வரும் பெரும்பாலாரான தலைவன் தலைவியர் வினைவலபாங்கர் ஆதலால் தலைவி, தலைவனை 'ஏடா' என்றும் தலைவன் தலைவியை 'ஏடி' என்றும் அழைப்பதைக் காண்கிறோம்'' என்பார் டாக்டர் மா. இராசமாணிக்கம்[2]

முல்லைத்திணை பற்றிய 17 பாடல்களைக் கொண்டுள்ள முல்லைக்கலி காட்டும் முல்லை வாழ்க்கை யைக் காண்போம்.

இந்தப் பதினேழு பாடல்களில் ஒன்று (கலி. 109) கைக்கிளைத் திணை, ஏனையவெல்லாம் களவியலைச்

---

1. தமிழ்க் காதல், பக். 19
2. தமிழ்மொழி இலக்கிய வரலாறு, பக். 192

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்தவை என்றும், கற்பியலைச் சேர்ந்தவை இடம்பெற வில்லை என்றும் டாக்டர் வ. சுப. மாணிக்கம் கருதுவார்.[3] முல்லைக்கலிப் பாடல்கள் அத்திணைக்குரிய முதல் கருப் பொருள்களைக் கொண்டுள்ளதேனும் முல்லைத் திணைக்குரிய இருத்தல் ஒழுக்கத்தைப் பாடாது, குறிஞ்சித் திணைக்குரிய புணர்தலைப் பாடியுள்ளன. ஆகவே, பிற சங்கவிலக்கியத்து முல்லைத் திணைப் பாடல்களில் இடம்பெறும் வினைமேற் சென்ற தலைவனை நினைந்து ஆற்றியிருக்கும் தலைவி, வருந்தும் தலைவிக்கு ஆறுதல் கூறி ஆற்றுவிக்கும் தோழி, பாசறையிலிருந்து ஏங்கும் தலைவன், வினைமுற்றி மீளும்போது தேர்ப்பாகனுக்குக் கூறும் தலைவன் ஆகியோர் முல்லைக் கலியில் இடம்பெறுவ தில்லை. இது பிற முல்லைத் திணைப் பாடல்களின் மரபிற்கு மாறுபட்டதாகும். முல்லைச் சமுதாய மக்களின் காதலொழுக்கங்களைக் காட்டுவதாகவே முல்லைக்கலி அமைந்துள்ளது.

பிற இலக்கிய முல்லைப் பாடல்களில் தலைமக்களே தலைவர்களாக உள்ளனர். அவர்களுள் பெரும்பான்மை யோர் போர்வீரர்களாகவும் தானைத் தலைவர்களாகவும் குறுநில மன்னர்களாகவும் விளங்கினார்கள்.

முல்லைக்கலியில் மட்டும் பொதுமக்களாகிய ஆயர்கள் தலைமக்களாய் இடம்பெற்றுள்ளார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

ஏறு தழுவல், கைக்கிளை உரையாடல், வரைவுடம் பட்டமை, அறத்தொடு நிற்றல், நொதுமலர் வரைவு மாற்றல், ஆகிய காதலாறுகளை முல்லைக்கலி காட்டும் முல்லை வாழ்க்கையில் காண்கிறோம்.

---

3. தமிழ்க் காதல், பக். 413

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏறு தழுவல்

ஆயர்களின் வீரத்தையும் அஞ்சாமையையும் எடுத்துக் காட்டும் ஏறுதழுவல் என்னும் வழக்கத்தை முல்லைக்கலி மட்டுமே விளக்கமாகக் கூறுகிறது. பிற சங்க நூல்களில் கூறப்பெறவில்லை. ஆகவே சங்க இலக்கியத்தில் முல்லைக்கலி புதுமையானது.

பிற சங்க நூல்களில் கூறப்பெறாத ஏறுதழுவல் மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் ஒன்றாகிய ஆசுரம் என்றும், ஆசுரமாவது கொல்லேறு கோடல், திரிபன்றி எய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து மணங்கோடல் என்றும், காளையை அடக்கும் வீரனுக்குக் கன்னிப் பெண்ணை உரியவள் ஆக்கும் ஏறுதழுவுதல் கைக்கிளை(ஒருதலைக் காமம்)யின் பாற்படும் என்றும் கூறுவர்.

ஆனால் ஏறுதழுவுதலை உணர்த்தும் முல்லைக்கலி ஐந்திணை இலக்கியமாய்க் கலித்தொகையுள் அமைந் துள்ளது.

''ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்தம் கொடும்பா டறியாக் குடியிற்'' பிறந்த ஆயமகனும் ஆயமகளுமே முல்லை நிலத்தின் தலைவன் தலைவியர் ஆவர். ஆயமகன் ஆயமகளை மணக்க வேண்டுமானால் அவளுடைய பெற்றோர் போற்றி வளர்த்த காளை மாட்டினைச் சாடிப் பிடித்துத் தழுவி அடக்குதல் வேண்டும். இவ்வழக்கமே ஏறுதழுவுதல் எனப்படும். ஆனால்,

கோளாளர் என்னொப்பர் இல்லென நம்மானுள்
தாளாண்மை கூறும்பொதுவன் நமக்கொருநாள்
கேளாளன் ஆகாமை யில்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண் *(101: 93- 96)*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்றெவன் என்னை எமர்கொடுப்பது அன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்கால் புக்கதென் நெஞ்சு (104: 66- 68)

என்னும் பாடற் பகுதிகள் ஆயமகன் ஏறுதழுவி அடக்குவதற்கு முன்னமே ஆயமகளின் நெஞ்சம் அவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு காதல் கொண்டது—இருவருக்கும் உள்ளப் புணர்ச்சியுண்டு— என்பதைப் புலப்படுத்துகின்றன.

ஏறுகளை, எதிர்த்துப் பொருது அடக்குவதற்கு அஞ்சும் ஆயனை எந்த ஆய்ச்சியும் விரும்பாள்; மறுமையிலும் விரும்பாள். கொல்லேற்றைக் கண்டு கலங்குவதும் ஆய்ச்சியரின் காரிகைத் தோளைக் காமுறுவதும் ஆகிய இவையிரண்டும் ஒருங்கே நிகழவியலாதவை. ஆகவே காதலியின் கவினார் மார்புக்கு இடையே காமுற்று வீழ்வது போல கொல்லேற்றின் கூரிய இருகொம்புகளுக்கிடையே வீழ்ந்து வினைமுடித்து விலையின்றி ஆயமகளைப் பெறுவான் ஆயமகன்.

விலைவேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின் (103: 71- 74)

தொல்லிசை நட்ட பாண்டியன் குடியொடு தோன்றிய தொன்மைக் குடியிற் பிறந்தவர் ஆயர். இவர், எருமைத் திரளையுடைய ஆயர், பசுத்திரளையுடைய ஆயர், ஆட்டினத்தையுடைய ஆயர் என மூவகையினராயிருந்தனர். ஆயர் வாழும் இடம் ஊர், சிற்றூர், பேரூர், சிறுகடி, குறும்பு என்று வழங்கப்படும்.

ஏறுதழுவுதல் நடைபெறுகின்ற இடம் ஒரு பரந்த வெளியாயிருக்கும். அதற்குத் 'தொழுவு' என்று பெயர் அங்கு பிடவம், செங்காந்தள், காயா ஆகிய மலர்களாற் கட்டிய கண்ணியைத் தலையிலே சூடின ஆயர் குழுமியிருப்பர். அவர்களுடன் பகலிலலர்ந்த கண்ணியனும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பைதற்குழலனும் சுவல்மிசைக் கோலசைத்த கையனு மாகிய வினைவல பாங்கினோரும் (வேலையாட்களும்) வந்திருப்பர். தண்ணறும் பிடவமும் தவழ்கொடித் தளவமும் வண்ணவன் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும் ஆகிய பல மலர்கள் நெருங்கும்படி தழையுங் கோதையும் இழையும் என்று சொல்லுகின்ற இவற்றைக் கட்டினராய் அணிந்து ஆயர் குலப் பெண்கள் இருப்பர்; முல்லையரும்பும் மயிற் பீலி முருந்தும் போன்ற பல்லினையும் கனங்குழைக் காதினையும் பெற்றுள்ள அவர்கள் நீலவாடையுடுத்திக் கொண்டு இருப்பர்; அவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள பரண்மேல் இருந்து ஏறுதழுவுதலைப் பார்த்து மகிழ்ச்சியடைவர். ஏறுதழுவுங் கால் பிறர்க்குத் துன்பம் நிகழும் என்னும் வருத்தமில்லாத உள்ளத்தையுடையர் ஆயர். அதனால் ஏற்றைத் தழுவுதலே செயல் என்று தொழுவிலே ஏறுகளைப் புகவிடுவர்.

ஏறுகள்

வெள்ளை, சில்லை, சேய், காரி, குரால், புகர், புள்ளி வெள்ளை ஆகிய ஏறுகளும், பல நிறங்கலந்த ஏறுகளும் தொழுவுக்குள் வரும்.

ஏறுகளின் கொம்புகள் கணிச்சி போல் சீவப் பெற்றிருக்கும். ஊழித் தீ, கணிச்சி, காலன், கூற்றுவன் ஆகியோர் ஊழி முடிவுக் காலத்தில் சேரச் சுழன்று திரியுமாறு போலச் சுழன்று திரிதரும். அவை பல மேகங்கள் திரண்டவை போல முழங்கும். ஆகவே ஏறுகள் சுழலும் தொழு, சிங்கமும் குதிரையும் களிறும் முதலையும் ஒருங்கு திரியும் மலையிடத்தை ஒத்திருக்கும்.

'இவ்வெள்ளை ஏற்றினை அடக்குபவன் முள்ளெயிற் றேரிவளைப் பெறும்' என்றும், 'இக்காரி ஏற்றினைக் கொள்பவன் காரிகையின் கூந்தல் துயில் பெறும்' என்றும், 'குரூஉக்கண் கொலையேறு கொள்வான் பிணை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மானோக்கின் நல்லான் பெறும்' என்றும், 'சிவந்த ஏற்றின் செருக்கு அடக்குபவன் வேயுறழ் மென்தோள் துயில் பெறும்' என்றும், மகட்கொடை நேரும் ஆயர், தத்தம் மகளிரைப் பரண்களின் மேலே ஒப்பித்து நிறுத்துவர். ஏறுகொள்பவரையே இவள் கொள்வாள் என எல்லாருங் கேட்ப அறைதலும் உண்டு. ஏறுகோள் விழாவில் ஏறுதழுவுவார் வருக என ஆயமகளின் சுற்றத்தார் பறை அறைவிப்பர்.

'ஏறுதழுவி இவளைக் கொள்வேன் என்று ஆயமகளின் சுற்றத்தார்க்குக் கூறுக' என்று ஆயமகன் கூறுவான். 'இன்று உடம்போடு என் உயிர் புக்கவளாகிய இவள் யார்' என்று பொதுவன் (ஆயமகன்) பரண் மீதிருக்கும் ஆயமகளைக் கண்டு வியப்படைந்து கேட்டலும் உண்டு!

அப்போது பறை மிக்கொலிக்கும்; பல்வேறு வாத்தியங்கள் முழங்கும். மழை முழக்கென்ன இடியென்ன ஆரவாரம் தோன்றும். சுற்றும் நறுமணப் புகையொடு துகள் எழும்; காளை மாட்டினைத் தழுவினவர்களுக்குக் கொடுத்தற்குரிய கன்னியிளம் பெண்கள் திரண்டு நிற்பர்.

அந்நேரத்தில், மெல்லிணர்க் கொன்றையும் மென் மலர்க் காயாவும் புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங் குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கர்ப்பூவும் ஆகிய பன்மலர்க் கண்ணியைச் சூடிய பொதுவர், நீர்த் துறையிலும் ஆலமரத்தின் கீழும் மராமரத்தின் கீழும் உறையும் தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவிக் காளை மாடுகளை அடக்குவதற்காகத் தொழுவிலே பாய்வர்.

தொழுவத்திலே தம்மீது பாய்ந்து வந்த ஆயரை ஏறுகள் எதிர்த்து நிற்கும். சினமிக்கு அவர்மேலே ஓடும். தம் மேலே சென்ற ஆயரைக் கீழே வீழ்த்தி நீண்ட கொம்புகள் தைக்கும்படிக் குத்தி அவர்கள் தழுவுகின்ற கழுத்திடத்தைத் தழுவக்கொடாது அவரை நீக்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறுத்தும். சில ஏறுகள் பொதுவரை— ஆய வீரரைத்— தெரிந்து தெரிந்து குத்தும்!

'குடர்சோரக் குத்தித் தன் கோடழியக் கொண்டானை அலைத்துத் திரியும் எழிலேறு' வெருவரு மருந்தினாற் புகைக்க அதற்கு வெகுண்டு திரியுங் கொல்களிற்றை ஒத்திருக்கும்!

தன்னைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாகக் குத்திக் கொள்வாரைப் பெறாத சிவந்த ஏறு, குறை நாளாற் பின்சென்று உயிருண்ணுங் கூற்றத்தை (யமனை) ஒக்கும்!

தன் கழுத்திடத்தே தழுவிக்கொண்டு கிடந்தவனோடே பரணின் மேலே தாவிப்பாயும் வெள்ளேறு, பாம்பின் வாயால் சிறிது விழுங்கப்பட்டு அப்பாம்புடனே ஒளியைத் தருகின்ற பால் மதியை ஒக்கும்!

ஆய வீரர்களுடைய மார்பிலே தன் கொம்புகளால் குத்தின செங்காரி ஏற்றின் குருதி தோய்ந்த கொம்பிலே ஆடும் மணிகள், நறாம்பூவினது முகையைச் சூழ்ந்து திரியும் வண்டுகளைப் போன்றிருக்கும்.

காரி ஏறு பொதுவனைச் சாடிக் குடர் சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம், பசுங்கட் கடவுளாகிய உருத்திரன் யமனுடைய நெஞ்சைப் பிளந்து அவனுடைய குடலைக் கூளிக்கார்த்துவானைப் போன்றிருக்கும்!

புகரேறு பொதுவனைக் கோட்டிடைக் கொண்டு குலைப்பது, துரோபதையது கூந்தலைத் தொட்ட துச்சாதனனுடைய நெஞ்சைப் பிளந்து வஞ்சினம் வாய்த்த வீமசேனனைப் போல் தோன்றும்!

பொறி வெள்ளையேறு பொதுவனைச் சாடிக் கொம்பாற் குலைப்பது துரோணரைக் கொன்ற திட்டத்துய்மனைத் தன் தோளால் திருகி வென்ற அசுவத்தாமாவை ஒத்திருக்கும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரண் மீதிருந்து இழிந்து வெள்ளேற்றினது கழுத்திலே பாய்ந்தானைப் பொறாது மேற்சென்று குத்தும் இளங்காரித் தோற்றம், மதி சேர்ந்த அரவினை அது மறைத்த தன்மையை விடுவிக்கும் மாயோனைப் போன்றிருக்கும்! இங்கே ஒரே நேரத்தில் இரண்டு ஏறுகள் பொதுவனை அலைக்கழிப்பது குறிப்பிடத் தக்கது.

தன் மெய்யைத் தழுவுதலைத் தப்பித் தன் முன்னே வீழ்ந்தான் மேற்செல்லாது மீளும் புகரேறு, பொருள் வாளகப் பட்டானை எனக்கு ஒவ்வானென்று வெட்டாமல் மீளும் மீளி மறவனை ஒத்திருக்கும்!

ஆகவே, எழுந்து துகள்
ஏற்றன மார்பு
கவிந்தன மருப்பு
கலங்கினர் பலர் (102: 21- 24)

ஏறுகளும் ஆய வீரர்களும் மாறுபடுகையினாலே, தொழு இருபெரு வேந்தரும் இகலி எதிர்ப்பட்ட பொருகளம் போலும் என்றும், பாடேற்றுக் கொள்பவர், பாய்ந்து மேலூர்பவர், கோடிடை நுழைபவர், ஏறுகொள்ளவல்லே னென்று சாற்றுபவர், ஆகியோருடன் ஏறுகள் பொருது பின்பு எலும்புகள் முறிந்து தசைகளிற்றுப் பரந்தனவாய்க் கிடக்க, ஏற்றின் முழக்கத்தோடே, இசையின் இயம் எழுந்து ஆர்ப்பத் தோன்றிய தொழு, நூற்றுவர் அழியும் படி வில்லையுடைய பாண்டவர் கொன்ற போர்க்களம் போலும் என்றும் குறிக்கப்படுகின்றது.

ஆய வீரர்களைக் குலைத்த எருதுகள் வீமசேனனையும் அசுவத்தாமனையும் போன்றிருந்தன என்றும், ஆயவீரரை வீழ்த்திய ஏறுகள் திரியும் தொழு நூற்றுவரை (கௌரவர்) வென்ற ஐவர் (பாண்டவர்) கொன்ற போர்க்களம் போன்றிருந்தது என்றும் குறிப்பிடப்படுவது எண்ணத் தக்கது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏறுகோள் விழாவில் ஊதுகின்ற குழல் ஆயமகனை ஆயமகளுக்குத் தருதற்கு நன்னிமித்தமாகக் கொள்ளப் பெறும்! அதனால் அதைக் கேட்ட தோழி தலைவனாகிய ஆயமகனிடம் சென்று 'கடாசுக் களிற்றுனுங் கண்ணஞ்சா ஏற்றை விடாது நீ கொள்குவை' எனக் கூறுதலுமுண்டு!

ஆயவீரர்

தெண் கண்ணியையும் திண்ணிய தோளினையும் திறலினது ஒளியையும் மாயப் போர்த் தொழிலினையும் கரிய மேனியையும் துவராடையினையும் உடைய ஆயவீரன் ஏற்றின் நோக்கஞ்சான். கதனஞ்சான்.

ஆயவீரர், பலர் சேர ஆர்ப்பரித்து ஏறுகளின் எதிரெதிர் செல்வர். சென்றவர் ஏறுகளின் கொம்பிடத்தே பிடித்துக் கொண்டும், மார்புறத் தழுவிக் கொண்டும், கழுத்திடத்திலே அடங்கிக் கிடந்தும், இமிலிறப் புல்லியும், தோளுக்கு நடுவே கழுத்தைப் புகவிட்டுப் பிடித்தும், கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக் கொண்டும், ஏறுகளைத் தழுவ முயலுவார்கள்!

சிலர் பரண் மீதிருந்து இறங்கி ஏற்றின் கழுத்தில் பாய்வர்; சிலர் தோள்வலி பணித்த முயற்சியாலே ஏற்றின் மெய்யைத் தழுவித் தான் கொள்ளும் நிலையைத் தப்பி ஏற்றின் முன் வீழ்வர்.

சிலருடைய எலும்புகள் முறிந்து தசைகளற்றுப் போகும்; சிலர் ஏறுகளின் மேல் பாய்ந்து ஊர்வர்; சிலர் ஏறுகளின் கோட்டிடை நுழைவர்; சிலர் ஏறு கொள்ள வல்லேன் என்று சாற்றுவர்.

ஏறுதழுவின ஆயர் தோற்றம்

கொம்புகளோடே சுற்றிக் குடர்களைப் பிணித்த ஏற்றின் முன்னே நின்று ஆடி, அக்குடரை இரண்டு கையாலும் வாங்குபவன், செந்நூற் கழியை ஒருவன் இரண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையிலும் பிடித்திருக்க அந்நூலை முந்நூலாகக் கொள்வானை நிகர்க்கும்!

கோட்டினத்தாயர்மகன் ஏற்றின் கழுத்திலே பாய்ந்து அதற்கிட்ட மாலை போலே அதனைத் தழுவுவான்.

கோவினத்து ஆயர் மகன் ஏற்றின் மேலேயிருந்து ஆடி அடக்கி நீர்த் துறையில் ஓடம் ஊர்வானைப் போல் தோன்றுவான்!

புல்லினத்து ஆயர்மகன் புள்ளி வெள்ளேற்றினது பக்கத்தே திங்களிற் கிடக்கின்ற மறுப்போலே பொருந்திக் கிடப்பான்.

கதழ்விடைக் காரி ஏற்றினைக் கொண்டு அட்டு அதன் மேலே தோன்றி நிற்கும் பொதுவன், கூற்று வனுடைய நெஞ்சைப் பிளந்து உயிரைப் போக்கின இறைவனைப் போல் காட்சியளிப்பான்!

சிவந்த ஏற்றைத் தழுவுங் காயாம்பூங் கண்ணிப் பொதுவன், பகைவர் விட்ட குதிரையின் வாயைப் பிளந்து போட்ட கண்ணன் போல் காணப்படுவான்!

பொதுவர் சிலர் தங்களுடைய தோள்களாலே ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவிக் கழுத்தோடே கிடக் கின்ற குட்டேற்றிடத்தே (இமில்) தோன்றுவர்! தோன்றி ஏற்றினை வருத்துவர்!

இவ்வாறு புலித் திரளும் யானைத் திரளும் தம்முள் பொருதாற் போல் பொருது ஏற்றைத் தழுவிக் கொண்டு பொதுவர் தொழுவை விட்டுப் போவர்.

தொழுவத்தில் ஏற்றின் கொம்பிலிருந்து ஆயமகளின் கூந்தலில் வீழ்ந்த அவனுடைய கண்ணியைத் தெய்வமால் காட்டிற்று இவட்கென நினைத்துப் பொதுவனுக்கே அவளை அடை சூழ்வர்.

ஏறுதழுவின ஆயனைக் கண்டு ஏறுடைய ஆயர் பகையாதலும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொழுவிடத்துத் தழுவிக் கொண்ட ஏறுகளெல்லாம் மேயும் நிலத்தே (மேய்ச்சல்) புகும்!

வியன்புலத்தில் நடக்கும் ஏறுதழுவல்

முல்லைக்கலியில் முதல் ஆறு பாடல்கள் ஏறுதழுவு தலைப் பற்றியதானாலும் இரண்டுவகையான ஏறுதழுவு தலைக் காண்கிறோம்.

முதல் ஐந்து பாடல்களில் கூறப்படும் ஏறுதழுவல் பரந்த வெளியான தொழுவில் நடைபெறுவது. ஆறாவது பாடலில் கூறப்படும் ஏறுதழுவல் தொழுவில்லாமல் வியன்புலத்தில் நடப்பது. தம்முன் தாக்கிக் கொள்ளும் ஏறுகளைப் பிரிக்க முயலும் பொதுவரைக் குத்தும் ஏறுகள்! அவ்வாறு குத்தும் ஏறுகளைத் தழுவும் பொதுவர்!

கறத்தற்கரிய பசுக்களைக் கறத்தற்குரிய கழு என்னும் கருவியையும் (கழுத்தில் கட்டும் கட்டை) சூட்டுக்கோலை யும் இட்டுச் சுருக்கிய தோற்பைகளையும், கறவைக் கலங்கள் வைத்த உறியையும் தூக்கிக் கொண்டு, கொன்றைக் குழலையும் ஆம்பற் குழலையும் ஊதிக் கொண்டு வருகின்ற வழுவிய சொற்களைப் பேசும் கோவலர் வியன்புலத்து வருவர்.

அங்கே சில ஏறுகள் காலாலே வெட்டி நீற்றை எழுப்பும்; சில கோட்டு மண் கொள்ளும்; வேறுசில ஒன்றோடொன்று மாறுபட்டு முழங்கும்; மற்றுச் சில மிக்குப் பாயும். இதனால் அவை களம்புகும் வீரரைப் போன்றிருக்கும். ஒன்றையொன்று கொம்பினால் குத்தித் தாக்கிக் கொள்ளும் ஏறுகள், மேகக் கூட்டத்தை நிகர்த்திருக்கும். போர் செய்யும் ஏறுகளை இரண்டு கூறாக நீங்கும்படி நடுவே சில ஏறுகளைச் செலுத்திப் பசுக்கூட்டத்தோடு புனத்தேற்றித் தத்தம் இனங்களைப் பிரிக்கும் இடையர், பெரிய நிலத்தைப் படைத்தற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்நிலத்தை மறைத்துக் கிடந்த கடலைப் போக்கும் நான்முகனை ஒத்திருப்பர்!

அவரை அவ் ஏறுகள் ஓடும்படி மிதித்து, ஓடாமல் நின்றவரை எதிர் சென்று குத்திச் சாடி உழலை கோத்த மரத்தைப் போல் துளைக்கும்! அவ்வாறு துளைத்த தம்முடைய புண்களினின்றும் சொரிகின்ற குருதியாற் கை பிசைந்து மெய்திமிரிக், கடலுக்குள்ளே பாதவர் தெப்பத்தை ஏறினாற் போல, பொதுவர் ஏற்றைத் தழுவுவர்!

ஏறுகள் தங்களுடைய கொம்பினால் தோண்டிய குடர்களைப் பருந்துகள் எடுத்துக் கொண்டு பறந்து போகும்! அப்போது அவை பருந்தின் வாயினின்றும் தப்பி ஆலமரம், கடப்பமரம் ஆகிய மரங்களின் கொம்புகள் தோறும், மாலைகள் போலத் தொங்கும்!

மேயும் புலத்திலே ஏறுகளைப் பிரித்துச் செலுத்தின தம்முடைய காதலருடைய கையைக் கோத்து இன்பமுற்று ஆயமகளிர் குரவையாடுவர். கொலையேற்றுக் கோடு குறி செய்த பொதுவனுடைய மார்பைப் புகழ்ந்து ஆயத்தார் பாடுவர். மாதர் மகளிரும் மைந்தரும் தாதெரு மன்றத்துக் குரவைக் கூத்தாடுவர். குரவையுள் ஆயமகனையும் ஆயமகளையும் பாராட்டுவர்.

'காதலனைக் கொலையேறு குத்திச் சாடிய புண்ணை முலைவேதினால் ஒற்றி முயங்கிப் பொதிவோம்; தயிர் கடையும் போது பரவிய புள்ளி மேல் கோல்லேறு கொண்டானுடைய குருதி மயக்குறப் புல்லல் எந்தோளிற்கு அழகாகும்; போரேற்றினைக் கண்டு அஞ்சுதலும் ஆய்ச்சியரின் அழகுமிக்க தோளினைக் கண்டு காமுறுதலும் ஓராங்குச் செல்லுதல் இல்லை!

முயங்கிப் பொதிவேம் முயங்கிப் பொதிவேம்
முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்
கொலையேறு சாடிய புண்ணை— எம்கேளே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேல்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லலெம் தோளிற்கு அணியோ— எம்கேளே !
ஆங்கு, போரேற்று அருந்த அஞ்சலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ— எம்கேளே
(106: 34-42)

'மோர் விற்று வரும் எனக்கு, 'இவள் கேள்வன் கொல்லேறு கொண்டான்' என்று ஊரார் புகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்டலாகிய செல்வத்தை எங்கணவன் தருமே!'

குரவைக் கூத்தின் இறுதியில் முறையையைப் பாடித் தெய்வம் பரவி மன்னனை வாழ்த்துவர்.

இவ்வாறு முல்லை வாழ்க்கையில் முக்கிய வழக்கமான ஏறுதழுவலை முல்லைக்கலி விளக்குகிறது.

கைக்கிளை உரையாடல்

முல்லை நில மக்களாகிய ஆயமகன் ஆயமகள் ஆகிய காதலர்களின் உரையாடல்களைத் தொடுத்து நயமாகப் புனைந்து காட்டுவதில் முல்லைக்கலி சிறந்து விளங்குகிறது. முல்லை நிலத்தார் ஆடுமாடுகளை மேய்க்கும் குறும்பர்கள். பரந்த மேய்ச்சுத் தொழிலுக்கு ஏவலாட்களை அமர்த்திக் கொள்வார்கள். அந்தக் குறுந் தொழிலாளிகளைத் தலைமக்களாகக் கொண்டு பாடிய பாடல்களைக் கொண்டு விளங்குவது முல்லைக்கலியின் தனிச் சிறப்பாகும் [4]

மோர் விற்று விட்டு ஊருக்குத் திரும்பி வரும் ஆயமகளைச் சந்திக்கிறான் ஆயமகன். இடையிடையே

---

4. தமிழ்க் காதல், பக். 414

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்தித்தும் கூடியும் மகிழ்ந்த காதலர்கள் அவர்கள். அவர்களிடையே நிகழும் உரையாடல்: (கலி, 108)

'அல்குல், தோள், கண் என்னும் மூவழிப் பெருகி, நுதல், அடி, இடை என்னும் மூவழிச் சிறுகிக் காமனும் சோர்ந்து போதற்குக் காரணமான உடல் வனப்பைப் பெற்றுள்ள ஆயமகளே! நீ மோரை விற்றுவிட்டு மீளுங் காலத்தில் நகைப்பதில் யானே வல்லேன் என்று நகைத்துக் கண்ணாகிய அம்பை என்மீது எய்து என்னுயிர் உடலை விட்டு நீங்கும்படி செய்தவளே, உனக்கு யான் செய்த பிழை என்ன?'

'மோர் விற்று வருவதில் என்ன அவலம் இருக்கிறது? என் பெற்றோர் ஆயர்; ஆதலால் மோர் விற்று வருகிறேன். ஆனிரையின் முன் கோலூன்றி நிற்கும் நீ ஆயன் அல்லையோ? ஞாயிற்றுத் தேவனின் மகனோ?'

'உன்னுடைய முல்லை போன்ற பல்லும் பணைத் தோளும் கண்ணும் 'நல்லவன் யான்' என்று நம்புகின்றன. இருந்தும் நீ ஏதும் அறியாதவள் போலப் பேசுகின்றாய். அதனால் உன்னோடு பேசவராமல் திற்கின்றேன்.'

'அப்படியானால் ஒன்றும் சொல்ல வேண்டாம்'

'உன்னைப் போகவிடாமல் தடுப்பேன்'

'இதுவென்ன அல்லல்? நீதான் பண்டம் வினாவிய தன்மையைப் போலத் தொட வருகின்றாய்! உன்னிடத் தில் நான் கொண்டதுதான் என்ன?

'கொண்டது என்னவென்று நீ அறியாயா? மாவடு போன்ற உன் கண்ணால் என் நெஞ்சைக் களவாடி வைத்திருக்கிறாயே?'

'உன் நெஞ்சம் எனக்கு எதற்குப் பயன்படும்? அது புனத்திலுள்ள என் தந்தைக்கு உணவு கொண்டு செல்லுமோ? ஆவினத்துடனிருக்கிற என் தமையனுக்குக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கறவைக் கலம் கொண்டு போகுமோ? தினை வயலுள் என் தாய்விட்டிருக்கும் கன்றை மேய்க்குமோ?'

'என் நெஞ்சு நீ ஏவின தொழில்களைச் செய்யும்! பேரழகு வாய்ந்தவளே! ஊர் அண்மையிலிருப்பதால் இந்த வெயிலோடு ஊர் செல்ல வேண்டுமா? பக்கத்திலுள்ள அழகிய சுனையில் நீராடிச் சிறிது நேரம் என்னோடு பொழிலிலே தங்கி இருந்து பொழுது சாய்ந்த பின் ஊருக்குச் செல்வாய்!

'இனி நான் போகின்றேன்! உன் சொற்களிலே மயங்கு வோர்க்கு அவைகளைச் சொல்! பசுக்களின் பின் நிரியும் ஏற்றைப் போல ஒரு நாளில் பத்துப் பேரைக் காமுற்றுச் செல்பவன் நீ!

'அழகில் உன்னைவிடச் சிறந்தார் நிலவுலகில் இல்லை என்னருகில் வா, திருமாலின் சேவடியை என் தலையினால் தொட்டுச் சூளுரைப்பேன்!

'உன்னைப் பற்றி அறியாதவரே உன்னுடன் வருவர். ஆயர் வேந்தூட்டுச் செய்யும் பொழுதில் நின் பெண்டிர் காணாமலும் கேளாமலும் தாதொரு மன்றத்தில் காஞ்சி மரத்தின் கீழ் ஆம்பற் குழலிசைத்துக் குறி செய்து வருவாயாக!'

ஃ ஃ ஃ

வெண்ணெய் விற்கச் சென்ற ஆய மகளின் மெய் தீண்டித் தன் ஆற்றாமையை அறிவிக்கிறான் ஆயமகன். அவனுக்கும் அவன் விருப்பத்தை ஏற்றுக் கொண்ட அவளுக்கும் நிகழும் உரையாடல் (கலி. 110)

'ஆட்டிடையருடைய மகளிரை யெல்லாம் விரும்பும் உன் வேட்கை என்ன தேள்கடி மருந்தோ? உன்னோடு நகையாட நினைந்து மெய் தொட இசைவு தந்தால், அது வாயிலாக எம்மைக் கூடி மகிழ்தற்கும் எளியவள் என நினைத்தாயோ? மோரினை எளிதாகக் கொடுத்தாள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே வெண்ணெயையும் அங்ஙனமே கொடுப்பாள் என்று கருதிக் கொண்டாயோ?'

'அவ்வாறு நீ கூறினால் என்னை நீங்கிச் செல்க. மத்திலே பிணித்த கயிறு போல உன் நலத்தையே சுற்றிச் சுற்றி என் நெஞ்சம் சுழலும். கன்றையே நினைத்து வருந்தும் சூல் கொண்ட பசுப் போல நின்னைக் கண்டு நாளும் வருந்துகிறது நெஞ்சு! நெய் எடுத்துவிட்ட பாலினைப் போல பயனேதும் இல்லாமல் உன் உள்ளக் கருத்தையறியாமல் வருந்துகின்றேன்.'

'இவ்வாறெல்லாம் சொல்வதானால் இவ்விடத்தை விட்டுப் போய் விடுக. எம் சுற்றத்தார் காண்பர். நாளையும் கன்றோடு மேய்ச்சல் நிலத்திற்கு வருவேன்.'

ஃ ஃ ஃ

ஆயமகளை ஆற்றிடைக் கண்டு ஆயமகன் விலக்கி நகையாடி உரையாடுகின்றான். ஆயமகள் தொடங்குகிறாள்! (கலி. 112)

'என்னை வழிமறிக்கும் இவன் யார்? தாமரை மலரைத் தந்த இடையனே, உன்னோடு 'பேசாமல் இரு' என்றனர் சுற்றத்தார். ஆகவே வழியை விட்டு விலகி நில்.'

'அப்படியா? அழகுமிக்க மகளிரைக் கண்டால் போக விடாதே என்று என் சுற்றத்தார் கூறியிருக்கிறார்கள். என் செய்வது?'

'அவ்வாறானால், மகளிரைக் கண்டால் அவர்களுடைய அழகைப் புகழ்ந்து பாட நல்ல முறையைத்தான் கற்பித்திருக்கிறார்கள். அவர்கள் என் பெற்றோரிடம் வந்து கூறுவதுதானே?'

'இந்த உச்சிப் போதில் நீ கன்று மேய்ப்பவளைப் போல வருவதை அறிந்த சுற்றத்தார், அவ்வாறு கூறா விட்டால் எம்மை இகழ்ந்து கைவிட்டவர் ஆகாரோ?'

'ஆமாம் யானும் அறிவேன், வழியை விடு.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விடமாட்டேன். உன் சுற்றத்தார் என்னோடு பேசாமல் இரு என்று சொன்னார்களே தவிர, 'தழுவாமல் இரு' என்று கூறினார்களோ? மெல்ல என்னைத் தழுவிக் கொள்க. நாளும் உன் முள் எயிறு உண்கிறேன்!'

'என் செய்வேன், இவன் கூறியதெல்லாம் உண்மையானால் இவனோடு வாழ்க்கைப் பட்டோம். பொய்யானால் கண்ணும் தோளும் பசலை உறும்.'

ஃஃ ஃஃ ஃஃ

ஆயமகன் ஆயமகளை வழிமறிக்கிறான். சொல்லிலே கடுமையும் உள்ளத்திலே கனிவும் கொண்டு உரையாடுகின்றனர். (கலி. 113)

'அழகிய ஆயமகளே, உன்னால் நான் அடைந்த துன்ப நோய்க்கு உய்யும் வழி உரைத்துச் செல்.'

'பித்தனைப் போல என் முன்னே வழி மறிக்கும் நீயார்? உன்னை நான் அறிந்ததும் இல்லையே.'

'என்னை அறிய வேண்டுமானால் நான் புல்லினத்து ஆயர் மகன்.'

'புல்லினத்து ஆயர் மகன் நீயானால், நல்லினத்து ஆயரன்றே நாங்கள்.'

'இவ்வாறு சிறந்த உன்னோடு சில சொற்கள் கூறின் அது குற்றமோ இல்லை'

'குற்றமேதும் இல்லை. நாளை வருவேன். வழி விடு.'

'விடமாட்டேன். உன்னுடைய வஞ்சனை மொழிகளை உண்மையென்று நம்பி நானோ போக விடுவேன்.'

'காதல் கொள் காமம் கலக்கத்தைச் செய்ய, என் சொற்கள் பொய்யானவை என்பதை எவ்வாறு அறிந்தாய்.'

'இப்போது கூறியவற்றால் உண்மையை அறிந்தேன்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நாம் முன்னர்ப் பலமுறை பொழில் விளையாடியும் அணி செய்தும் வருவதனால் பொழுதோ போயிற்று. மேலும் நேரங் கடத்தாதே.'

'நல்லேறுகளும் பெண் எருமைகளும் பசுக் கூட்டத்தோடு புறப்படுகின்றன. வா, நாமும் செல்வோம்'

ஃ ஃ ஃ

கன்றோடு வந்த ஆயமகளை ஆயமகன் வழி மறிக்கிறான். அவனிடத்தில் அன்பு கொண்ட அவள் அவனை வெறுப்பவள் போலப் பேசுகிறாள். (கலி. 116)

'கன்றினை மேய்க்கத் தோட்டத்திற்குச் செல்லும் என்னை மறிக்கும் நீ யார்? பித்துக் கொண்டாயா? என்னை விடுக.'

'வழி விட மாட்டேன்; பிடிக்க வருவாரைத் தள்ளி விட்டு ஓடும் பெண் எருமைக் கன்றைப் போலப் பார்த்து, வெளியே வந்து சினங்கொள்வாய்.'

'இவ் இடத்தை விட்டு நீங்கு. தன் கன்றைத் தீண்டுபவர் மீது பாய்ந்து செல்லும் தாய்ப்பசுவைப் போல என் தாயாரும் இங்கே வருவார்.'

'தாய் வரினும் வருக; பிறர் வரினும் வருக; நின் அரசனே வந்தாலும் வருக. நின் அன்பு கிடைக்குமானால் எவருக்கும் அஞ்ச மாட்டேன்.'

'என்ன சொல்லியும் நீ கேட்க மாட்டாய்! மழையில் நனையும் ஏறு போல் அசையாது, காம மயக்கத்தில் நிற்கின்றாய். கறவைக் கலத்தோடு நாளைப் புலத்துக்குச் செல்லும்போது அங்கேயும் வருவாயோ, நாண மில்லாதவனே!

ஃ ஃ ஃ

பூக்கொய்து வருகின்ற ஆயமகளை வழியில் நிறுத்திப் பேசுகின்றான் ஆயமகன். அவளும் அவனை விரும்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறாள். இருவரும் காதலுணர்வை மறைத்தவாறு உரையாடுகின்றனர். (கலி. 117)

'ஒளி மிகுந்த மேனியையும் அழகிய மார்பகங்களையும் உடையவளே, உன் கையில் இருப்பதென்ன? சொல்?'

'யானோ இவ்வூர்த் தலைவன் மகள். கையிலிருப்பது பனையோலைப் புட்டில்.'

'புட்டில் என்பது எனக்கும் தெரியும்! புட்டிலுக்குள் இருப்பதென்ன? என் கண்ணில் காட்டுக.'

'நன்றாகப் பார்த்துக் கொள். புட்டிலுள் இருப்பது சிறுமுல்லைப் பூக்கள்.'

'இதுவோ முல்லைப் பூக்கள். பொழுதோ மாலைப் பொழுது. இடமோ யாருமறியாத இருள் சூழ்ந்துள்ளது. செல் என்று உன்னை நான் விடுவேன். ஆனால் நன்மை தீமையறியாத என் அறிவு உன்னை விரும்பும்போது நான் என்ன செய்வேன்.'

இவ் உரையாடல்களை ஒத்த அன்பும் புணர்ச்சி யார்வமும் தோன்ற, வழக்கு நடையிற் கூறப்பட்ட நளினச் சொல்லோட்டங்கள் என்றும்[5] 'குறை யுடையனவே, சிறப்புடையவை அல்ல' என்றும்[6] கூறுவர்.

அறத்தொடு நிற்றல்

ஆயமகனோடு தான் கொண்ட உறவினைக் கூறி ஆயமகள் தோழியை அறத்தொடு நிற்குமாறு வேண்டுகிறாள்.

'சிற்றில் புனையட்டுமா' என்றும், 'கோதை புனைகோ' என்றும், 'தொய்யில் எழுதுகோ' என்றும்,

---

5. தமிழ்க் காதல், பக். 46
6. முல்லைத் திணை, பக். 29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆயமகன் கேட்டதற்கெல்லாம் நான் எதிருக்கு எதிராகச் சொன்ன பதிலைக் கேட்டு அவன் அயர்வுடையன் போலச் சென்று விட்டான். அவனுக்கு ஆயர் மகளிரின் திருமண இயல்பு குறித்து அறிவித்துப் பின், தாய் தந்தையரிடத்தில் இக்களவொழுக்கம் அறியும்படி அறத்தொடு நின்று என் நோயினைப் போக்குவாயாக.' (கலி. 111)

வரைவுடம்பட்டமை

ஆயமகள் தன் களவு வெளிப்பட்டதென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல, 'நம்மவர் நின்னை ஆயமகனுக்கே மணஞ் செய்து கொடுக்க இசைந்தார்,' எனத் தோழி சொல்லி அச்சத்தை நீக்குகிறாள். (கலி. 115)

'தோழி! ஆயமகன் தந்த முல்லைக் கண்ணியைக் கூந்தலிலேயிட்டு முடித்தேன்; அப்பூ வெண்ணெய் தேய்க்க விரித்த கூந்தலோடு செவிலித்தாய் முன்னே வீழ்ந்தது. பிறர் காணாமல் உண்ட கள்ளின் இயல்பை உடம்பிலே தோன்றும் நடுக்கம் உரைத்தாற் போல நான் கரந்த களவொழுக்கமும் கையோடு வெளிப்பட்டு விட்டது! அதனைக் கண்ட செவிலித்தாய் வினவுதலும் சினத்தலும் செய்யாமல் நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டுப் புறம் போனாள். நானும் கானத்துச் சென்று ஒளித்தேன்' என்றாள் ஆயமகள்.

அதுகேட்ட தோழி ஆயமகளை அஞ்சாதே எனத் தேற்றுகிறாள்.

'அப்பூ வீழ்ந்ததற்கு நீ ஏன் அஞ்சுகிறாய்? ஆயமகனின் கண்ணியை நீ சூடியதனால் நம்மவர் உன்னை ஆய மகனுக்கே மணஞ் செய்து தர முடிவு செய்தனர்!

முற்றத்தில் புதுமணலைப் பரப்பித் திருமணமும் நடத்துவர்!'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நொதுமலர் வரைவு மாற்றல்

சுற்றத்தார் வேறொருவனுக்கு ஆயமகளை மணமுடிக்க ஏற்பாடு செய்தனர். அது கண்டு பொறுக்காத ஆயமகள் பிறர் வரைவு மறுத்து ஆயமகன் வரையுமாறு கூறு எனத் தோழிக்குச் சொல்கிறாள்! (கலி. 144)

'தோழி! ஆயமகனாகிய புதல்வன் அழுதனன் என்று சொல்கிறார்களோ அவனுடைய பெற்றோர்? அங்ஙனமானால் என் சுற்றத்தார் என் திருமணத்தை நிகழ்த்தப் போவதை அறிந்தும் 'மதியறியா ஏழை நீ' என்று கேட்டு நகையாடி வருவாய். சொல்லறியாப் பேதை, உனக்கும் இதுதான் நேரும் என்று அவனுக்கு விளக்கமாகக் கூறுவாய். தருமணல் தாழப் பெய்து எருமைப் பெடையோடு செய்யும் பெருமணம் எல்லாம் தனித்தே ஒழிகின்றதே! ஆயர்களிடையில் தம் காதலனாகிய ஆயமகனோடு கூடும் ஒரு மணந்தான் உண்டென்று அறிவானானால் நான் வருந்தக் கைவிட்டிருப்பானா? உலகமே பெறுவதாயினும் ஆயமகளிர் இருமணம் கூடுதல் என்பது இல்லற நெறியன்று.'

வீரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே! (144: 19-21)

இவ்வாறு முல்லைச் சமுதாய மக்களான ஆயமகன், ஆயமகள், அவர்களின் ஏவலாட்கள் ஆகியோரின் காதலொழுக்கங்களைக் கூறுவதாகவே முல்லைக்கலி காட்டும் முல்லை வாழ்க்கை அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டு பத்துப்பாட்டு நூல்களுள் ஐந்தாவ தாகும்.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே

என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தமது மனோன்மணீய நாடகத்தில் புகழ்ந்துள்ளார்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி— மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்னும் பழம்பாடல் பத்துப்பாட்டுகளைப் பற்றிக் கூறுகிறது.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துப்பாட்டுகளுள் முல்லைப்பாட்டும் குறிஞ்சிப் பாட்டும், பட்டினப்பாலையும் அகப்பொருள் பற்றியன; ஏனையவை புறத்திணைக்குரியன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் ஆன நூற்றுமூன்று அடிகளையுடையது. பத்துப்பாட்டிலேயே மிகச் சிறிய அடியளவுடைய இதன் ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்.

முல்லைப்பாட்டின் தலைவி நெஞ்சாற்றுப் படுத்த தனிமையாலே வளை திருத்தியும் மையல் கொண்டும் உயிர்த்தும் பூப் போன்ற கண்கள் பனி முத்துதிர்க்கவும் ஆற்றி நிற்பதால் 'நெஞ்சாற்றுப்படை' என்று இதற்கு வேறொரு பெயருமுண்டு!

முல்லைப்பாட்டு தரும் முல்லை வாழ்க்கையில் ஆற்றி யிருக்கும் தலைவியின் இல்லறவுணர்வும், பாசறை யிலிருக்கும் தலைவனின் கடமையுணர்வும் இடம் பெற்றுள்ளன.

தலைவி ஆற்றியிருத்தல்

போர் வினைமேற் சென்ற (தலைவன்) அரசன், திரும்பி வருவதாகக் கூறிய கார்காலம் தொடங்கியது. கரிய முகில் பெரிய மழையைப் பெய்கிறது. மாலை நேரத்தில் தலைவி துயர் அடைகிறாள். தலைவியை ஆற்றுப் படுத்துவதற்காகப் பெருமுது பெண்டிர் தெய்வத்தை வணங்கி விரிச்சி கேட்டு நிற்கின்றனர். தாய்ப் பசுக்களை எதிர் நோக்கி நிற்கும் கன்றுகளைப் பார்த்து 'இப்பொழுதே வருவர் நும் தாயர்' என்று ஆயமகள் கூறுகிறாள். ஆயமகளுடைய நற்சொல்லின் நன்மையினால் அரசன் விரைவில் வினைமுடித்து வருவார் என்று கூறித் தலைவியைத் தேற்றுகின்றனர். தலைவியோ ஆறுதல் கொள்ளவில்லை; கண்ணீர் விட்டு வருந்து கிறாள்.

முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வங் களைமா யோயெனக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப (19- 23)

பாசறையிலிருக்கும் அரசனிடத்திலே தன் நெஞ்சினைப் போக்கி வருந்துகிறாள். நெஞ்சாற்றுப் படுத்த தனிமை யொடு நீடு நினைந்து தேற்றியும், வளையல் செறித்தும், மயக்கங் கொண்டும் நெட்டுயிர்ப்புக் கொண்டும் ஆற்றாமல் இருப்பது இல்லற நெறிக்கு இழுக்காமென உணர்ந்து நடுங்கி ஆற்றியிருக்கிறாள். எழுநிலை மாடத்தின் கூடல் வாயிலிலே மழைநீர் சொரியும் ஓசை காதில் விழப் படுத்திருக்கிறாள்.

.... காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கியிழை நெகிழ்ந்து (80- 84)

அப்போது பகை வென்று திரும்பும் அரசனது தேரிற் பூட்டிய குதிரைகள் கனைக்கும் ஓசை, அரசன் வரவினையே கருதிக் கிடந்த தலைவியின் செவிகளில் நிறைந்தது!

போர் மேற்சென்ற அரசன் தான் கூறியவாறே போரை முடித்தபின் கார்காலத்தில் வந்து தலைவியின் ஏக்கத் துன்பத்தைப் போக்கினான் என்னும் குறிப்போடு முல்லைப்பாட்டு முடிகிறது!

தலைவனின் கடமையுணர்வு

போர் மேற்சென்ற அரசன் காட்டுப் புதர்களையும் வேட்டுவர் அரண்களையும் அழித்து முட்களை மதிலாக வளைத்துக் கடலைப் போல பாசறை அமைக்கிறான்.

கான்யாறு தழீஇய அகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி (24- 28)

பாசறையில் அரசனுக்குரிய ஈரறைப் பள்ளி, உள்ளரண் முதலியவை அமைக்கப்பட்டுள்ளன. யவனர் இயற்றிய புலித் தொடர்ச் சங்கிலியும் பாவை விளக்கும் உள்ள அந்தப் பள்ளியறையில் அரசன் அமர்ந்திருக்கிறான்.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா நல்லில் (59—62)

முதல்நாள் போரில் யானைகளின் பெரிய துதிக்கைகளை வெட்டி வீழ்த்தி வெற்றியைக் கொடுத்துச் செஞ்சோற்றுக் கடன் முடித்த வீரர்களையும், யானை குதிரைகளையும் எண்ணி உறக்கங்கொள்ளாமல் ஒரு கையை அமளி மேல் வைத்து ஒரு கையினால் முடியைத் தாங்கி நீள நினைந்து இருக்கின்றான்.

ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை (75-79)

முன்னாளிரவு உறங்காது கவலையோடிருந்த அரசன் பின்னாள் பகைவரை வென்று வாகை மாலை சூடி 'விரைவில் தலைவியைக் கூடி மகிழ்வோம்' என்னும் மகிழ்ச்சியில் வெற்றி முரசு முழங்கும் பாசறையில் இருக்கின்றான்! இவ்வாறு வெற்றி பெறுகின்ற வரையிலும் தலைவியின் நினைவு வாராமல் கடமையுணர்வோடு இருந்த அரசன், போரில் வெற்றி பெற்று வினை முடித்த காலத்தே குதிரை பூட்டிய தேரிலேறி விரைந்து வருகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

நெடுநல்வாடை

நெடுநல்வாடை பத்துப்பாட்டு நூல்களுள் ஏழாவ தாகும்.

> ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
> சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
> ஒருபது பாட்டும்

என்று நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரம் பத்துப் பாட்டினைப் பாராட்டுகின்றது. 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை' என்னும் பத்துப்பாட்டு நூல்களைப்பற்றி வரிசைப்படுத்திக் கூறும் பழம்பாடல் 'கோல நெடுநல் வாடை' என்று சிறப்பித்துக் கூறுகின்றது. நெடுநல்வாடை ஆசிரியப் பாவாலமைந்த 188 அடிகளை யுடையது. இதனை இயற்றியவர் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

''நெடுநல்வாடையில் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என அடையாள மாலை கூறப் படுதலால் இது அகப்பாட்டு மரபில் வழுவிப் புறப்பாட்டு ஆயிற்று என்பர். ஆயினும் இக்கால ஆய்வாளர் இதனை அகப்பாட்டு என்றே ஏற்கின்றனர்'' *

---

* தமிழண்ணல், தமிழிலக்கிய வரலாறு, பக். 158

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெடுநல்வாடை என்னும் பெயரில் அமைந்துள்ள 'நெடு' 'நல்' என்னும் இரண்டு அடைமொழிகளும் அரசன், அரசி ஆகியோரின் வேறுபட்ட உள்ளங்களையும் அந்த உள்ளங்களின் உணர்ச்சிகளையும் உணர்த்தி நிற்கின்றன.

வானமெல்லாம் பரவும் வாடைக் காற்றினால் வரும் மழையானது குளிரையும் நடுக்கத்தையும் தருகிறது. அரண்மனையில் பிரிவுத் துன்பத்தில் வாழும் அரசிக்கு வாடைக்காற்று நீண்டகாலம் துன்பம் தருவதாக உள்ளது; ஆனால் பாசறையில் கடமை யுணர்ச்சியோடு வாழும் அரசனுக்கு நல்லதாகவே உள்ளது.

நெடுநல்வாடை, 'பாலை' என்னும் அகத்திணைக்கு உரியது என்று டாக்டர் பூவண்ணன் அவர்களும்[1] 'முல்லைத் திணை சார்ந்தது' என்று டாக்டர் தமிழண்ணல், அவர்களும்[2] கூறுவர். அரசியின் பிரிவாற்றாமை தீரும்படி அரசனுக்கு விரைவில் வெற்றி உண்டாகுக எனக் கொற்றவையைச் செவிலியர் வேண்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இது முல்லைத் திணை சார்ந்த பாடல் எனக் கொள்ளலாம்.

நெடுநல்வாடை காட்டும் முல்லை வாழ்க்கையில், வாடைக் காற்றின் வருத்தத்தால் துன்பப்படுகின்ற மக்கள், அரண்மனையில் வருத்தமுறும் அரசி, பாசறையில் கடமையாற்றும் அரசன், கொற்றவையை வாழ்த்தும் செவிலியர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

துன்புறும் மக்கள்

வையகம் பனிப்பப் புதுமழை பொழிந்த பொய்யா மேகம் சிறியதாகத் தூவ வாடைக்காற்று வீசுகிறது. அது

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, பக். 66
2. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, பக். 159

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குளிரையும் நடுக்கத்தையும் தருகிறது. இடையர்கள் பசுக் கூட்டங்களை வேறு புலம் பரப்பிக் கலங்குகின்றனர். நெருப்பை மூட்டிக் குளிர் காய்கின்றனர். குரங்குகளும் குளிரால் நடுங்குகின்றன. விலங்குகள் மேய்ச்சலுக்குச் செல்வதில்லை. பறவைகள் குளிர் தாங்க முடியாமல் விழுகின்றன. தாய்ப் பசுக்கள் பாலுண்ணவரும் கன்றுகளை உதைத்துத் தள்ளுகின்றன.

நகரத்துப் பெரிய வீதிகளில் குன்றும் குளிர்ந்து போகும்படி வீசும் வாடைக்காற்றுக்கு அஞ்சி மக்கள் நடமாடுவதில்லை. கள் குடித்து மயங்கி உணர்விழந்து செல்லுவோர் மட்டுமே மழைத் தூறலையும் பொருட்படுத்தாது திரிகிறார்கள்.

முடலை யாக்கை முழுமலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயின் திரிதர (32-35)

பகலும் இரவும் ஒரே தன்மையாக வானம் இருண்டு கிடப்பதால், பித்திகையரும்புகள் மலர்வதைக் கண்டு மாலைப் பொழுதை அறிகின்றனர் மகளிர். வீடுகளில் விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி வழிபடுகிறார்கள். வீடுகளில் வாழும் புறாக்கள் வெளியே பறந்து சென்று உணவு தேட முடியாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பதால் கால்களை மாற்றி மாற்றி வைத்து இளைப்பாறுகின்றன. சந்தனக் கட்டையை அரைத்துப் பயன்படுத்துவார் இல்லை. விசிறிகளின் மேல் சிலந்திகள் வலை பின்னிக் கிடக்கின்றன. கூந்தல் மகளிர் கோதை புனையாமல் சில மலர்களையே அணிகின்றனர். நீர்த் துவலை தூவிக் கொண்டிருப்பதனால் தொகுவாய்க் கன்னல் (தண்ணீர்க் கூசா) பயனில்லாமல் இருக்கிறது. குளிர் காய்வதற்குப் பயன்படும் நெருப்புத் தடாக்கள் மட்டும் பயன்படுகின்றன.

இவ்வாறு வாடைக்காற்றினால் துன்புறும் மக்களை நெடுநல்வாடை காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருத்தமுறும் அரசி

நூலறி புலவர் நுண்ணிதின் ஆய்ந்து எடுத்த மண்டபங்களும் வாயில்களும் உயர்நிலைக் கோபுரங்களும் நிறைந்து பெரும் பெயர் மன்னர்களின் புகழுக்கு ஏற்ப அரண்மனை யுள்ளது. மணல் பரப்பப்பட்டுள்ள அதன் முற்றத்தில் அன்னப்பறவையும் கவரிமானும் திரிகின்றன. குதிரைகள் புல்லுணவைத் தெவிட்டுகின்றன. அம்பணத்தில் மழைநீர் விழும் ஓசை அருவி போலக் கேட்கிறது. தோகை மயில்கள் அகவுகின்றன. அவற்றின் இன்னோசை அரண்மனை முழுதும் கேட்கிறது. யவனர் இயற்றிய வினைமாண் பாவை விளக்கிலே பணிப்பெண்கள் நெய்யூற்றி விளக்குகளின் திரிகளைத் தூண்டிவிடுகின்றனர்.

அரசனைத் தவிர ஆடவர் அணுக இயலாத அந்தப்புரத்தில் பாடமை சேக்கைப் பள்ளியறையில் அரசி வீற்றிருக்கிறாள். நாற்புறமும் ஓவிய எழினிகள் கட்டப்பட்ட, தந்தத்தால் ஆன கட்டிலில் அன்னத்தூவியாலான பாயணை போடப்பட்டுள்ளது. அதன்மீது முல்லை மலர்கள் தூவப்பெற்றுள்ளன. இத்தகைய மலர் மஞ்சத்தில் நள்ளிரவில் துணை துறந்து உறக்கம் கொள்ளாமல் கலங்குகிறாள் அரசி. உலறிய கூந்தலையும் மகரக் குழைக்கு மாறாகத் தாளுருவி அழுத்திய காதினையும் பொலந்தொடிக்கு மாறாகச் சங்கு வளையல்கள் பொருந்திய கையினையும் பட்டுத் துகிலுக்கு மாறாக மாசு படிந்த நூலாடையணிந்த இடையினையும் கொண்டு வாடியிருக்கின்ற அவள் புனையா ஓவியம் போலப் பொலிவற்றிருக்கிறாள்.

பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுத லுலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
....
புனையா ஓவியங் கடுப்ப ..... (137-42)

அரசியின் துயர் கண்டு வருந்தி அவளுடைய நல்லடியை மெல்ல வருடியும் அவள் உறங்கவில்லை.

செவிலியர் பொய்ம் மொழியும் நகை மொழியும் உரைத்தும், 'இப்பொழுதே வருவர் நின் துணைவர்' என இன்னுரை பகர்ந்தும், அரசியின் உள்ளத்தில் அமைதி ஏற்படவில்லை. கட்டிலின் விதானத்தில் எழுதியிருந்த உரோகிணி ஓவியத்தை நோக்கி நினைந்து பெருமூச்சுவிடு கின்றாள்! கடைக்கண்களிலே திரளுகின்ற கண்ணீர்த் துளிகளைச் செவ்விரல் நுனியால் எடுத்துத் தெறித்துத் துடைத்துத் துன்புறுகின்றாள்.

இவ்வாறு இல்லிருந்து ஆற்றியிருக்கும் அரசி வாடைக் காற்றினால் துன்புறுகின்றாள்.

பாசறையில் தலைவன்

போர் மேற் சென்ற அரசன், பாசறையில் நள்ளிரவி லும் உறக்கம் கொள்ளாமல் விழித்திருக்கிறான். போரில் புண்பட்ட யானைகளையும் குதிரைகளையும் நெருங்கிச் சென்று தடவிக் கொடுத்து அன்பு செலுத்தித் தேற்ற முயல்கிறான். மறவரையெல்லாம் பார்த்து ஆறுதல் கூறுகிறான். அதற்காக வேலைத் தாங்கிய வீரன் வழி காட்ட அரசன் வெளியே செல்லும்போது, வாடைக் காற்றால் அலைந்து சரியும் மேலாடையை அவனுடைய இடக்கை பற்றித் தழுவிக்கொள்கிறது. வலக்கையோ புண்பட்ட வாள் வீரன் ஒருவனுடைய தோள் மேல் அமைந்து அவனுக்கு ஆறுதல் அளிக்கிறது.

இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீ முங்துகி லிடவயின் தழீஇ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாள்தோட் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து (180-183)

பாசறையில் உள்ள விளக்கின் பெரிய சுடர் தெற்குப் பக்கமாகச் சாயுமாறு, மழைத் தூவலும் வாடைக் காற்றும் கலந்து அரசனுடைய குடையைத் தாக்கித் 'தவ்' என்னும் ஒலியை உண்டாக்குகிறது. இவற்றைப் பொருட் படுத்தாமல் கடமையிலேயே விழிப்போடு இருக்கிறான் அரசன்.

கடமை முடிகின்ற வரையில் அரசியின் மீதுள்ள 'காதல் மறந்து இருத்தலாகிய' முல்லை வாழ்க்கையை மேற்கொண்டுள்ளான் அரசன் எனலாம்.

கொற்றவையை வாழ்த்தும் செவிலியர்

அரசன் போர்க்களத்துப் பாசறையில் இருக்கின்றான். அரசி அவனுடைய பிரிவால் துயருற்று அரண்மனையில் வாடுகிறாள். வாடுகின்ற அரசியின் துயரைத் தீர்ப்பதற்குச் செவிலியர் பொய்ம்மொழியும் நகைமொழி யும் உரைத்தும், 'இன்னே வருவர் நின் துணைவர்' என நல்லுரை நவின்றும் ஆறுதல் கூறுகின்றனர்.

செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவ ரின்றுணை யோரென
உகத்தகை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து (153-56)

அதனால் ஒரு பலனும் இல்லை. அரசியின் உள்ளத்தில் ஆறுதல் ஏற்படவில்லை. உரோகிணியைப் போலக் காதலனைப் பிரியாமல் வாழ இயலவில்லையே என்று பெருமூச்சு விடுகிறாள். கடைக்கண்ணில் தோன்றும் கண்ணீர்த் துளிகளைப் பிறர்காண நேரின் தன் இல்லற நெறிக்கு— இல்லிருத்தலாகிய முல்லையொழுக்கத்திற்கு— இழுக்காகுமே என எண்ணியவளாய்த் தன் செவ்விரல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நுனியால் கண்ணீர்த் துளிகளைத் தெறித்து விடுகிறாள். இப்படிப்பட்ட இவளுடைய தனிமைத் துன்பம் நீங்குமாறு, செவிலியர் கொற்றவையை வாழ்த்து கிறார்கள்.

'போர்க்களத்தில் அமைந்துள்ள பாசறையில் தன் கடமையை உயிராகக் கொண்டு அதிலேயே முழுமையும் ஈடுபட்டுள்ள அரசன் விரைவில் வெற்றி பெற்று மீளுமாறு அருளவேண்டும்' என்று கொற்றவையை வேண்டுகிறார் கள்.

செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில் லம்ம .....
....
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே
(165-68; 186-88)

இல்லிருந்து ஆற்றாமையால் வருந்தும் அரசியின் வருத்தத்தைப் போக்கிக் கொற்றவையை வாழ்த்தும் முறையில் செவிலியர் வாழ்க்கை அமைந்துள்ளது.

7962

FORWARDED FREE OF COST; AND WITH
THE COMPLIMENTS OF THE DEPARTMENT OF
EDUCATION; GOVERNMENT OF INDIA, NEW DELHI

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முல்லைப்பூ சொற்களால்

மோகனச் சொற்களால்

அந்திவானத்தைப் போல் அழகுபட

எழுதிக் காட்டுகின்ற

ஆற்றல் படைத்தவராக இருக்கிற

டாக்டர் ஆறுமுகம் ஆழமான தமிழறிஞர்.

வித்தகச் சொற்கள் விளக்கம் பெறுகிற

விதத்தில் புத்தமுதாக வடிக்கிற

புகழுக்கு உரியவர்

வலம்புரி ஜான்

புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி மையத் தமிழியல் துறை
'தேடல்' வரிசை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar